# “கலைஞர்”





## அமரர்.
# இராசகேசரி அரசகேசரி
(விஷவைத்தியர், ஓய்வுநிலை பாடசாலை பதிவாளர்)

## அவர்களின் 31ம் நாள் நினைவுமலர்

**03-02-2022**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பெறுதற்கரிய பிறவியாம்

மனிதப்பிறவி யெடுத்து

இம்மண்ணுலகில் பிறந்து

அன்பின் திருவுருவாய்

அறிவின் ஒளிவிளக்காய்

கலைகளின் வளர்ப்பிடமாய்

சேவையின் சிகரமாய்

பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து

உற்றார் உறவினர்களுக்கு அறிவூட்டி வளர்த்து

இறைவனது பொற்பாத கமலங்களை ஏய்கிய

**அமரர்.இரா. அரசசேகரி** அவர்களுடைய

31ம் நாளினை நினைவு கூர்ந்தும்

எமது அன்புத் தாயாராகிய

அரசகேசரி இராஜேஸ்வரி அவர்களுடைய

4ம் ஆண்டு நிறைவை

நினைவு கூர்ந்தும் எம் அன்புத்தெய்வங்களின்

தூய நல் ஆத்மாக்கள்

இறைவன் திருவடி நிழலில் நித்தியமாய் அமைதி பெற

அவர்தம் பொற்பாதங்களுக்கு இம்மலரை காணிக்கையாக

சமர்ப்பணம் செய்கின்றோம்.


— குடும்பத்தினர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பிள்ளையார் துதிபாடல் | 01 |
| சக்தி மாலை | 02 |
| தேவாரங்கள் | 03-16 |
| இரா. அரசகேசரி அவர்களின் வாழ்க்கை வரலாறு | 17-25 |
| திருமதி. அரசகேசரி அவாகளின் வாழ்க்கை வரலாறு | 26-28 |
| பெற்ற விருதுகள் | |
| கண்ணகி அம்மன் காவடிச்சிந்து | 29-32 |
| சனீஸ்வரர் காவடிச்சிந்து | 33-36 |
| அமரரால் இயற்றப்பட்ட பஜனை பாடல் | 37 |
| அமரரால் இயற்றப்பட்ட வைரவர் அகவல் | 38 |
| சிவபுராணம் | 39-42 |
| திருப்பொற்சுண்ணம் | 43-48 |
| விநாயகர் அகவல் | 49-51 |
| சரஸ்வதி புகழ் | 52-54 |
| சகலகலாவல்லி மாலை | 55-56 |
| மாரியம்மன் தவநிலை | 57-63 |
| மாரியம்மன் அகவல் | 64-69 |
| மாரியம்மன் காவியம் | 70-73 |
| வயிரவர் துதி | 74 |
| வைரவர் அகவல் | 75-76 |
| வைரவர் காவியம் | 77-79 |
| நாகதம்பிரான் பிரார்த்தனை | 80 |
| நாகதம்பிரான் காவியம் | 81-84 |
| இரங்கல் செய்திகள் | 85-132 |
| பதாதைகள் | 133-136 |
| வம்சவிருட்சம் | 137 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு:
1942-09-22

உதிர்வு:
2022-01-04

கலாபூசணம்

# இராசகேசரி அரசகேசரி


(விஷவைத்தியர், ஓய்வுநிலை பாடசாலை பதிவாளர்)

## திதி வெண்பா

"பிலவ வருடம் ஜனவரி நான்கில்
நிலவுவளர் நற்துதியைத் திதியில் - பலவான்
களுவாஞ்சி யீன்ற அரசகேசரி அண்ணல்
தழுவினார் ஆனைமுகன் தாழ்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

இறைதுதிப்பாக்கள்



# பிள்ளையார் துதிப்பாடல்கள்

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடி தனதடி வழிபடும் அவரிடச்
கடி கணபதிவர அருளினன் மிகுகொண்ட
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையை காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்து பிள்ளையைப் பேணுவாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி மாலை

வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

தனந்தரும் கல்வி தருமொரு நாளாந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிசந் தரு நெஞ்சில் வஞ்ச மில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபிராமி கடைக் கண்களே

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத் தொழு வார்க்கொரு தீங்கில்லையே

ஆயகலைகள் அறுபத்துநானகினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு பேல்வாளென் னுள்ளத்தில் னுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

படிக நிறமும் பவளச்செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் மனவரத முந்துசித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவ.

தஞ்சமென்று கெஞ்சி நின்றோம் சரஸ்வதித்தாயே
சரஸ்வதித் தாயே எங்கள் நாவில் வாணியே
நாவில் வந்து சேவை செய்வாய் லோகநாயகி
லோகநாயகி எங்கள் விஸ்வநாயகி
அண்டமெல்லாம் புகழச்செய்வாய் மங்கல வாணி
மங்கலவாணி வரம் தந்தருள்வாயே
நித்தம் உனை வேண்டி வரமனம் நினைக்கின்றோமம்மா
நினைக்கின்றோமம்மா உன்னை அழைக்கின்றோமம்மா

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணத்தொகுப்பு

## திங்கட்கிழமை

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் : நட்டபாடை
தாளம் : ரூபகம்
இராகம் : நாட்டை

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்விதிர்த்(து)
உன்விரையார் கழற்(கு) என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்(து) உன்னைப்போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உடைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு
கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமோடவல்பொரி
கப்பிய கரி முகன் அடிபேணிக்
கற்றிடும்அடியவர் புத்தியுலுறைபவர்
கற்பகமென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமிபுதல்வனை
மட்டவிள் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்படஎழுதிய முதல்வோனே
முப்புரமெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடைஇபமாகி
அக்குற மகளுடன் அச்சிறுமுருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கிழமை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் : தக்கேசி

தாளம் : ஆதி

இராகம் : காம்போதி

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

ஆலம் தானுகந்து அமுதுசெய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலம் தான் பெரிதும் உடையானை
சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனை கம்பனெம்மானை
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

## திருவாசகம்

யானே பொய்என் நெஞ்சும்பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்உனை வந்(து) உறுமாறே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவா மனமணி விளக்கைச்
சென்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன்வேண்டிஅழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்செய்தவன் மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகி பலகாலும்
எந்தனுயிர்க் காதவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருட்கைக் கனியோனே
அன்பர்தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன் கிழமை

திருநாவக்கரசர் சுவாமிகள் தேவாரம்

பண் : திருக்குறுந்தொகை
தாளம் : மிஸ்ரசாபு
இராகம் : மாயாமாளவகௌளை

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பபிறவியே.

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்(கு) அரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்(டு) என்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ.

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங்கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார்அமரர் குழாத்தில்அணியடைஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கம்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில்ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணனால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

அபராத நிந்தைபட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நானினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுந் தமிபாலா
ஜெபமாலை தந்தசற்குருநாதா
திருவாவினன்குடிப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமை

திருநாவக்கரசர் சுவாமிகள் தேவாரம்

பண் : சாதாரி
தாளம் : ரூபகம்
இராகம் : பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனை
தலையே நீ வணங்காய்

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்(று) இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்(து) அரசே
திருப்பெருந் துறைஉறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருள்இலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்(று) அருள்புரி யாயே.

## திருவிசைப்பா

பத்தியாய் உணர்வோர் அருளை வாய் மடுத்துப்
பருகுதோறமுதமொத்தவர்க்கே
தித்தியாயிருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சக்தியாய்ச் சிவமாய்உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய அதற்கோர்
சித்துமாய் ஆருர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்மெய்யடியார்கள்
விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின்
குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த
வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலாஅளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றய பொருளும்ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடுசூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியைமனங்கவர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலமமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

திருஞானசம்பந்தர்மூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் : இத்தளம் இராகம் : மாயாமாளவகௌளை

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

சடையா யெனுமால் சரண் நீ எனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்(கு) எழுந்தருளுவ(து) இனியே.

## திருவிசைப்பா

இடர்கெடுத்தன்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம்பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற்சோதியுட் சோதி
அடல்விடைப் பாகாஅம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமாபணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இயலிசையில் உசிதவஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனதுசிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனதுளறியுமன்பைத் தருவாயே
மயில்தகர்கலிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுறமகளை வந்தித் தணைவோனே
கயிலைமலையனைய செந்திற்பதி வாழ்வே
கரிமுகவனிளைய கந்தப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமை

திருஞானசம்பந்தர்மூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் : கௌசிகம்

தாளம் : ஆதி

இராகம் : பைரவி

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மேயப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

## திருவாசகம்

பால்நினைஙந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்(பு) இலா ஆனந்தம் ஆய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத்
தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்
மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய
தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு
கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள்
செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துளாடும் சேவடி
போற்றி என்ன

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தான மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தானசற்குணநேயா
ஒப்பிலா மாமணிக்கிரிவாசா
வித்தகா ஞானசத்தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிற்றுக்கிழமை

திருஞானசம்பந்தர்மூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் : இத்தளம்

தாளம் : ரூபகம்

இராகம் : மாயாமாளவகௌளை

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துனை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனிஅல்லேன் எனலாமே.

## திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானேவந்(து) என(து) உள்ளம புகுந்(து)
அடியேற்(கு) அருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஓறுத்து
அன்றே வெறுத்திடவே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

அகரமுமாகி அதிபனுமாகி
அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி
அரனெனவாகி அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி
இனிமையுமாகி வருவோனே
இருநிலமீதில்எளியனும் வாழ
எனது முன்னோடி வரவேணும்
மகபதியாகி மருவும்வலாரி
மகிழ்களிகூரும் வடிவோனே
வனமுறைவேடன ருளியபூசை
மகிழ்கதிகாமம் உடையோனே
செககணசேகு தகுதிமிதோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை
மலைமிசைமேவு பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர்
# அமரர். திரு. இரா. அரசகேசரி அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு

பட்டணக்குடி மரபினையும் களுவாஞ்சிகுடி மணல் வீதியையும் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்தங்கம், தெய்வானை, மரகதம் என்ற மூன்றுசகோதரிகள் வாழ்ந்து வந்தார்கள். இதில் மூத்த சகோதரியே செல்லத்தங்கம் ஆவார். இவரை இவரது பெற்றோர் திருப்பழுகாமத்தைப் பிறப்பிமாகவும் அத்தியாகுடி மரபினையுடைய வருமான இளையதம்பி(உபாத்தியார் வைத்தியர், சோதிடர், மாந்திரீக வித்தையெல்லாம் படித்தவர்) அவர்களை திருமணம் செய்து வைத்தார்கள், இவர்கள் நல்லறவாழ்வில் மட்டுமல்லாது இல்லறவாழ்விலும இன்பங்கண்டு புவனகேசரி, இராசம்மா, நல்லம்மா, இராசகேசரி தம்பிப்பிள்ளை என மூன்று புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் பெற்றெடுத்தனர்.

இளையதம்பி உபாத்தியாயர் அவர்கள் காலக்கியாணம் படித்தவர். நாடுகாடாகும். காடு நாடாகும் என்றெல்லாம் எதிர்வு கூறியவர். ஒரு முனிவருக்கு சமமானவரென்றே கூறலாம். இவருடைய மக்கள் பேரன்மார், பேத்திமார் எல்லாம் கவிதை புனைவதும் பாடல்கள் பாடுவதும், பாட்டுக்குப்பொருள் கூறுவதும், வைத்தியம் செய்வதும், சோதிடம் பார்ப்பதும் இளையதம்பி உபாத்தியாயருக்கு பெருமைகள் சேர்க்கும் விடையங்களன்றோ, அன்னார் 1949ம் ஆண்டு இறைபதம் அடைந்தார்.

பெரிய கவுத்தன் மரபினையும் களுவாஞ்சிகுடி மணல் வீதியையும் பிறப்பிமாகவும் கொண்ட செல்லத்தங்கம் கோபாலபிள்ளை என்பவர்களுக்கு முத்தம்மா, அழகம்மா, பரஞ்சோதி, பாக்கியராசா எனும் மூன்று பெண்பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருந்தார்கள். இவர்கள் குடும்பம் நல்ல இறைபக்தி கொண்டவர்களாகவும், ஒழுக்க முள்ளவர்களாகவும் திகழ்ந்து விளங்கினார்கள். இக்குடும்பத்தின் முதலாவது மகள் முத்தம்மா அவர்கள் திருமண பருவத்தை அடைந்ததும் திருமணம் பேசலானார்கள். அவர்களுடைய மணல் வீதியிலே வசித்துவந்த இளையதம்பி உபாத்தியாரின் நான்காவது மகன் இராசகேசரி என்பவரை திருமணம் பேசி இனிதே திருமணம் செய்து வைத்தார்கள். இளவயதிலிருந்தே துடிப்புடனும், சிறப்புடனும், இத்தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தம்பதிகளின் இல்லறவாழ்வின் பயனால் சரஸ்வதி,அரசகேசரி, ஏரம்பமூர்த்தி, முத்துலெட்சுமி, அருள்கேசரி, யோகேஸ்வரி என்போர் பிறந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும்காலத்திலே தகப்பனார் வைத்தியர் இராசகேசரி அவர்கள் இறையடி சேர்ந்து விட்டார். குடும்பச்சுமையை முத்தம்மா அம்மம்மா அவர்கள் வைத்தியத் தொழிலில் ஈடுபடலானார்கள். முத்தம்மா அம்மம்மாவும் வைத்தியத்தொழிலிலை சிறப்பாக நடாத்தி வரலானார்கள்.

1942ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ம் திகதி அவதரித்த அரசகேசரி அவர்கள் மட் / பட்டிருப்பு ம.ம.வி.பாடசாலையில் GCE பரீட்சையில் சித்தியடைந்து 1959ம் ஆண்டு மட் / பட்டிருப்பு ம.ம.வி.பாடசாலையில் ஓர் அமைய ஊழியனாக சேர்ந்து உழைத்தார். அரசகேசரி சீனியப்பா வைத்தியம், விஷ வைத்தியம் போன்றவற்றை கற்றதுடன், கலைகலாசாரம், ஆத்மீகம் கல்வி போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு அதனைச் செயற்படுத்தலானார்.

இவர்களது குடும்பத்திற்கு இவரது மாமனார் திரு.கோபாலபிள்ளை பாக்கியராசா அவாகள் உறுதுணையாக இருந்து ஆலோசனைகள் வழங்கி மருமக்களை அன்போடு வழிநடத்தி வந்தார். மருமக்கள்மாரும் மாமனார், மாமியாரின் கட்டுப்பாட்டுக்குள் அவரை மதித்து அவருக்கு கீழ்படிந்து வாழ்ந்து வந்தார். இவரது மாமா திரு. பாக்கியராசா அவர்கள் ஓர் அரசாங்க உத்தியோகத்தவராகவும், சமாதான நீதிவானாகவும் விளங்கியதோடு களுவாஞ்சிகுடியின் கவுத்தன் குடி மரபு வழி கிராமத்தலைவராகவும், முகாமை ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும் விளங்கினார். கிராமத்தில் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றார்.

அரசகேசரி சீனியப்பா சிறுவயதிலிருந்து பலதுறைகளிலும் ஈடுபாடு கொண்டு 1963ம் ஆண்டு தனது கலைப்பயணத்தில் காலடி எடுத்து வைத்தார். இக்கலைத்துறையில் பாடசாலையில் வேலை செய்யும் காலத்திலிருந்து நாடகங்களில் நடிக்கலானார். இதன்மூலம் எழுத ஆர்வம் மேலோங்கியது. நாடகம், நாட்டுக்கூத்து, கும்மி,கரகம், வில்லுப்பாட்டு போன்றவற்றை காலத்திற்கு காலம் எழுதி இயக்கி தானும் ஒரு பாத்திரத்தில் பங்கேற்று மேடையேற்றி கலை கலாசார துறையை மேம்படுத்தலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்களுக்கு போட்டி, நிகழ்வுகளும் பேச்சு, கவிதை, வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல் என்பவற்றை எழுதி வழங்குவதோடு பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களது உயர்படிப்புக்கு தேவையான ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கு தேவையான தகவல்கள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் வழங்கி அவர்களது செயற்பாட்டிற்கு ஊக்கம் கொடுத்தார்.

அரசகேசரி சீனியப்பா வாலிபப்பருவம் அடைந்ததும் அவருக்கு உற்றார் உறவினர்கள் திருமணம் செய்து கொடுக்க தீர்மானித்தார்கள். அவருக்கு களுவாஞ்சிகுடி வைத்தியனார் மரபுவழியில் குருசாமி - கனகம்மா தம்பதிகளின் ஆறாவது புதல்வியான இராஜேஸ்வரி அவர்களை திருமணம் பேசலானார்கள். (இராஜேஸ்வரியின் சகோதரிகளை வம்சவிருத்தி அட்டவணையில் காண்க) இருவருக்கும் பொருத்தம் பொருந்தியதால் இருவீட்டார் சம்மதத்தோடு 1970ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம்திகதி பதிவுத்திருமணம் நிறைவேறியது. இவர்களது குடும்பச்சுமை இடம் கொடுக்காததனால் பின்னர் 1973ம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்தார்கள். இவர்களது திருமணம் முறைப்படி ஊருக்குச் சொல்லிசிறப்பாக நடாத்தினார்கள்.

திருமதி. சபாரெத்தினம் தங்கேஸ்வரி அவர்களும் நானும் ஊருக்கு வெற்றிலை பாக்கு வைத்து சொல்லச் சென்றோம் என்பது குறிப்பிடத்தக்கது. கணவனுக்கேற்ற மனைவியாக கணவனின் அன்புக்கு கட்டுப்பட்டு கணவனின் சொற்கேட்டு இல்லறத்தை நல்லறமாக அன்போடு நடாத்தி வந்தார்கள். கணவனோடு விஷவைத்தியம், கலை, கலாசாரம், கல்வி, ஆத்மீகம் போன்ற சேவைகளை செய்வதற்கு முழுமூச்சாக இருந்து உதவிகள் நல்கினார்கள். இல்லறவாழ்வில் சங்கமித்த இவர்களுக்கு கவிதா, லலிதா, கீர்த்திகா என்றமூன்று பெண்பிள்ளைகளும் அகிலன் என்னும் ஆண் பிள்ளைக்கும் தந்தையாகவும் இருந்து வாழ்க்கையை ஓட்டினார்கள்.

பிள்ளைகள் படித்து கா.பொ.த உயர்தரம் சித்தியடைந்தார்கள். பின்னர் லலிதா கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான (BSC) பட்டதாரியானார், கீர்த்திகா வெளிவாரி BA பட்டதாரி ஆனார். பிள்ளைகள் அழகிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் திருமண வயதை அடைந்ததும் மூத்த மகள் கவிதாவிற்கு கவுத்தன்குடி மரபைச் சேர்ந்த திரு. பொ.மோகன் என்பவரையும் லலிதாவிற்கு கவுத்தன்குடியைச் சேர்ந்த திரு. சோ. சிவாகரன் என்பவரையும் கீர்த்திகாவிற்கு கவுத்தன் குடியைச் சேர்ந்த திரு.வ.விவாகரன் அவர்களையும், அகிலனுக்கு கவுத்தன் குடியைச் சேர்ந்த க.தர்ஷனா என்பவரையும் மணமக்களாக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது லலிதா-சிவாகரன் லண்டனிலும் கீர்த்திகா-விவாகரன் ஆகியோருர் லண்டனிலும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள். கவிதா-மோகன், அகிலன் - தர்ஷனா ஊரிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது இவர்களுக்கு எட்டு பேரப்பிள்ளைகள். அவற்றில் பேரப்பிள்ளைகளான சஞ்சிகா, அக்ஷயன், கோபிஷன், ஆகஸ்சன், அதிஷ்டா, ஆதனன் ஆகியோர் லண்டனிலும் கரிஸ்னா, அம்சவி ஆகியோர் களுவாஞ்சிகுடியிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பல நாடகங்கள் கூத்து, மரபுக்கவிதை, கும்மி, பேச்சுக்கள் இவரால் எழுதப்பட்டு பழக்கப்பட்டு போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியதோடு பாராட்டுக்கள், பரிசுகள், வெற்றிக்கேடயங்கள் கிடைக்கப்பெற்றது. சில நாடகங்களில் அரசகேசரி சீனியப்பாவோடு இராஜேஸ்வரி சீனியம்மா அவர்களும் சேர்ந்து நடித்து பாராட்டுக்களை பெற்றிருக்கிறார்கள்.

1963ம் ஆண்டு பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் மன்றம் ஒழுங்கு செய்த விழாவில் "பாஞ்சாலி சபதம்" நாடகத்தில் துரியோதனனாகவும் "மன்னன் மகள்" நாடகத்தில் கீர்த்தி வர்மனாகவும் நடித்துப் பாராட்டை பெற்றார். ம.தெ.எ.பேரவை நடாத்திய நாட்டுக்கூத்து போட்டியில் சிறந்த நடிகர் சிறந்த இயக்குனர் என்னும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டது. பின்னர் இக்கூத்தினை மட்டக்களப்பு, கொழும்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பலதடவை மேடையேற்றப்பட்டன. பின்னர் கூத்துக்களை தானே எழுதி அவரும் நடித்து மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார்.

1978ம் ஆண்டு வே. விஸ்வநாதபிள்ளை(கலைசாகரம்) அவர்கள் எழுதிய "வெற்றித்திலகம்" அரசியல் நாடகத்தில் அமரர். பாண்டிய மன்னனாகவும் மனைவி பாண்டிய மாதேவியாகவும் "எல்லாளன்" நாடகத்தில் அமரர் எல்லாளனாகவும், மனைவி துட்டகைமுனுவின் தாயாகவும் நடித்து பாராட்டைப் பெற்றார்கள். களுவாஞ்சிகுடியில் கணவனும் மனைவியும் சேர்ந்து நாடகம் நடித்தவர்கள் என்ற பெருமை இவர்களையே சாரும். இவர் எழுதிய கூத்துக்களின் கவிச்சுவை பொருட்சுவை என்பன எல்லோர் மனதிலும் நின்று நிழலாடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் எழுதிய நடித்த கூத்துக்கள்

| கூத்தின் பெயர் | முதலாவதாக மேடையேறிய ஆண்டு | அமரர் பங்குகொண்ட பாத்திரம் |
|---|---|---|
| 1. இன்றுபோய் நாளைவா | 1965 | இராவணன் |
| 2. கும்பகர்ணன்வதை | 1969 | கும்பகர்ணன் |
| 3. சத்தியவான்சாவித்திரி | 1982 | ஜமன் |
| 4. குருதட்சணை | 1982 | துருபதன் |
| 5. ஹரிச்சந்திரன் | 1982 | காசிமன்னர் |
| 6. சிறுத்தொண்டர் | 1982 | சிறுதொண்டர் |
| 7.சூறாவளி வழக்கு | 1978 | சிவன் |
| 8. பெண்ணின் விகடதந்திரம் | 1982- 1990 | கணபதிப்போடி |
| 9. செவிட்டுக்கந்தன் | 1982- 1990 | கந்தன் |
| 10. விருதலைத்தாகம் | 1990 | முண்டாப்போடி |

எழுதிய கூத்துக்களில் கவிச்சுவை, பொருட்சுவை என்பன பார்த்தோர் மனதில் நின்று நிழலாடுகிறது. அத்துடன் மணிக்கவாசகர், காசிபமுனிவர், சரஸ்வதியின் சாதனையில் ஒன்று, முனிவர்கூற்று, திருநீற்றின் பெருமை போன்ற வில்லுப்பாட்டுக்களும், தினைப்புன நடனம், நெல்லுக்குத்துப்பாடல், போடியார் கொசு நடனம், செம்பு நடனம், நெருக்கத்து வெளி கும்மி, இயுற்றி காலத்திற்குக் காலம், இளம் பிள்ளைகளுக்கு பழக்கி மேடையேற்றியுள்ளார். அத்துடன் பிறந்தநாள் வாழ்த்துக்கள், பிரியாவிடை வைபவங்கள், பேச்சுக்கள், வாழ்த்துக்கள், இரங்கற்பாக்கள் என்பன காலத்துக்காலம் வந்து கேட்பவர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளார். நான் கேட்கும் போதெல்லாம் எனக்கும் பேச்சுக்கள் எழுதி தந்து போட்டிகளில் பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றுள்ளேன்.

காலத்துக்குக்காலம் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுக்கட்டுரை எழுதுவதற்காக அவரை அணுகி உதவிகேட்பார்கள். அம்மாணவர்களுக்கு நாட்டுக்கூத்து, விஷவைத்தியம் கைப்பிடிவைத்தியம், ஊர் வரலாறு போன்றவற்றை கொடுத்து உதவி வந்தார். அவர்களும் அவரைப்பேட்டி எடுப்பதோடு போட்டோக்களும் எடுத்து நன்றிகள் தெரிவிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடங்களாக ம.தெ.எ.பற்று கலாசாரப் பேரவை நடாத்திய நாட்டுக்கூத்துப் போட்டிகளில் பங்குபற்றி சிறந்த நடிகர் சிறந்த இயக்குனர் என்ற சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தனது மரபுக்கலை கூத்துக்கலை தனது கிராமத்தில் மட்டும் வளர்க்காது அயல் கிராமமான கோயில்போரதீவு கிராமத்திலுள்ள உதயதாரகை கலைக்கழகத்தின் திரு.க.சச்சிதானந்தம் மா. பேரானந்தம போன்ற அங்கத்தவர்களுடன் தானும் சேர்ந்து கூத்துக்களை நடித்து மேடையேற்றி வெற்றி கண்டார்.

அத்தோடு திருப்பழுகாமத்திலுள்ள பாஞ்சாலி கலைக்கழகத்தின் திரு.பொன் தங்கராசா, திரு. தணிகாசலம், திரு.ம.உதயகுமார் போன்ற அங்கத்தவர்களுடன் தானும் நடித்து பல கூத்துக்களை நடித்து மேடையேற்றி வெற்றிகண்டார்.

இத்தோடு காக்காச்சிவட்டை, 40ம் கிராமம் போன்ற கிராமங்களிலும் உள்ள நடிகர்களுடன் சேர்ந்து தானும் நடித்து பழக்கி மேடையேற்றினார்.

இவரால் பயிற்றுவிக்கப்பட்ட இவ்வூர்க்கலைஞர்கள் தங்கள் பிரதேசங்களில் இன்றும் கலைத்துறைக்கு சேவை செய்து கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. சீனியப்பாவின் இறுதி நிகழ்வுகளிலும் இக்கலைஞர்கள் கலந்துகொண்டு தங்களது நன்றிகளை துயர்களை பகிர்ந்து கொண்டதை காணக்கூடியதாக இருந்தது. இவருடைய மரணச் சடங்கிலும் கொட்டும் மழையிலும் அதிகமானோர் கலந்து கொண்டமை ஒரு கலைஞருக்கும் வைத்தியருக்கும் கொடுக்கக்கூடிய கௌரவத்தை மக்கள் வழங்கினார்கள் என்றே கூறக்கூடியதாக இருக்கிறது.

அரச ஊழியன், விஷ வைத்தியர், வைத்தியர், சிறந்த நடிகன், சிறந்த இயக்குனர், கலைச்செம்மல்,மரபுக்கலை வேந்தன். கலாபூசணம் கவிஞர் போன்ற பெயர்களுக்கும் சொந்தக்காரராக திகழ்ந்தவர் அரசகேசரி அவர்கள்.

1975ம் ஆண்டு ஆயுள்வேத விஷவைத்திய மகாசங்கமய பேலியகொட என்ற விஷவைத்திய சங்கமம் நடார்திய வைத்திய மாநாடு 1975ம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர்கள் வைத்த விஷவைத்திய பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக "விஷவைத்தியம்" செய்வதற்கு தகுதி பெற்றவர் எனபதற்காக சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1976ம் ஆண்டு ம.தெ.எ.பற்று கலாசார பேரவை எடுத்த கலாசார விழாவிற்கு பிரதம அதிதியாக வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் K.W. தேவநாயகம் நீதி அமைச்சர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்

1982ம் ஆண்டு நாட்டுக்கூத்து ஒன்றினை நெறிப்படுத்தி மேடையேற்றியதற்காக 1982ம் ஆண்டு மாண்புமிகு செல்லையா இராசதுரை இந்து கலாசார அமைச்சர் அவர்களால் கல்லடி சிவானந்தா வித்தியாலய திறந்தவெளி மேடையிலே "நீரர மகளீர்" கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அன்றைய தினமே விபுலானந்த இசை நடனக்கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்அடிக்கல் நாட்டு வைபத்திலும் அமரர் அவர்கள் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக நாட்டுக்கூத்துக்கள் நாடகங்கள் வில்லப்பாட்டுக்கள் கவிதைகள் போன்ற கலைகலாசாரா நிகழ்வுகளில் பங்குபற்றி பாராட்டுக்கள் பல பெற்றமைக்காக 1990ம் ஆண்டு இளைஞர் முன்னேற்ற விளையாட்டு கழகம் களுவாஞ்சிகுடி கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் கழகத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் வி. விஸ்வலிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு "கலைச்செம்மல்" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார்.

1992ம் ஆண்டு திருப்பழுகாமம் துரோபதை அம்மன் ஆலய வீதியில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் பல பக்தர்கள், ரசிகர்கள் மத்தியில் திருப்பழுகாமம் பாஞ்சாலிக் கலைக்கழகத்தாரால்பொன்னாடை போர்க்கப்பட்டு "மரபுக்கலைவேந்தன்" பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார்.

1995ம் ஆண்டு ம.தெ.எ.பற்று கலாசார பேரவை நடாத்திய விழாவில் பொ. செல்வராசா பாராளுமன்ற உறுப்பினர் அவர்களினால் "சிறந்த கூத்துக்கலைஞர்" விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006-04-08ம் திகதி களுவாஞ்சிகுடி வடக்கு சமூக அபிவிருத்தி நிலையத்தாரால் எடுக்கப்பட்ட கலைகலாசார விழாவில் பொன்னாடை போர்க்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2008ம் ஆண்டு இலண்டன் மாநகரத்தில் புலம் பெயர்ந்து வாழும் களுவாஞ்சிகுடி பட்டிருப்பு நலன்விரும்பிகளால் "எம்மவர் எதிர்காலம்" என்ற மரபுக்கவிதைப்போட்டியில் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்டமைக்காக இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடார்த்தப்பட்ட விழாவில் ம.தெ.எ.ப. பிரதேச செயலாளர் திரு.எஸ்.அருள்ராசா அவர்களால் "பொற்கிளி" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2009ம் ஆண்டு கிழக்குமாகாண முதலமைச்சர் விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டது. இந்து கலாசார அமைச்சினால் கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். விச வைத்தியமும் கைப்பிடியும் திருப்பழுகாமத்தைச் சேர்ந்த திரு.த.சதாசிவம்பிள்ளை ஆசிரியர் அவர்களிடம் 30.-11-1966ம் ஆண்டு தொடக்கம் ஐந்து வருடங்கள் முறைப்படி இரு வைத்தியங்களையும் கற்று தெளிந்தார். அதன் மூலம் ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்களைக் காப்பாற்றியுள்ளார். விச வைத்தியத்தினாலே தான் பிரபல்யமடைந்ததாக கூறுவார்.

களுவாஞ்சிகுடி கண்ணகையம்மன் ஆலயத்தில் 45 வருடங்களுக்கு மேலாக காவியம் வழக்குரை என்பன பாடிவந்தார். அவர் காட்டிய வழியில் பலர் இனறும் காவியம் வழக்குரை பாடி வருவது குறிப்பிடத்தக்கது. களுவாஞ்சிகுடி பிள்ளையார் ஆலயத்திலும் பிள்ளையார் கதை, சித்திரபுத்திர நாயனார் கதை, சந்தபுராண படிப்பு பாடி வந்தவர், அத்துடன் கண்ணகி வரலாற்றுக்கான அ முதல் ஔ வரை 13 காவடிச்சிந்து பாடல்கள் இயற்றியுள்ளார். அக்காவடிச்சிந்து பாடல்களை முதல் வெளியீடாக 1995-06-05ம் திகதி மிதுனா நாகேந்திரன் வெளியிட்டுள்ளார். உற்சவகாலங்களில் அங்கப்பிரதட்சணை பண்ணுவோரும், காவடி எடுப்போரும் கற்பூர விளக்கு எடுப்போரும், வாயலகு எடுப்போரும், ஆலயம் வலம்வருவோரும் இப்பாடல்களை மனமுருகிப்பாடி அம்பாளிடம் அருள்வேண்டுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செத்தவரை மீட்டு வரலாறுகேட்ட தேவியே
என் வினையைத் தீர்க்க முடியாதோ"

என்று உரிமையோடு அம்பாளை நோக்கி ஒரு தாயிடம் கேட்பது போல பாடியிருப்பது அடியார்களை கவர்ந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி கிராமத்தின் வரலாற்றினைத் தொகுத்து 2009ம்ஆண்டு களுவாஞ்சிகுடி கலைக்களஞ்சியம் முதலாம் பாகத்தை வெளியிட்டார். வெளியீடு கவுத்தன்குடி மக்களும் வீரபத்திரர் ஆலய பரிபாலனசபையினரும் வெளியீட்டு வைத்தார்கள் பின்னர் வரும் சந்தரியினருக்கு இந்நூல் உதவும் என்பதில் ஐயமில்லை.

சுந்தரத் தமிழில் பாமர மக்களும் விளங்கி பாடக்கூடிய பாடல்களையே இவர் இயற்றியுள்ளார். அடியார்களும் உருகி வழிபட இப்பாடல்கள் உதவுகின்றன. 1985ம் ஆண்டு எனது திருமணத்தில் கைப்பிடித்து தந்தவரும் இவரே. இந்நிகழ்வை என்றும் மறக்கமுடியாது.

இவ்வாறு சேவை செய்தவர் இறுதி காலத்தில் நோய்வாய்ப்பட்டு 2022ம் ஆண்டு ஜனவரி மாதம 4ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் இயற்றிய கூத்துக்களை ஒரு புத்தகமாக அச்சிட்டு வெளிவரவேண்டும் என்பதே பலரது ஆசை எழுதியவை மக்களால் பயன்பட வேண்டும்.

நிமிர்ந்தநடை நேர்கொண்ட பார்வை சிரித்தமுகம் நெற்றியில் திருநீறு அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகும் விதம் இல்லை யென்னாது வைத்தியத்தொழிலை செய்யும் பண்பு அரச தொழிலை செய்யும் தொழிலை தெய்வம் என மதிக்கும் திறன் இவைகள் அனைவரையும் கவிர்ந்தது.

இவரது புகழ் என்றும் வாழ்க!
ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அன்பு பெறாமகன்
குலசேகரம்பிள்ளை நாகேந்திரன்
சமாதான நீதிவான்
ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்,

ஓவியகம்
பிள்ளையார் கோயில் வீதி,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். இரா. அரசகேசரி அவர்களின் மனைவி அமரர். அரசகேசரி இராஜேஸ்வரி அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் சில துளிகள்

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பின் தெற்கே 26 கிலோமீற்றர் தொலைவில் உள்ளதும் கிழக்கே ஆர்ப்பரிக்கும் வங்கக்கடலும், மேற்கே மீன்பாடத்தேன்சிந்தும் ஆறும், நாணம் நிறைந்த கன்னிப்பெண்போல நிலம் நோக்கும் செந்நெற் கதிர்கள் நிறைந்த வயல்களும், மீனும், ஒட்டியும், ஆம்பலும், தாமரை, அல்லி, ஒல்லிகள் நிறைந்த கொக்குநாரை போன்ற பறவைகள் நிறைந்த குளமும்,ஆடு, மாடு, மந்தைகள் மேயும் புல் நிலங்களும் முறையே மருதம்,முல்லை,நெய்தல், நிலங்கள் இயற்கையாகவே நிறையப்பெற்றதும். சைவமணம் கமழும் பிள்ளையார் மகாவிஸ்ணு, கற்புக்கரசியாம் கண்ணகை அம்மன், வீரபத்திரர், மாரியம்மன், முருகன், கண்கண்ட தெய்வமாம் நாகதம்பிரான் கோயில்களும் எங்கும் எழில் மிகுந்த சைவ ஆலயங்களும் தென்னை பனை கமுகு மரங்களும் வாழை, மா, பலா ஆகிய கனிகள் தரும் கனி மரங்களும் மேலும் வம்மி, மருதை, நாவல், வேம்பு முதலிய விருட்சங்களும் செடி கொடிகளும் நிறைந்து இயற்கைச் சூழலில் அமைந்திருக்கும் களுவாஞ்சிகுடிக் கிராமத்தில் உயர் வேளாளர் நற்குலத்தில் பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்த குருசாமி அவர்களுக்கும் வைத்தியனார் குடியைச் சேர்ந்த கனகம்மா தம்பதியினருக்கு 30.12.1947ம் வருடம் வியாழக்கிழமை ஆறாவது குழந்தையாகப் பிறந்தார் இராஜேஸ்வரி. இவருக்கு சங்கரப்பிள்ளை, இரத்தினையா,விஸ்வநாதன் என்னும் மூன்று அண்ணர்மாரும் ஆனந்தநேர், கோவிந்தநேர் என்னும் இரண்டு அக்காவும் கோவிந்தசாமி, புகழேந்திரன் என்னும் இரு தம்பிமாரும் அன்புச் சகோதர சகோதரிகளாகப் பிறந்தார்கள்.

இவர் குழந்தையில் இருந்தே அழகிலும். கல்வியிலும் பெற்றோர் சகோதர சகோதரிகளிடம் மிகுந்த அன்பும் பாசமுமம் கடவுள் பக்தி நிறைந்தவராகவும் செல்லப்பிள்ளையாகவும் வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த (சா.த)வரை கல்வி கற்று சித்தியும் பெற்றார். பின்னர் மட்டக்களப்பில் தையல் பயிற்சி பெற்று தையல் கலையிலும் சிறந்து விளங்கினார்.

திருமணவயதில் பட்டணக் குடியைச் சேர்ந்த இராசகேசரி பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்த முத்தம்மா தம்பதியினரின் மூத்த மகனாக அரசகேசரி அவர்களை 26.08.1970ம் ஆண்டு கரம்பிடித்தார். இவர்கள் கவிதா, லலிதா, கீர்த்திகா, அகிலன் என்னும் நான்கு குழந்தைகட்கு தந்தை தாய் ஆனார்கள்.

குழந்தைகட்கு கல்வி மாத்திரமன்றி ஒழுக்கம், பெரியோர்கட்கு கீழ்ப்படிதல், அனைவரையும் அன்பு பாசத்துடன் உபசரித்தல், சமயப்பற்றுடன் தெய்வ வழிபாடு ஆகிய நற்பண்புகளை ஊட்டி வளர்த்தார்கள். உரிய காலத்தில் கல்வி பயின்ற இவர்களில் லலிதா, கீர்த்திகா இருவரும் பட்டதாரிகளானார்கள்.

மூன்று பெண் பிள்ளைகளையும் ஆண் பிள்ளையையும் களுவாஞ்சிகுடியில் வசித்த உறவினர்களான கவுத்தன் குடியைச் சேர்ந்த முறையே மோகன், சிவாகரன், விபாகரன், தர்ஷனா ஆகியோருக்கு உரியவயதில் திருமணம் செய்து வைத்தனர்.தற்போது இவர்கட்கு எட்டுபேரக்குழந்தைகள். மூன்று பெண்களும் ஐந்து ஆண்களுமாவார்கள்.

தற்போது கவிதாவும் அவர் கணவரும் குழந்தைகளுடன் அவரது தம்பியுடன் அவர்கள் வீட்டில் வசிக்கின்றார்கள். லலிதா, கீர்த்திகா அவர்கள் தங்கள் கணவர் குழந்தைகளுடன் லண்டனில் வசித்து வருகிறார்கள்.

அமரர். இராஜேஸ்வரி அவர்கள் தன்னலம் கருதாது பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டார். உதாரணமாக திருமணங்கள் பேசி சேர்த்துவைத்தல் மற்றும் வீடுகள் குடிபுகுதல் போன்ற எல்லா நற்காரியங்களிலும் முன்நின்று நடத்துதல் அதுமட்டுமன்றி களுவாஞ்சிகுடி சக்தி இல்லம் தொடங்கிய காலத்திலிருந்து அங்கு பொருளாளராகவும் அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார். அங்கு நடைபெறும் விசேட விழாக்களிலும் அதில் அவரும் பங்குபற்றுவார். விஜயதசமி நாளில் குழந்தைகட்கு ஏடு தொடக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை வருடப்பிறப்பிலன்று சக்தி இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளுக்குத் தாயாக இருந்து மருத்து நீர் வைத்தல், அன்னதான நிகழ்வுகளில் எப்படியான உணவுகளை வழங்கவேண்டும் என்பதிலிருந்து அனைத்து சேவைகளையும் தன்னலம் கருதாது முன்நின்று செய்துமுடிப்பார். இது போல் அவர் செய்த சமூக சேவைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். கலைத்துறையையும் அவர் விட்டுவைக்கவில்லை தன் கணவர் அரசகேசரி அவர்களுடன் சேர்ந்து பல அரசியல் நாடகங்களையும் பல மேடைகளில் நடித்துப் பாராட்டுக்களும் பரிசுகளும் பெற்ற நடிகையுமாவார்.

தனக்கு வந்தநோயின் தாக்கத்தை கணவருக்கோ, பிள்ளைகளுக்கோ வேறு எவருக்குமோ காட்டிக்கொள்ளாமல் 10.02.2018 சனிக்கிழமை அதிகாலை 03.50 மணிக்குத் தன் உயிர் பிரியும் வரைக்கும் தனக்குள்ளேயே தாங்கிக் கொண்டார் எனது அன்புச் சகோதரி.

அரசகேசரி அவர்கள் கலைத்துறைக்கு செய்த சேவைகள் அளப்பரியன. அத்தோடு விஷவைத்தியத்தில் கைதேர்ந்தவர் இதனால் பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளார். இவரது சேவைகளுக்கு அவரது மனைவி இராஜேஸ்வரியினது பங்களிப்பு அளப்பரியது. அரசுகேசரி அத்தானின் பிரிவு 2022.01.04ம் திகதி காலை எமக்கு பேரிழப்பாயிற்று. இவர்கள் இருவரது இழப்பும் களுவாஞ்சிகுடி கிராமத்திற்கே பேரிழப்பாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் கலந்து மீளாத்துயில் கொண்ட எனது அத்தான் அரசகேசரி தங்கை ராஜேஸ்வரி ஆகியோருடைய ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திருமதி. தம்பிரெட்ணம் ஆனந்தநேர்
மருமகன்மார் நரேந்திரன், கோணேஸ்வரன்
மகள்மார் சுகந்தி, சாந்தி
பேரப்பிள்ளைகள்
சக்கடத்தார் வீதி,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரருக்குக் கிடைத்த விருதுகள்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா. அரசகேசரிஅவர்கள் அருளிய
# கண்ணகி அம்பாள் காவடிச்சிந்து



அம்மாளே உந்தனது அருளைத் தாதா
அடியார்கள் பக்கம் நீ நெருங்கி வாவா
வம்பான வேதனையில் வாடுகின்றேன்
வந்தெனக்கு அருள் செய்யஓடிவாவா
தென்பான வார்த்தை சொல்ல யாரும் இல்லை
தேவியே உன்னடியைத் தேடிவந்தேன்
செம்பாவைக்கண்ணகையே சிலம்புத்தாயே
செல்வியே உன்திருக்கோலம் காட்டுவாயே! 1

ஆட்டத்தில்மதிமயங்கி மாதவியை
அருகணைத்த கோவலர்க்கு அன்பாய் நின்றாய்
வாட்டத்தில் பொருள் இழந்த கோவலனை
வாழவைக்க மதுரை நகர்ப்பதியும் வந்தாய்
கூட்டத்தில் கொலுவிருந்த கொற்றவர்க்கு
கூற்றுவனாய் வேடமது காட்டி நின்றாய்
ஓட்டத்தில் ஓடிவந்தேன் உன்பாதம் காண
ஒரு நொடியில் எனதருகில் வருகுவாயே! 2

இடையர்குலம் வாழ்விக்க வந்ததாயே
இன்னல்பல பட்டுதுயர் அடைந்ததாயே
படை வீரர் மாழ அருள் செய்ததாயே
பார்புகழ மீகாமன் தனையும் கார்த்தாய்
கொடைவள்ளல் மானாகர் குலமும் வாழ
கொடியிடையாய் மகளாக நீயும் வந்தாய்
நடைபழகிச் சிலம்புடனே நாடிவந்து
நாயகியே நல்லருளைத் தருகுவாயே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயாத உலோபியல்லேன் எழிமையுள்ளேன்
எண்ணற்ற வேதனையால் ஏங்கி நொந்தேன்
தாயாக உம்மை நான் போற்றுகின்றேன்
தயாபரியே வந்தெனக்கு அருள்செய்வாயே
பேயாக நாளாந்தம் பேதலித்து
பெருவினையில் பட்டுழன்றேன் பிணியும் பற்றி
நாயாக நானலையும் பாட்டைப் பாராய்
நாயாகியே நல்லருளைத் தருகுவாயே! 4

உத்தமியே பத்தினியே உன்கணவன் கோவலனின் உடல்
பொருத்த உம்பர் தனை நினைந்தபோது
இத்தரையோர் அதிசயிக்க ஊசிநூலை
இறையருளால் கையதனில் பெற்ற அன்றே
செத்தவரை மீட்டு வரலாறு கேட்ட
தேவியே என் வினையைத் தீர்க்க முடியாதோ
எத்தனை நாள் ஏங்கினேன் உன் பாதம்காண
எழிலரசி எனதருகில் வருகுவாயே! 5

ஊறுசெய்த பாண்டியனிடம் நீதிகேட்க
உருப்பிடித்து குளையேந்தி சபையில் வந்தாய்
வீறுகொண்டு வழக்காடி சிலம் பெறிந்து
வினை செய்த தட்டானை எரிய வைத்தாய்
நீறு செய்தாய் மதுரையெல்லாம் எரிந்து போக
நீதி கெட்ட மன்னனுமே உருகிமாய்ந்தான் ஆறுகடல்
சூழ்பதிகளில் அமர்ந்து வாழும்
அம்மாளே அருகோடி வருகுவாயே! 6

எடுத்தாயே மாங்கனியாய் ரூபமொன்று
எழில்வேந்தன் நெற்றியின் கண்ணழித்தாய்
விடுத்தானே பாண்டியனும் மதலையுன்னை
விரிகடலில் பேழையதில் தானே யேற்றி
கொடுத்தாரே ஈஸ்பரனார் வரங்கள் ளெல்லாம்
கொடியரவின் மணிவாங்க நாகதீவில்
தடுத்தபடை மாழ அருள் செய்த தாயே
தயவோடு எனதருகில் வருகுவாயே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கினான் வெடியரசன் போரில் அன்று
எண்ணற்ற படையெல்லாம் வீந்து மாழ
வாங்கினான் நாகமணி நாகதீவில்
வடிவரசி உனக்காக சிலம்பு செய்ய
தாங்கினார் கோவலனார் தன்னையம்மா
தாழ்பணிந்தேன் என்னை நீ தாங்கொண்ணாதோ
தூங்கியே வாடுகின்றேன் துயர் துடைக்க
தூயவளே எனதருகில் வருகுவாயே! 8

ஐயமில்லை உன்னடியைத் தேடிவந்தேன்
அடியேனின் வினைதீர்க்கஅன்னையே அருகில்வாராய்
வையகத்தில் உன்போல தெய்வம் உண்டோ
வடிவரசி கற்புத்தாய்த் தெய்வம் நீயே
மெய்யடியார் கூட்டம் எல்லாம் வீதி சுற்றி
மேலான விண்ணப்பம் கொண்டு வந்தோம்
மை விழியே கண்ணகையே சிலம்புத்தாயே
மனம்மகிழ் வந்து எனதருகில் வருகுவாயே 9

ஒரு முலையைத் திருகிவிட்டாய் மதுரையெல்லாம்
ஒரு நொடியில் சாம்பலாய்ப் போனதன்றே
திருமுலையில் ஆயர்குலம் வெண்ணை அப்பி
சினம் தணித்தார் சீத்தலைச் சாத்தனாரும்
பருமுலையும் குளிர்ந்து வரம் கொடுத்துவிட்டு
பரலோகம் ஆடி நீ சென்றாயம்மா
பெருமுலையாய் உன்பாதம் துதிப்பேனம்மா
பெருமையுடன் எனதருகில் வருகுவாயே 10

ஓடினாய் கனவுகண்டு மேனியெல்லாம்
உருக்குலைந்து உள்ளம்தடுமாறி நின்றாய்
தேடினாய் தெருக்கள் எல்லாம் சேதிகேட்டு
செய்வது அறியாது திகைத்து நின்றாய்
நாடினாய்கொலைக்களத்தில் கள்ளம் இல்லா
நாயகனைக் கண்டுஉயிர் மீட்டுக்கொண்டாய்
பாடியே உனைத் தொழுதேன் பத்தினித்தாயே
பரிவுடனே எனதருகில் வருகுவாயே! 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔடதங்கள் உன்னருளே ஓடிவாவா
ஆனபிணி மாற்றியருள் செய்யவாவா
எவ்வினையும் என்மீது அணுகா வண்ணம்
ஈஸ்பரியே எனதருகில் ஓடிவாவா
சௌபாக்கியவதியே தாயே தாழ் பணிந்தேன்
தருணமிது சிலம்பொலிக்க ஓடிவாராய்
பௌர்ணமி வைகாசி வருவேன் என்றாய்
பரிவுடனே எனதருகில் வருகுவாயே! 12

அஃதென்ன தாயே நீ அசையா திருப்பதேன்
அடியேனின் குறைதீர்க்க அன்னையே ஓடி வாராய்
இஃதென்ன தொல்லையோ என்றென்னை ஏய்க்காமல்
இது சமயம் எனது துயர்அகற்ற வாராய்
எஃது எவர் சொன்னாலும் தேவியே விடமாட்டேன்
எனதுபிணி மாற்றியருள் செய்யவாராய்
இஃது நல்ல வேளையென்று வந்தேனம்மா
எழிலரசி எனதருகில் வருகுவாயே! 13

* * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா. அரசகேசரி அவர்கள் இயற்றிய சனீஸ்பரன் காவடிச்சிந்து



அட்டமத்துச் சனியனே ஐயா உந்தன்
அடிமைநான் வாடிமனம் புழுங்குகின்றேன்
கெட்டமனச்சோர்வுவந்து கெதியில்லாமல்
கேடுபல என்மனதில் தோன்றுதப்பா
துட்டன்என்றே நீ வதைக்காய் துய்யா எந்தன்
துயர்களைந்து சுகம்பலவும் தருவாயப்பா
சட்டமிட்டுத் தண்டனையைக் கொடுத்து வாட்டும்
சனியனே காகவாகனம் ஏறும் தம்பிரானே 1

ஆண்டுபல காலங்கள் சென்றதப்பா
அன்புமனம் என்றமே குறைந்ததில்லை
வாண்டுபல காலங்கள் சென்றதப்பா
வர்க்கையிலே நின்மதியோ சற்றுமில்லை
வேண்டுமென்றே நீ பிடித்து ஆட்டுகின்றாய்
வேண்டாமப்பா வீரனோ நான் விட்டிடப்பா
மாண்டுமனம் போகுமுன்னே வயைத்தாராய்
மாயனே காகவாகனம் ஏறும் தம்பிரானே! 2

இன்று பல நோயாலே அல்லல்பட்டு
இடிவிழுந்த யானைபோல் ஏங்கிவாடி
நன்று பல செய்ய மனம் இருந்தபோதும்
நலிவுற்றுப் பாய்மீது படுக்கலானேன்
வென்று வழி செல்லவே விட்டிடப்பா
வீரனே என்னை நீவிட்டியாயோ
என்று நான் மனிதனாய் வாழ்வேனையா
ஈசனே காகவாகனம் எறும் தம்பிரானே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டிபோல் துன்பம் எல்லாம் வாட்டிக் குத்தி
எழும்பவே விட்டிடாமல் ஏங்கவைத்து
மாட்டியே நோய்பிணியில் மாட்டவைத்து
மனமுடைந்து வாழ்வதுமோர் நீதியாமோ
ஏட்டில் உள்ள தோத்திரங்கள் பாடினேன் யான்
இதுவரையில் எதுபலனும் கண்டதில்லை
வாட்டி எனை வதைக்காதே ஈஸ்பரனே
வள்ளலே காகவாகனம் ஏறும்தம்பிரானே! 4

உன்னாட்டம் கண்டு நான் ஆடும் போது
உற்றார்கள் கண்டுமனம் குளிர்ந்து போறார்
என் ஆட்டம் நன்மையாய் முடிவதில்லை
ஏனோதான் என்னை நீ ஆட்டுகின்றாய்
கண்ணாட்டம் காட்டினால் அதுவே போதும்
கருணைமழை என்மீது பொழியுந்தானே
மன்றாட்டமாய் விழுந்தேன் உந்தன் காலில்
மாயனே காகவாகனம் ஏறும் தம்பிரானே! 5

ஊடுருவித் தேகத்தில் நோய்கள் தொட்டு
உடலெல்லாம் புண்ணாகத் தோணுதையா
ஈயுருவித்தின்னுதே தெகமெல்லாம்
ஈசனே இது உனக்கு அழகோ ஐயா
நாயுருவிப் போகுதே நாணம் எல்லாம்
நாடியே உன்னருளைத் தருவாயப்பா
காயம் உருகிப்போகுமுன்னே கனியைத்தாராய்
காரணா காகவாகனம் ஏறும் தம்பிரானே! 6

என்றுமே நல்லாட்சிபுரிந்த அயோத்திவேந்தன்
ஏங்கினான்உன்பிடியில் பட்டுழன்றான்
அன்றுமே நாடிழந்தான் நளமகராஜன்
அனியாயமாய் மனைவிதன்னை அலையவிட்டான்
நன்றுமே நீயிரங்கி நலமே செய்தாய் ஈற்றில்
நாடியே உனைப்பணிந்தேன் நலமேதாராய்
இன்று நான்படும் துயரம் மாற்றியாழ்வாய்
இனியனே காகவாகனம் ஏறும் தம்பிரானே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் என்று கேட்பார்கள்இங்கேயில்லை
ஏலாது பட்டதுயர் எல்லாம் போதும்
பேன் தலையில் குடிஇருந்து கடிப்பதுபோல்
பிரச்சினைகள் என்மனதில் தோன்றுதப்பா
நான் என்றுகூறிய நாவதுவும் நாணிற்றே
நாடியே உன்னருளைத் தாராய் ஐயா
கான் உறைந்து போகுமுன்னே கடிதில்வாராய்
காரணா காகவாகனம் ஏறும் தம்பிரானே! 8

ஐயமுடன் வாழ்கின்றேன் ஐயா உனக்கு
அர்ச்சனைகள் பல புரிந்து அழுகின்றேனே
வையகத்தில் நீ வாட்டா மாந்தர் இல்லை
வானகத்திலும் அவ்வாறே வாட்டுகின்றாய்
மெய்யாக உன்னை நான் வணங்குகின்றேன்
மேலான ஈஸ்பரனே இரங்காய் என்மேல்
உய்யும் வழிதந்து என்னை காத்தருளுவாய்
உத்தமனே காகவாகனம் ஏறும் தம்பிரானே! 9

ஒன்று செய்தாய் இன்னொன்று வந்து சேர்ந்து
ஒரு செயலும்உருப்படியாய் ஆனதில்லை
அன்றுபட்ட கடன்எல்லாம் தீர்க்வொண்ணா
அடிமைப்பட்ட வாழ்க்கைபோல் வாழலானேன்
நின்று என்னை வாட்டுவதால் நிதியிழந்தேன்
நீங்காத துயரத்தால் நீதியும் இழந்தேன்
நன்று நீ செய்துவிட்டால் நலமே சேரும்
நாயகா காகவாகனம் ஏறும்தம்பிரானே! 10

ஓடி யாடித் தேடினாலும் ஐயா
உழைத்தபணம் பொருள் ஒன்றும் தங்குதில்லை
ாடியோட்டம் நரம்புநார்கள் நலிவுவந்து
நாதியற்ற பிணடம் போல் தவிக்கலானேன்
தேடிவந்து உந்தன் காலைப்பற்றிப்பிடித்தென்
தெய்வமே நீ இரக்கம் கொள்வாயப்பா
வாடி நான் நெந்து போனேன் வாழ்வு தாராய்
வரதனே காகவாகனம் எறும் தம்பிரானே! 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔளவைக்குஅருள்கொடுத்த முருகவேளை
ஆரணியத்தில் வேங்கைமரம் ஆக்கிவைத்தாய்
கொவ்வை இதழ் குறமாது வள்ளிதன்னை
குருவிமயில் கோட்டானுக்காய்க் காவல் வைத்தாய்
எவ்வகையானோரையும் ஆட்டிவைக்கும்
இறையவனே உன்பெருமை சொல்வதெங்கே
வல்வினைகள வாராமல் கார்க்க வல்லோன்
வரதனே காகவாகனம் ஏறும் தம்பிரானே! 12

அ.்.தென்ன சனீஸ்பரனே அவதாரங்கள் பல நீ எடுத்து
அட்டமத்துச்சனி மங்குசனி பொங்குசனி மரணச்சனி ஏழரையென்று
இ.்.தில் எந்த அவதாரம் நீ எடுத்தாலும்
இயலாது உன்பிடியில் இருந்த தப்ப
எ.்.து எவர் சொன்னாலும் அன்புவைத்து
இறையவனே ஈஸ்பரனே இரக்கம் தாராய்
உ.்.து நல்ல சமயம் ஐயா உயர்வைத்தாராய்
உத்தமனே காகவாகனம் ஏறும்தம்பிரானே! 13.

* * *

சாதுவைக்கண்டால் இரண்டொரு வார்த்தை பேசு,

துஷ்டனிடம் மௌனமாய் இரு,

பண்டிதரிடம் நல்லவற்றைச் சொல்,

முட்டாளிடம் வாயைத் திறக்காதே.

- கபீர்தாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். இரா. அரசகேசரி அவர்களால் இயற்றப்பட்ட பஜனைப்பாடல்

பஜனை செய்வோம் வாருமே பஜனை செய்வோம் வாருமே
பஜனை செய்வோம் வாருமே பஜனை செய்வோம் வாருமே
வாஞ்சியூரில் ஐங்கரர் வாவிக்கரை மீதிலே
காஞ்சிடமல் நம்மையே கருணையோடு பார்க்கிறார் (பஜனை)
சிறுவர் பெரியோர் கூடுவோம் சேர்ந்து ஒன்றாய்ப் பாடுவோம்
மறுமை வாழ்வு மலர்ந்திடும் மனம் துணிந்து பாடுவோம் (பஜனை)
வீடுவீடாய் பாடுவோம் வீதியெல்லாம் பாடுவோம்
நாடுநாடாய் பாடுவோம்நாடி அருள் செய்குவோம்(பஜனை)
தட்டுப்பலகை சல்லாரி தானதிர மத்தளம்
முட்டுப்போட சிறப்பினை முழங்கி நாதம் கேட்குமே(பஜனை)
ஓடி ஓடி நாமெல்லாம் ஒன்று கூடிப்பாடலாம்
தேடித்தேடி நாமெல்லாம் தெய்வகீதம் பாடலாம் (பஜனை)
சிறுமை நிலை நீங்கிடும் செல்வம் மிகச் சேர்ந்திடும்
வறுமை நிலை நீங்கிடும் வந்த பிணிகள் மாறிடும் (பஜனை)
பாவம் எல்லாம் நீங்கிடும் பக்தி நிலை பெருகிடும்
சாபம் எல்லாம் நீங்கிடும் தலைவன் புகழ் பாடினால்(பஜனை)
தும்பிக் கையோன் துணையினால் துயர்களைந்து போகுமே
நம்பிக்கையே என்று நாம் நாடிப்பஜனை செய்குவோம் (பஜனை)
சைவ மகாசபையினர் தாழ்பணிந்து பாடுவோம்
சைவ மதம் தளைத்திடும் தலைவன் புகழ் பாடினர் (பஜனை)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். இரா. அரசகேசரி அவர்களால் இயற்றப்பட்ட வைரவர் அகவல்

மஓம் அரிபுரம் ஏந்திராதி அமரர்கள் அறியா சோதி
திரிபுரிதகனம் செய்த சிவன் அருள் வயிரவா ஓம்
திருப்பதம் தூக்கி ஆடும் தில்லையம்பலத்துள்ளோனே
பொறுப்பினில் இருப்பாய் என்றும் புகழ் பெறு வயிரவா
ஓம் ஐமறை கற்ற வேதம் ஐந்தலை தன்னில்
ஒன்றாய் கைவிரல் நகத்தால் கிள்ளி கழுத்தினில்
ஆரம் பூண்டு உய்ய மானிடர்காக உறு சுடலையிலே
நின்று வையகம் தன்னில் ஆடும் வயிரவா நமோ நம
ஆதியாய் அனைத்துமானஆதிவயிரவா
ஓம் காரமாய் உயிருக்குயிராய் உத்தண்ட வயிரவா
மகாலமாம் மயக்கம் தீர்க்கும் மகலாவயிரவா ஓம் சிகாரமாய்
சிகமாய் நின்ற சிங்கமுகவயிரவா ஓம் ஓர் எழுத்தாய் ஈரெழுத்தாய்
ஓங்காரத்துட் பொருளாய் ஆறெழுத்தாய் அனைத்தும் ஒன்றாய் ஆனதனில் முதல் எழுத்தாய்வேறுபட்டு எட்டெழுத்தாய்விளங்கும் அட்டவயிரவா
நம்பிக்கை கொண்டவர்க்கு நமச்சுவாயப் பொருளாய் ஆன திருவிளையாடல்கள் அறுபத்தினான்கினையும் வானவர்கள்கொண்டாட வாகாய் புரிந்தருளிஇப் புவியில்மானிடர்கள்இயன்றபடி பூசைசெய்ய தப்பாமலே வரமருளி தக்க பலன் கொடுத்தருளும் ஆதிவயிரவரே அப்பனே சுவாயநம சோதிவயிரவரே சுடரேசிவாயநம காலவயிரவரே கடவுளே சிவாயநம நீல வயிரவரே நீயே சுவாயநம நிர்மாண வயிரவரே நீயே சிவாயநம அக்கினி வயிரவரே ஐயா சிவாயநம உக்கிரவயிரவரே ஓம் நமச்சிவாய நம பாலன் என்பிழை பொறுத்து பாமாலைஏற்றருள்வாய் கோலவடுகேஸ்வரரே என் குறையைத் தீருமையா முளியாமல் என்குறையை முன்நின்று கேளுமையா அநியாயம் செய்பவரை அனல் விழியால் பாருமையா ஏவல் பில்லி சூனியம் எதுத்துவரும் வஞ்சனைகள் மேவும் கோல் வல்வினைகள் வீசமுள்ள ஐந்துக்களும் நெடியகடல் ஆள்புவியில் ஈரருளி வாழ் மிருகம் இவ்வகையினால் ஏதும் இடர் ஏதும் வாராமல் செவ்வையாக காத்தருளும் செகசோதி வயிரவரே நாலுபத்து நூறு நானூறாய் நாலுபத்தாய் நாவிரெண்டு எட்டாய நவிலும் நாலு வியாதிகளும் மும்மூன்று கோட் பகையும் மூவெட்டும் மூன்றும் என மானிடத்தோர் இயம்பு நட்சத்திரங்களும் இவ்வகையினால் ஏதும் இடர் ஏதும் வாராமல் செவ்வகையாகக் காத்தருளும் செகசோதி வயிரவரே பாசம் அறுபத்து பல வினையை வேறறுத்து மோசக்கடலிலே மூழ்கிடாமலே தரித்து ஆட்கொள்ளவேண்டினேன் அப்பனே நமஸ்து ஆதிவயிரவரே உன் நாமம் மறவேன்நமஸ்து நமஸ்து

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது தற்சிறப்புப் பாயிரம்)



திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்..

(நலம் தரும் சிவபுராணம் நாளும் பாடிடு மனமே
சிவன் வருவான் அருள் தருவான் வாழ்வில் அனுதினமே)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய்,
விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
'ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே தன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லனோ
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரியபேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுனர்வாய்

மாற்றமாம்வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றி பகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப்பலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட்கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்வியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்திலுள்ளர் சிவனடிக்கீழ்
பல்லோரும் மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம

முத்துநல் தாழம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமி யும்பார் மகளும்
நாமகளோடுபல்லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 1

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியும் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 4

அறுகுஎடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்கணங்க ளெல்லாம்
நம்மிற்பின்பு அல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகம் மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மைஇம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலா எறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந் துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே. 14

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 15

ஆவகை நாமும் வந்தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசெண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்தும்நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடச்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்



வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்ததுரியமெய்ஞ் ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் கட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்து
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
என்னை யறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையினை முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன்சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் அழுத்தியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

- ஔவையார்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதிதேவி புகழ்

## சரஸ்வதி துதி

வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

## சரஸ்வதிதேவியின் புகழ்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் (வெள்ளைத்தாமரை)

மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகித்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமேவடி வாகிடப் பெற்றாள் (வெள்ளைத்தாமரை)

வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம் (வெள்ளைத்தாமரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலங்கிடுந் தெய்வம்
உய்வமென்ற கருத்திடையோர்கள்
உயிரினுக்குயிராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கை வருந்தி உழைப்பவர்தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் (வெள்ளைத்தாமரை)

செந்தமிழ் மணி நாட்டை யுள்ளீர்
சேர்ந்திடு தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட்கே செய்வ தென்றால்
வாழி ய.்.திங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கியதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் புசனை யன்றாம் (வெள்ளைத்தாமரை)

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வி யிலாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ளை வழியிவை கண்டீர் (வெள்ளைத்தாமரை)

ஊணர்தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறுநாடு
சேண கன்றதோர் சிற்றடிச்சீனம்
செல்வப்பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ் கடற்கப் புறத்தினில் இன்றும்
காணும்பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியின் ஒளிமிகுந்தோங்க (வெள்ளைத்தாமரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிதிழைக்கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மானமற்று விலங்குகளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழிவெனலாமோ?
போனதற்கு வரந்ததல் வேண்டா
புன்மை தீப்ப முயலுவம் வாரீர் (வெள்ளைத்தாமரை)

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தன் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள் தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னை யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத் தறி வித்தல் (வெள்ளைத்தாமரை)

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் மற்றவர் வாய்ச் சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத்தேமொழி மாதர்களெல்லாம்
வாணி பூசைக்குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர் (வெள்ளைத்தாமரை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்க என் வெள்ளையுள்ளத்
தண்டா மரைகுத் தகாது கொலோ சகமேழுமளித்து
உண்டானுறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலா வல்லியே 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்கயாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலா வல்லியே. 2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந் துன்அருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ உள்ளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலா வல்லியே. 3

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித் தருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலா வல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்து அலராத தென்னே நெடுந்தாட் கமலக்
அஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளை
கஞ்சத தவிசொத் திருந்தாய் சகலகலா வல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிதெய்த நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலு அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக் கண் நல்காய் உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகலகலா வல்லியே. 7

சொல்விற் பனமும் அவதானமும் கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கரி தென்றுஒரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும்செல்வப் பேறே சகலகலா வல்லியே. 8

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலா வல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வ முள்தோ சகலகலா வல்லியே. 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் தவநிலை

1. திருவணா மலையிற் குகநம சிவாய
தேசிகன் வடிவமா யிருந்து
கரவணா வடியேன் சென்னிமே லுனது
கழலினை வைத்தவா றுணரேன்
விரவுநா ரியரைப் புதல்வரைப் பொருளை
வேண்டிய வேண்டிய வனைத்தும்
பரவினார் புகழ்வார்க் களித்திடும் பொன்னம்
பலவனே பரமரக சியனே.

2. திடமுறுந் தவத்தோர் கண்டுகண் களித்துச்
சிந்தைநைந் துருகிட நடிக்கும்
நடனகுஞ் சிதனே யென்று நீன் புகழை
நவின்றிட நன்மையே தருவாய்
உடலெனுஞ் செப்பில் உயிரெனும் பந்தை
ஒழித்திடுஞ் சித்தனே யுரக
படர்பணி யணியும் பணியனே பொன்னம்
பலவனே பரமரக சியனே

3. காலனைக் கடிந்த காலனே யுமையாள்
கணவனே கடவுளே என்று
ஓலமிட் டலறி யென்மன முருகி
உளங்கனிந்த தோதுநா ளுளதோ
சீலமெய்த் தவராம் வியாக்கிர பாதத்தைத்
தெய்வமா முனிபயநீ தெடுத்த
பாலனுக் குதவும் பாலனே பொன்னம்
பலவனே பரமரக சியனே

4. ஊடலிற் கொடிய மாதர்க ளுடனே
உறவுசெய் துருகிடுங் கலவிக்
கூடலிற் காலங் கழித்திடா வகைநின்
குஞ்சித பாதமே தருவாய்
ஆடலுக் கிசைந்த முதல்வர் மூவர்க்கும்
அன்பினா லமிர்தமே அளித்துப்
பாடலுக் கிசைந்த திருச்செவிப் ளுபொன்னம்
பலவனே பரமரக சியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புல்லரிற் செறிந்து நல்லவர் குழாத்திற்
புகுந்திடா துளன்றிடுங் கொடியேன்
கல்லினும் வலிய நெஞ்சினே னுருகக்
கருணைசெய் தருளநா ளுளதோ
அல்லினை யகற்றுங் கிரணசூ ரியனை
அன்றுமா மகத்திலே பிடித்துப்
பல்லினை யுதிர்க்குஞ் சதுரனே பொன்னம்
பலவனே பரமரக சியனே

6. மங்கை மாதர் சூழ்ச்சி யினால்
மாய வலையிற் பட்டுழன்று
கங்கு லிருண்ட பொறியதுபோல்
கலங்கி யடியேன் திரிவேனோ
திங்கட் சடையு மிளம் பிறையுந்
திருவெண் ணீற்றி னொளிவீசச்
செங்கை தனில் மான் மழுவேந்தும்
சிவனே வந்து தோற்றாயோ

7. மானார் தங்கள் மைய லினால்
மயங்கி மெலிந்து அடியேனுங்
கோனார் கையிற் கோலது போல்
குவலய மீதில் அலைவேனோ
வானோர் போற்றும் மாமருந்தே
மறலீ தன்னை யுதைத் தோனே
தேனார் பங்கா எனை யாண்ட
சிவனே வந்து தோற்றாயோ

8. மிருக சாதிகளைப்போலே தான்
மெத்த மெலிந்து அடியேனும்
குருவின் வசனம் மறுத்தவர் போல
கொடிய நரகில் வீழ்வேனோ
அருவு முருவும் பலவித மாய்
அம்பல மயமாய் நிறைந்திருக்கும்
திருவம் பலத்து ளாடு கின்ற
சிவனே வந்து தோற்றாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மீன்போல் விழியாள் மைய லினால்
மெத்த மெலிந்து அடியேனும்
மான்தான் வலையில் பட்டது போல்
மயங்கித் தியங்கி வருந்துவனோ
ஊன்தா னுருவ விசயனுக்காய்
ஒளிசேர் பாசு பதங் கொடுத்தாய்
நான்தான் வாடி மெலிய முன்னம்
நக்கா வந்து தோற்றாயோ

10. முன்னே பெரியோர் சொன்ன தொரு
மொழியை மனதில் நினையாமல்
அன்னே சிறியேன் மனத் தாலே
அரிய நரகில் வீழ்வேனோ
பொன்னே திருவே மரக தமே
புரமுன் றெரித்த புண்ணியனே
அன்னை கண்ணைப் பனை யாண்டி
அரனே வந்து தோற்றாயோ

வேறு
ஆசிரிய விருத்தம்

11. தத்துவ போத ஞானச்
சமயநூல் பலவுங் கற்றேன்
பத்தியா யுன்சீர் பாதம்
பணிதுநான் தொழுதே னில்லை
முத்திகள் பெறுவ தெப்போ
முக்கண்ணா ஞான மூர்த்தி
அத்தனே உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

12. தாண்டவ மூர்த்தி யுன்னைச்
சரியையால் கிரியை தன்னால்
நீண்டதோர் யோக ஞான
நெறியிலே நின்றே னில்லை
பூண்டுன்னைத் தொழுதே னில்லை
பொற்பதம் பெறுவ தெப்போ
ஆண்டரு ளுமையாள் பங்கா
அகரா நமச்சி வாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. திருத்திய கொன்றை தும்பை
திங்களோ டரவு தானும்
பொருந்தவே சடையில் வைத்த
புனிதனே நின்பொற் பாதம்
பரிந்துநான் செய்த தோஷம்
பலவினை தொலைவ தெப்போ
அருள்தரு முமையாள் பங்கா
அகரா நமச்சி வாயம்.

14. தீதாய்நான் செய்த பாவம்
செப்பிடி லெண்ண லாமோ
நீதியா லுன்னைப் போற்றி
நெறியிலே நின்றே னில்லை
ஓதிலா வுன்பொற் பாதம்
உறுதியாய்ப் பெறுவ தெப்போ
ஆதியே உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

15. துலைவற்ற நெஞ்சத் துள்ளே
துக்கமாங் கவலை யாலே
நிலைவுற்று உன்னைப் போற்றி
நெறியிலே நின்றே னில்லை
புலைவற்ற நாயகனே யுன்
பொற்பதம் பெறுவ தெப்போ
அலைவுற்ற வுமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

16. தூக்கிய பாதந் தன்னை
தோத்திரம் பலவுஞ் செய்து
வாக்கினால் வணங்கா வண்ணம்
மலர்ப்பதம் பெறுவதெப்போ
நோக்கிய வன்பர்க் கெல்லாம்
நோக்கினா லுதன் வன்மை
ஆக்கிடு முமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தெண்கடல் நஞ்சை யுண்ட
தேவர்கள் தேவா வுன்றன்
முண்டகத் திருந்தாள் போற்றி
முத்திநான்பெறுவ தெப்போ
பண்டுநான்செய்த பாவம்
பலவினை தொலைவ தெப்போ
ஆண்டருள் உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

18. தேரணி யோடும்வீதி
திருவரு ளுடனே வந்து
ஆரணி நரியை யன்று
பரியாக்குந் தம்பி ரானே
சீரணி யுன்பொற் பாதம்
சிக்கெனப் பிடிப்ப தெப்போ
ஆரண மன்று ளாடும்
அரகரா நமச்சி வாயம்.

19. தையலார் கங்கை தன்னைச்
சடையினின் மறைத்தார் பாதம்
மெய்யிலே நீறு பூசி
மிக்கவைந் தெழுத்தை யோதி
உய்ய நான் தொழுதே னில்லை
உன்பதம் பெறுவ தெப்போ
ஐயனே யுமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

20. தோடவீழ் கோதை மாதர்
தொடுத்தகண் வலையிற் புக்குத்
தேடருந் துணையாய் நின்ற
சிவனினைந் தெழுத்தை யோதேன்
பாடகச் செம்பொற் பாதம்
பங்கயத் தயன்மால் காண
ஆடக மன்று ளாடும்
அரகரா நமச்சி வாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நாறுங் கொன்றை மலர்தனையும்
நற்கங் கையையு மணிந்தவனே
வேறுகருத்து மெய்யயர்ந் தேன்
வெப்பமேற அறிவழிந் தேன்
பாறுஞ்சுடருஞ் செஞ்சடை மேற்
பலிக்கங் கொண்ட பரஞ்சுடரே
ஆறுஞ் சுடலை காத்தவரே
அலையா முத்தை யருள்வாயே

22. தேவர் தேவப் பெருமானே
தீரா நஞ்சை யுண்டவரே
ஓதியுள்ளத் துணர்ந்த வர்தம்
முள்ளத் துறையு முத்தமனே
காலன் தன்னைக் காலாலே
கலங்க வுதைத்த கறைக்கண்டர்
ஆவாவென்னு மடி யேற்கு
அலையா முத்தை யருள்வாயே

23. சாலவருந்தி யறிவழிந்தேன்
தளர்ந்தே னுள்ளந்தடுமாறி
ஓல மிடவே அடியேனை
உணரா திருத்த லுனக்கழகோ
சீலமழிந்து மதி கெட்டுச்
சிந்தை கலங்கி அறிவழிந்தேன்
ஆலம் பொதிந்த கண்டாநீ
அலையா முத்தை யருள்வாயே

24. தேவர்க் காகத் திரைகடலிற்
றீரா நஞ்சை யுண்டவரே
மூவர்க்கரிய முழுமுதலே
முத்துக் கினிய முழுமணியே
ஆவி கலங்கி அறிவழிந்தேன்
அண்ணா மலையி லமர்தவனே
ஆவி தளர்முன்னபயமென்றேன்
அலையா முத்தை யருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. மெய்யுங் கலங்கி அறிவிந்தேன்
வேளமுண்ட விளாங்கனி போல்
கையு மயர்ந்து கருத்தழிந்தேன்
கருத்தாய் நின்றேன்கண்காணச்
செய்யும் வகையொன் றறியாமல்
தியங்கி நின்றேன் சிவபரனே
அய்யுங் கலங்கி அறிவழிந்தேன்
அலையா முத்தை யருள்வாயே

26. காண்டற் கரிய கண்ணுதலே
காம னுடலைப் பொடியாக்கி
கொண்ட வீரங் குறையாமல்
கொலத் துடனே முன்நின்றாய்
தோன்றற் கரிய சுந்தரனே
சூலபாணி சுடர் விளக்கே
அண்டர்க் கரசே அம்பலவா
அலையா முத்தை யருள்வாயே.

27. மாறி யுடலும் மிகவருந்தி
மனமுங் கலங்கி அறிவழிந்தேன்
வேறு கருத்துஞ் செயவயர்ந்தேன்
வெம்மை யதனா லறிவழிந்தேன்
பாறுஞ் சுடரே வெண்டலையிற்
பலிகொண்டருளும் பரஞ்சுடரே
ஆறுஞ்சுடலை காத்தவரே
அலையா முத்தை யருள்வாயே.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் அகவல்

ஆதிஅம் பிகையே அகிலம் படைக்க
முக்குண மும்மூன் றுருவம தானாய்
உருக்கிய பொன்போ லொளிபெறு மேனி
ரசோகுண சத்தி யாயுற்ப வித்து
இலட்சுமியை யும்பிர மாவையும் படைத்தாய்
காயம் பூநிறத் தமோகுண சத்தியாய்
அரனை யுஞ்சரஸ் பதியையு மாக்கினாய்
சந்திர ஒளிபோற் சத்துவகுண சத்தியாய்
இருஷிகே சனையு முமாவையும் பயந்தாய்
பிரமாவைச் சரஸ் பதியுடன் சேர்த்துப்
படைத்தற் றெழிலைக் கவினுறச்செய்தாய்
இருஷிகே சனுட னிலச்சுமியைச்சேர்த்துக்
காத்தற் றொழிலைக் பாங்குறச் செய்தாய்
அரனுக் குமாவை யன்புட னருளி
அழித்தற் றொழிலையு மாக்குவித் தவளே
மகேஸ்பரி யாகி மகேஸ்வர னுடனே
மறைத்தற் றொழிலை மதித்துச் செய்தாய்
சதாசிவ னுடனே பராசக்தி யாகி
அருளற் றொழிலை யருளுடன் செய்தாய்
அலகிலா கருணை யானந்த வல்லி
உலகெலா மழிந்த வூழிகா லத்தில்
செகமெலாம் படைத்த செகமா தாவே
ஐங்கரக் களிற்றையு மாறுமுக னையும்
அருளுட னீன்ற ஆதியம் பிகையே
தொண்டருக் கிரங்குஞ் சூடகச் செங்கையாய்
கந்தனை முனிந்தரன் கடலில்மகரமாய்
வந்திடென் றுரைத்து வரந்தவிர்த் திடவே
அரசுசெய் பார்பதி அதியர சனுக்கொரு
திரைசெறி மடந்தையாஞ் சீர்மக ளாகி
வளர்ந்திடு நாளிலுன் மாதவப்பெருமையால்
களங்கரியோனுங் கணத்துடன் சென்று
மக்க ளிகழ்ச்சிசெய் வலைத்தொழி லியற்றி
மிக்க மகரம் வீறுடன் பிடித்து
அனைவருங் காண அருஞ்சாபத் தீர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனைமணம் புரிந்ததுன் தவவலி யல்லவோ
தக்கன் தவத்தால் தட்சாயணி யாகி
மோகமார் தக்கன் முடிதடிந் தவன்செய்
யாகசங்கார மியற்றசங் கரியே
மலையரசன் தவத்தால் மலைமங்கை யானாய்
மலையத் துவசபாண் டியன்செய் தவத்தால்
விச்சா வதியெனு மெல்லியல் வயிற்றில்
தடாதகைப் பிராட்டியாய்த் தனமுன் றுடனே
தானவ தரித்துத் தரணியை ஆண்டாய்
கலைமுழு துணர்ந்த காஞ்சிகா மாட்சி
கருப்புவில் தரித்த காம கோட்டத்தி
முப்பத் திரண்டறம் முதன்மையாய்ச் செய்து
காமாட்சி யாகிக் காத்தானை யீன்றாய்
சங்கரன் வேடனாய்த் தான்வரு நாளில்
அருச்சுனன் மனதை அறியும் பொருட்டும்
முகா சூரனைக் கொல்லு நிமித்தமும்
காடேறி யென்னக் கடுகிநீ வந்தாய்
காசியி லுள்ள கங்கையில் மூழ்கிக்
கறைகண்ட னோடுகலந்திட வெண்ணி
காசி யாத்திரை வந்திடு வழியில்
காமபோ சனெனுங் கானக ராசன்
கண்டுமோ கித்துக் காதல் பேசிட
ஆயுத பாணியா யமரது செய்து
நாரா யணனா லவனுயிர் போக்கினாய்
பூமிதே வியுனைக் கண்டழுது வணங்கியென்
பாரந்தீர்த்திடுவெனப் பரிந்து வேண்ட
மதுகை டவரை வதைத்தவள் நீயே
இடபவா கனத்தில் மகேஸ்வரி தேவியும்
ஐரா வதத்தில் இந்தி ராணியுஞ்
சங்குசக் கரத்துடன் நரசிங்கி தேவியுஞ்
சிங்கவாகனத்தில் சாமுண்டா தேவியும்
மயில்வா கனத்தில் கௌமாரி தேவியும்
அன்னவா கனத்தில் சரஸ்வதி தேவியும்
கடாவா கனத்தில் வாகி தேவியும்
கருடவா கனத்தில் வைஷ்ணவி தேவியும்
பதினெட்டா யுதத்தொடு பக்கத்தில் வரவே
வலதுபுறத்துக் கீழ்தர முதலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது புறத்துக் கீழ்க்கரம் வரையும்
அட்சமாலை பரசுகதை பாணம்
குலிசம் தாமரைப் பூவில் குண்டிகை
தண்டம் சத்திவாள் சர்மம் சங்கம்
மணிமது பாத்திம் சூலபாச சக்கரம்
பதிணொண்ணா யுதமும் பதிணெண் கரங்களில்
தூக்கிய சூரி துர்க்காம் பிகையே
தும்பரலோ சனனைத் துணித்தவள் நீயே
சண்டமுண் ர்களைச் சங்கரித் தவளே
சும்ப நிசும்ப ரத்தபீசா சுரரை
நிர்மூல மாக்கிய நித்தியமா னவளே
தேவரை வென்றுதே வேந்திர னான்
மகிடா சூரனை வதைத்தவள் நீயே
பர்வத ராசபத்திரி பிரம்ம சாரினி
சந்திர கண்டா கூஷ் மாண்டா
ஸ்கந்த மாதா கார்த்தி யாயினி
கால ராத்திரி மகா கெளரி
சித்திப் பிரதா வெனுநவ துர்க்கைகள்
ஆனவள் நீயே அகிலாண்ட நாயகி
செயமுள்ள பரிகலச் சேனைக ளுடனே
சேனைகா வலந்தீர்த்தநா யகியுங்
குருநாதர் காத்தவ ராயனும் போற்ற
உற்றமுத்து மாரி யென்றொரு
வித்தகத் திருவிளை யாடல்செய் தவளே
சிவசின்னத்துடன் சீரா வணிந்து
இரத்தினக் கம்பளம் விரித்து அதன்மேல்
வெள்ளை விரித்து வெள்ளையின் மேலே
ஏழு மாத்திரைக் கோல்களை நிறுத்தி
மாத்திரைக் கோல்மேலேழ் செப்புக்குட நிறுத்திச்
செப்புக்குட மேலேழ் செவ்விளநீர் நிறுத்தி
செவ்விளநீர் மேலேழு தேசிப்பழ நிறுத்தி
தேசிப்பழ மேலேழ் திருநீற்றுப் பழநிறுத்தி
திருநீற்றுப் பழமேலேழ் பாக்கு நிறுத்திப்
பாக்கின் மேலேழ் பம்பர நிறுத்தி
பம்பரம் மேலேழ் மிளகு நிறுத்தி
மிளகின் மேலேழ் கடுகு நிறுத்தி
ஏழ்கடுகின் மேலே மூசி நிறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசியின் மேற்றலை கால்மேலாய் நின்று
அரிய தவமு மநேகநாட் செய்தபின்
ஆதி சிவன் வந்துன்னெதிர் நின்று
என்னவரம் வேண்டுமேந்திளை கேளென
பூமிதே வியெனைக் கண்டு வணங்கியென
பாரந்தீர்த் திடுவெனப் பரிந்து வேண்டியதால்
பதினெட்டு முத்துவகை பார்பராந் தீர்ப்பதற்குத்
தாரா யெனக்கேட்கத் தயாபரனுந் தானளித்தார்
அப்போது நீயு மன்பாய் மனமகிழ்ந்து
என்னை எப்போதும் நினைந்துருகு வாருடைய
வேதனைகள் தீர்ப்பதற்கு வேண்டியவை யான
பொற்கரகம் பொற்சிலம்பு பொற்பிரம்பு வெண்ணிறு
வேப்பதிருக்குழையும் மெய்யுடுகும் வேணுமென்றாய்
கேட்டவர மெல்லாங் கிருபையுடன் தானருள
மகாதேவ னார் முத்து மாலைதனை கையேந்தி
இந்தநல்ல முத்தருமை யானறிய வேணுமென்று
ஆதிசிவன் மேனியிலேஅள்ளியிட்டாய் முத்ததனைக்
காளகண்டன் மேனியிலே கனமுத்து மேபரந்து
வருத்த மிகவாகி வன்னெருப்பாய் நின்றதுவே
பொறுக்கவரி தாகையினால் போதமுட னாதிசிவன்
மதனை எரித்தோன் மகாமேர்மை வில்வளைத்தோன்
ஈரேழு லோகமெல்லா மீடேற்று மாதிசிவன்
வேலவனை ஐங்கரனை மேன்மையுடன் பெற்றபிரான்
சால மனந்தளர்ந்து தான்பொறுக்க மாட்டாமல்
அம்மையே யுன்னை ஆதிசிவன் தான் நினைக்க
அதிசீக் கிரமாக அருளுடனே அருகில்வந்து
முத்தெறிந்த வக்கினியை முதன்மைபெற வேவாங்க
அன்புடனே யுன்னை ஆதிசிவன் பார்த்து
வேதா விறுமாவை விட்டுணவை ஆகமத்தைச்
சந்திரனைச் சூரியரைத் தானவரை வானவரை
இந்திரரைத் தேவர்களை யீரே ழுலகமதைப்
பாராம லேயெறிந்தாய் பட்டமுத்துச் செய்வருத்தம்
பொறுக்க முடியாது பூவுலகி லுள்ளவர்கள்
இந்த முத்தை பூவுலகோர்க்கெ றியாதே யம்பிகையே
உன்னுடனே யென்னை யுகந்து பணிதவர்க்கும்
வயது கிழவமதாய் வந்தவர்கள் தங்களுக்கம்
அன சிறுகுழவி ஆகிவரு பாலகர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிசேர் கருநிறத்து மங்கையே இப்போது
அறியாமல் முத்தெறிய போகாதே யம்பிகையே
சதிகேடர் துர்ச்சனர்கள் சண்டாளர் பொல்லாதார்
அவகேட ரேழைகட்கு அனியாயஞ் செய்தவர்கள்
வம்புகளுரைத்தோர்கள் வாழ்வினைக் கெடுத்தோர்கள்
துன்பங்கள் செய்தோர்கள் துஞ்சநஞ்சையிட்டோர்கள்
கற்பை யழித்தோர்கள் காமஞ்சேர் நெஞ்சுடையோர்
வட்டி கொடுத்து வாங்குமகா பாவிகட்கும்
பொல்லாத முத்துக்களை போயெறி நீ பத்தினியே
கோல்கொண்டு ஆவின் குலந்தடுத்து நிற்பவற்கும்
ஆவை யடித்து அநியாயஞ் செய்தவர்க்கும்
அபிராமி பூசையிலே அகந்தைபல செய்தவர்க்கும்
கொடியவை சூரிதனைக் கொண்டெறிநீ பத்தினியே
என்று சிவனாரியம்பவே மின்னிடையும்
ஏகினாள் காஞ்சி நகரிந்து தில்லைவனம்
திதிகோண் மான சிங்கா சனத்தில்
அறுகோண முந்தொழ வமர்ந்த காரணியே
ஐயுங் கிலியுஞ் சௌவு மாகிய
துய்ய சுருதி மந்திரசுந் தரியே
ஐம்பத் தோரட் சரவுற் பனமே
லம் பீசப் பிருதிவி வடிவி
வம் பீச வமிர்த வடிவி
ரம் பீச அக்கினி வடிவி
யம் பீச வாயு வடிவி
உறம் பீச ஆகாய வடிவி
ஸம் பீசச் சகாலத்தும வடிவி
ஐம் பீசச் சரஸ்பதி வடிவி
கிறிம் பீச விலட்சுமி வடிவி
ஹிலீம் பீசக் காளி வடிவி
பூத நாதனாற் பூசிக்கப்பட்டவளே
பிரம விட்டுணவாற் பிரார்த்திக்கப் பட்டவளே
சரவண பவானி சங்கரி துரந்தரி
மகிட வாகினி மாகிமா தங்கி
காமகோட் டத்தி கங்கையபி ராமி
சாம்பவி சண்டி சாந்தை மகேஸ்வரி
அனந்தவி பைரவி அன்ன பூரணி
மகோற் சாகி மகாபல முள்ளவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துரு நாசினி சர்வபய நாசினி
ஜயத்தை தந்து கீர்த்தியைப் பெருக்குவாய்
சவுக்கியத் தோடுசௌ பாக்கிய மளிப்பாய்
பத்தியாய் நினைப்போர்க்கு பல செல்வம் கொடுப்பவனே
சர்வ வியாதியையுஞ் சங்கரிப் பவளே
கல்விபுகழ் செல்வம் நோயற்ற வாழ்வு
திரிகால ஞான முணர்த்திடுந் தாயே
திரிபுரை வல்லயை ஜெகன்மா தாவே
அபய மபயம் அதியம் பிகையே
அபய மபயம்மா ஆதிசத்தி மகமாரி
அபய முனக்கபயம்.

* * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் காவியம்

1. அமிர்தபரி பூரணி நளினவிழி காரணி
அன்னபரி பூரணி சொர்ணமருள் பாகரி
திமர்ததிமி திமிதியென நடனமிடு மகமாரி
தேவர்தொழு தேவிதன் தாளினை வழுத்தக்
குமிர்தநல் வாயுமும் மதமுமிரு புயமும்
குடவயிறு நுதல்விழியு முடையம்மார் பழகும்
திமிர்தமா மும்மதத் தைந்துகர முடையதொரு
தெந்திவயி றன்சரண மென்றுநற்றணையே

2. துணையான கன்னனூர் மகமாரி யம்மைதாள்
தொழுதவர்க்கருள் கொடுத்தினிதுகந் தருள்வாய்
இணையான தெய்வங்கள் புவிமீதி லுண்டோ
உன்கிருபை தந்துநீ யெங்கள்துயர் தீர்ப்பாய்
கணையாளி கையில் தரித்தவன் தங்கையே
காவலா யிருமென்று காத்தானை யீன்றாய்
அணையாக வந்துன் னபயமே தருள்வாய்
ஆதியே சோதியே மகமாரி யம்மனே

3. மகாமாரி யென்றுனை நினைப்பவர்தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலேற்பனங் கண்நோய்
பகைதோஷ மானதொரு நோய்கிரக திவினைகள்
பாடுபட் டோடுமுன் நாமங்கள் சொன்னால்
அகமகிழ்ந் தஞ்சலென் றுன்கிருபை தருவாய்
அனலெனுங் கனல்தனித் தாளநினை யம்மா
சகலகலை வல்லியே கன்னனூர் வந்த
சத்தியே சித்தியே கமலா சனத்தியே

4. கமலமுக மழகொழுகு தெரிவையுமை யவநீ
கலைபல தெரிந்தருளு மரகர சிவாயம்நீ
அமலபர மேசுபரி விமலகிரு பாகரி
அரலோக பரலோக ஆனந்த ரூபிநீ
கனகமக மேருதனை வில்லாய் வளைத்தநீ
காமனொடு தக்கன் சிரந்தனை ஒடித்தநீ
அனவரத முன்கிருபை தந்திரட் சிப்பாய்
அதிகவர முடையதொரு மகமாரி யம்மனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அதிகவர முடையதொரு தவசது புரிந்தாய்
அத்தனார் கிருபைபெற் றகமிக மகிந்தாய்
மதிவதன முடையதொருமங்கை நீ யருளென்ன
மாமறையு முத்துநீ தாவென் றுரைக்க
நதியரவு பிறைசூடு நாதனும் தருளால்
நண்ணிதலு மோரொன்று சோதிக்க நல்கிச்
சதிரமுறு கனல்தணித் ததிகவர மேபெற்ற
சத்தியே கன்னனூர் மகமாரி யம்மனே

6. கன்னனூர் வந்தநீ கம்பையில் வளர்ந்தநீ
கரகமதெடுத்த நீ குழையது பிடித்தநீ
முன்னமே வந்தநீ முப்புர மெரித்தநீ
மூவர்தொழு மூர்த்திநீ மூவுலகை யாண்டநீ
பன்னுமறை வேதம்நீ புன்னைநிழல் வந்தநீ
பங்கயச் செல்விநீ பாரளந் தவளும் நீ
அன்னையே மின்னையே யெனையாள வந்த
ஆதியே சோதியே அகிலநா ரணியே.

7. நாரணி நால்வருண சாதனைக் காலாய்
நவரத்ன நால்வேத நல்லிரத மீந்து
பூரணம தானபொற் கும்பமது வைத்து
பூவையர்கள் மலர்சொரிந் தேகவரி வீச
வாரணத் தேவர்வலு வீரர்புடை சூழ்
வாசுகி தன்னைவட மாகவே பூட்டிக்
காரணம தானபொற் றேர்மீதி லேறிவரு
கன்னனூ ராச்சிகா மாட்சியா னவளே

8. ஆச்சிநீ அபிராமி யாகவந் தாயே
ஐயனொடு பரிகலஞ் சூழவந் தாயே
பேச்சி பெருமாளுடன்பிறந் தாயே
பேரான மீனாட்சி யாக வந் தாயே
காட்சிதந் தேசேரி காக்கவந் தாயே
கனல்தணித் தினித்திக வரமளித் தாயே
வாட்சி சடைச்சியென வந்தவளும் நீயே
வடிவான ஆயிரங் கண்ணியா னவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆயிரங் கண்ணிநீ அகிலமுழு தாளு நீ
அட்சரம தானநீ அக்கினி தணித்தநீ
வேயிரு புயத்திநீ வேதமுத லானநீ
வேதாந்த ரூபிநீ வேதனை தணித்தநீ
காயுகன லாச்சிநீ காமன் சிலைச்சிநீ
கச்சனி முலைச்சிநீ காரண நிறத்திநீ
தாயும்நீ தந்தைநீ தந்திமுக னைப்பெற்ற
தையலே மகமாரி யானமா தரியே

10. மாதரி புரந்தரி வரந்தரு குமாரி
மாசது விலாதமதி போலழகி னாளே
ஆதரியுன் ஆதரவிலா தொருவ ருண்டோ
ஆருதவி சேயதனை ஆளநினை யம்மா
பாதிரிதரித்தபர நாதருனாடும்
பாதமல ரேதுணை பராபர பவாணி
நாதரி நடம்புரி நலம்புரி வராகி
நரலோக பரலோக நாரியம் பிகையே

11. அம்மை நீ அமிர்தத்தி லன்றுதித் தாயே
அழகான வலரிமல ராகிவந்தாயே
செம்மைநீ தேசியின் கனியுகந் தாயே
செவ்வந்தி மலர்மீது சேர்ந்திருந்தாயே
எம்மையா ளரசன் மகளாக வந் தாயே
எழிலான எக்கிஷந் தனில்வளர் தாயே
உண்மையாய் அக்கினி தனிலுதித் தாயே
உலகுதனி லதிகதவ மானநா யகியே

12. உலகுதனில் மகமாரி யாயவ தரித்து
ஓதரிய முத்துவகை தானது வுகந்து
நலமான வீசருக் கேமுந் தெறிந்து
நாரியுமை யாய்வந்துநற்கிருபை செய்து
கலைசெறியு மாரியுரு வாகியே வந்து
காத்தானை நல்மகவ தாகவே யீன்றாய்
நலமான தொட்டிய னிடமாக வந்த
நாதனார் நாரணன் தங்கையா னவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நாதனார் நான்முகன் கட்டளை யிருந்தாலும்
நாடுமோஉனையன்றி நம்பின பேர்க்கு
வேதனைகள் முடுகுமோ நோய்பிணிகளணுகுமோ
வேறுமொரு துட்டப்பசாசுவினை வருகுமோ
பாதமே கெதியென்று நம்பின பேர்க்கொரு
பயமுண்டோ செத்தபிண மற்றுயிர் கொள்ளா
நீதியோ வுன்னை நினைப்பவர்க்கிடறுவர
நீதியோ சோதியே காத்தவ ராயசனே.

14. காத்துநீ சேரிகனல் மாற்றவந்தாயே
கட்டாரி சொட்டயம் கையம்பு சவளும்
மாத்திரைக் கோலுடன் சாற்றுபரி வட்டம்
மத்தள முடுக்கைதவில் மிக்கவிரு தூத
நாற்றிசைக ளெங்கணும் கீர்த்தியிசை பாட
நான்மறைக ளோதவெண்டாமரை யிரட்ட
போற்றிசெய் தேபுஸ்ப மாரிமழை பொழியவரு
பூலோக ராசனே யீசுபரி பாலனே.

15. ஈசனுடன் நாலுமறை வேதமறை வேதநூல் வாழி
இந்தமதி யொத்தளக வீசபரி வாழி
வீசுபுக ழுறுராச சிங்கனும் வாழி
விளைசெந்நெல் மழைபெய்து நீடுழி வாழி
வாசமுள நாடுநகரெங்கணும் வாழி
வரிசைபெறு சைவகுலமரபுமிக வாழி
ஆசுதமிழ் குற்றம்பொறுத்துநிதம் வாழி
அமிர்தபரி பூரணி வாழவா ழியவே

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி வயிரவர் துதி

1. தேவர்கின் னரர்மனிவர் சித்தர்கண நாதர்
ஜெயஜெய வெனப்பவிந் தேயடியி றைஞ்ச
ஆவதனி வேறுபர னுஞ்சுடலை தன்னில்
அரியதொரு கங்காள வேஷமது கொண்டு
பூவுல கதிரவே தில்லை நாட மாடும்
பூவணே முச்சூல மும்பிடித் தவனை
காவல னேமனமி ரங்கியருள் புரிவாய்
கங்காள தேவனே ஆதிவயி ரவரே

2. ஆதிதரு மில்லம்பு வல்லயஞ் செல்லை
அழகான மழுவீட்டி திரிசூலம் வாளும்
நீதியுடனே தரித்தேபரிக லத்தினொடு
நீடுபுகழ் தக்கனிட யாகம தழித்த
சோதியே சுடலைதனி லாடுபர னாரின்
துய்யசுத னெனவந்த தூமறைப் பொருளே
ஏத்திய வெள்ளிவிடை மீதெழுந் தருளி
என்முன்னே வந்தருளு மாதிவயிரவரே

3. யவ்வென்று மௌவென்று மினியமறை யென்றும்
ஏகமாய் நின்றபர நாதனாய் வந்து
சௌவென்று நௌவென்று சகல தற்பரமென்று
தானென்று நானென்று கசலகலையாகி
உவ்வென்று முயர்மறைப் பொருளதாய் நின்று
ஊமையொரு கங்காள வேஷமது கொண்டு
யவ்வென்று முச்சுடலை யாடிவினை தீர்க்கும்
வங்ஙவடு காயவெனு மாதிவயி ரவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிரவர் அகவல்

சீர்புகழ் வயிரவர் செந்தமி ழுரைக்கக்
கார்பக் மேனிக் கணபதி யருளே
ஆதி பராபரி அருளிய நுதல்விழி
சோதிபோ லெழுந்து சுடரொளி யாகி
வீதியி லெழும்பி விசும்பெலாங் கடந்து
ஓதிய மந்திர உச்சா டனமாய்
ஓங்கா ரங்கொண் டொருமுக மாயி
ஆங்கா ரங்கொண்ட கார மாகி
அக்கினிச் சொரூப வனபல கதிராய்
விக்கினந்தீர்க்கும் விறும வயிரவா
அப்பமு மவலு மாலங்காயும்
செப்பிய மாங்கனி திகழ்தட் டுறட்டியும்
தேங்கத லிப்பழம் செப்பிய பலாப்பழம்
அத்த னையெல்லா மருந்திய வயிரவா
ஐயுங் கிலியு மகோர வயிரவா
சவ்வுங் கிலியுஞ் சங்கார வயிரவா
சிறியுங் கிலியும் மான வயிரவா
மௌவுங் கிலியும் ஏறு வயிரவா
முச்சூல வயிரவா முக்கணீ சுபரா
அக்கினி வயிரவா ஆனந்த வயிரவா
சத்தியோ டருள்புரி தற்பர னாகிப்
பாம்பெலும் பணிந்த பராபர வஷ்துவாய்ச்
சாம்பலு மணிந்து தலையோ டேந்திச்
சுடலையில் நின்று சுடலைகாத் தவனே
கெங்கைக் கரையிற் கிருபா கரனாய்
நம்பின பேர்க்கு நற்பத மருளிப்
பூமடை தன்னிற பூசல் புரிந்து
ஆலை நிழலி லமர்ந்துறை சிவனே
பாதக்கொலிசு பளபளென் றிசைப்ப
நாதவீணைகள்நலம்பெற விளங்க
ஆதி சிவனா ரருள்புரி வயிரவா
செம்பொன் மேனியுந் திருநீற்றழகும்
உச்சக்குடுமியும் உதிர வாயும்
அலறிய பல்லும் அண்ணாந்த பார்வையுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிற்றரித்த தண்டை பாடகமும்
கழுத்திற்கட்டிய கங்கண மாலையும்
கையிற் பிடித்த சண்டகோ டாலியும்
அரையிற் கட்டிய காவியொட்டி யானமும்
அங்கம் முழுதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக்கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிச்சடையிற் குலாவிய பிறையும்
பச்சைமேனியும் பரிந்த முகமும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அக்கினிச் சுடலையி லவ்வேஷ மானாய்
திக்குப் பேய்களைச் சிதற அடித்துப்
பக்கப் பசாவைப் பறக்கத் துரத்தி
எற்றி மீதித்து ஈடழித் திடுவாய்
ஐயனே யுந்த னருளாண் டானால்
வையகப் பிணிபோய் வாதபித்த கபம்
துய்யவி யாதிகள் துகபொற் பறக்க
எதிர்க்கும் வியாதியை இருள்போல் வெட்டி
மெய்யனே யுன்னருள் மேதினி விளங்க
ஐந்தெழுத் துச் செபித் தன்போ டரனே
நம்பினேனுன்னை நமக்கருள் தருவாய்
கரிமுக முடைய கற்பகா வருள்தா
திருவருள் புரியுஞ் சிவனே யருள்தா
பார்பதி யிடமுறை பரனே யருள்தா
சித்த மிரங்குஞ் சிவனே போற்றி
மத்தணி மாலின் மருகா போற்றி
ஞாளியில் வந்து நமக்கருள் புரிந்து
கூளிகள் மாயக்குண்டெறிந் தவளே
அன்பாய் வந்துஅடியேன் செய் பூசையை
நண்பா யேற்று நமக்கருள் புரிவாய்
ஆனகபாலமு மழகிய பிரம்பும்
ஞானபூ ஷணமும் நமக்கருள் காட்டி
சங்கூர்ந்த மார்பில் தனியொளி காட்டிக்
எங்களை யிரட்சித் தருளவாய் போற்றி
இன்பமாய் வந்து யானசெய் பூசையை
நண்பாயேற்பாய் நமஸ்தே நமஸ்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிரவர் காவியம்

1. திருமருவு பரனுதவு ஆதிவயி ரவர்மீது
செந்தமிழ்ப் பாமாலை செப்புதற் கோதான்
கருமருவு விகடதட கரிமுகவ னேயுனது
கமலமல ரடியிணைக ளதனைநினை வுறவே
மருவுதிரு வரசனும் பிரமனுட னுறையும்
மாதுகலை சரஸ்வதியு மனதினு ளிருக்க
அருமருவு வடுகனெனு மொருசடவு ளுனதுதிரு
அடியிணைக ளொருபோது மனதில்மற வேனே

2 .மறவாம லருள்தில்லை மன்றுள்நின் றாடி
மனுவோர் பிணிதீர வருவோர் நீ ரலவோ
குறமாது தனைமேவு குகனோடு பொருசூரர்
குலர்மாள வேலேவு குமரவே ளலவோ
திறமாக வருகாளி திரிசூலி யுடனாடு
சிவனார்தன் மகனாக வவோர் நீ ரலவோ
இறவாத முனிவோர்கள் தொழுமேவு கயிலாய
மணிவாச லுறையீசர் புகழோது வோமே.

3. ஓதுமோங் காரமுக் கோணசற் கோண
ஒளியாகி வெளியாகி உருவாகி நின்று
மாதுசுந் தரிகாளி யுடநடன மாடிவரு
வயிரவ சொரூபமென வருவரா பரனே
பாதுகாத் துலங்க ளெங்கணும் நின்று
பலபே ரிடும்பூசை வேள்விக ளுகந்து
காதிலிரு குண்டல மணிந்தவரு கின்ற
கருணைபெறு நூற்றெட்டு வயிரவரும் நீயே

4. நீயே றிங்ஙாசன த்தனி லிருந்து
நின்னருள் புரிந்துபூ லோகந் தழைக்க
நீயேயீ ரேழு அண்டம் பயங்கொள்ள
நின்றுதான முப்புரத் தைத்தகன மாக்கி
நீயே மதன்றனை யெரித்து முக்கோடி
நிலையான தேவரை யித்தவனும் நீயே
நீயேவெண் ணீறணிந் தேசுடலை நின்றாய்
நித்தவே கத்தனே நிலவுபுனை வோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நிலவுபுனை குலவுசடை யோனுருவ மாகி
நிறுமான வயிரவ சொரூபமென வந்து
அலிகுசூ லாயுத கபாலமு மேந்தி
ஆதிவயி ரவராகி வந்தமெய்ப் பொருளே
சூலவுவெள் ளிலைசெங் கருமபினொடு பூகமடல்
குங்கிலிய தீபமொடு செங்கமல மலரும்
இலகுமகில் சந்தணங் கஸ்தூரி கற்பூர
மிளநீ ருடன்மடைக ளேற்றுகந் தவனே

6. ஏற்றுநீ ரட்டவயி ரவராக வந்து
எங்கணும் பலபூசை வேள்விக ளுகந்து
காத்துநீ கங்காள வயிரவசொ ரூபமொடு
கருணைபெறு நூற்றெட்டு வயிரவரு மாகி
பாத்துநீ யுலகமதி லெங்கும் பரந்து
பலிகொண்டு துர்க்கைக் களித்தவரும் நீயே
வேற்றுருவ தாகவே வந்தேழு கன்னியை
மணம்வேட்டு மென்மைபெறு விறுமவயி ரவரே

7. வயிரவ சொரூபமென வந்ததற் பரனே
வடுகவயி ரவரென வுதித்தசுந்தரனே
எயிரவ வனத்தில்வரு பூதப் பசாசுகளை
எறிசூலம் வேல்விட் டெறிந்தவரும் நீயே
பயிரவி யுடன் சமய மாகிநின் றவனே
பலவேஷ வுருவாக வுலவுதற் பரனே
உயிருமுட லும்பொருளு மாகி நின்றவனே
உத்தண்ட ஆதிவயி ரவரான பொருளே.

8. பொருளான ஆதிசங்காரா சிவாயம
போகாத பிணிதொலைத் தவனே சிவாயநம
இருளான ரெத்தவயி ரவரே சிவாயநம
வீரேழு புவனமு நிறைந்தாய் சிவாயநம
அருளான ஆதிசங்காரா சிவாயநம
அன்பர்க்கு அன்பான ஆதி சிவாயநம
மருளான வுன்மத்த வயிரவ சிவாயநம
மண்டலத் தோர்புகழ நின்றாய் சிவாயநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சிவாயறிங் காரமென வந்தவோங் காரனே
சித்திதரு நித்தியம தானசங் காரனே
உபாயமது செய்வதற் கேயுதித்தவனே
உண்டென்ற வர்க்குதவு முண்மை நாயகனே
நவாயமெனு மட்சரம தாகிநின் றவனே
நான்மறைக ளும்புகழும் நடுவான தேவனே
மவாயறீங் காரவொங் காரத்து நித்தமெய்ப்
பொருளாகி நின்றதொரு ஆதிவயி ரவரே

10. ஆதியே யெங்களை யிரட்சிக்க வந்தநீ
அண்டபகி ரண்டமு மடுக்காய் நிறைந்தநீ
சோதியே சுடரொளிய தானதொரு கடவுள் நீ
துட்டவயி ரவர்கோடி சூழவருபவரு நீ
நீதியே யுந்தனை நினைப்பவர் தனக்குமுன்
நிற்குமத கரிகளொரு திக்கிலோ டாதோ
ஊதிபம தானதொரு கண்கண்ட தெய்வமே
உன்னருள் புரிந்துதவு முண்மைநா யகனே

11. நாயகம தானதொரு நாதா நமோநமோ
நாடு புவனங்களு நிறைந்தாய் நமோநமோ
தாயான ஆதிசங்காரா நமோநமோ
சதுர்மறை புகழ்ந்தவயி ரவரே நமோநமோ
பாய்பரிகள் தலையிடற வருவாய் நமோநமோ
பாரலகி லதிகதே வதையே நமோநமோ
நாதனே யென்பிழை பொறுப்பாய் நமோநமோ
நாதாந்த ஆதிவயிரவதேவ தேவனே.

12. நமசிவா யப்பொருள தானவரும் வாழி
நான்மறைகள் வாழிசர சோதிமிக வாழி
நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி
நித்தியகல்யாணிபத் திரகாளி வாழி
நமதுகட கரிமுகவர் பாதமலர் வாழி
நங்கை தெய் வானைமண வாளனும் வாழி
உமதுபுகழ் புவிமீதி லோதுவோர் வாழி
உத்தண்ட வயிரவர் வாழவா ழியதே.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் பிரார்த்தனை

வெற்றி விநாயகரின் விளங்குதொந்திநாணே
வேலவர்முன்னே செல்லும் வெற்றியுறு நல்லவரவே
அவுணர்புரமெரிக்க வரன்வளைத்த மேருமலைக்
கொற்றவில்லின் நாணான் கொளர வேபோற்றி
வாளகிரி தனைச்சூந்த வாரியிலே மாயவன்றான்
நீளுமணிப் பாயலாய் நித்திரைசெய் தேகிடந்த
நாகமணி பொதிந்த நாகவர சேபோற்றி
நற்பாம்பு தாராட்டும் நாயகியார் பார்பதிதன்
களபதனக் கச்சே காரிகைகைக் கங்கணமே
காதிலுறு குண்டலமே கவிக்குங்கொற் றக்குடையே
வாசுகி யனந்தன் தக்கன் சங்கன்
குளிகன்பதுமன் மகாபதுமன் கார்க்கோடன்
என்னுமெட்டுவகை யெழில்நாகங் கள்போற்றும்
சகமனைத் துஞ்சுமந்த சமர்த்தர வேபோற்றி
ஏகவுட லைந்துதலை யெழில்நாக மே போற்றி
வெண்மை நிறம்படைத்த வித்தகனே போற்றி
நாகம்நால் சாதி அறுசாதி விரியன்
வரிவண்டு வகையுடன் வளலைநால் சாதி
துவாதச தேளுடன் சோடச மண்டெலி
நட்டுவக் காலி நாய்நரி தவளை
இருபது சிலந்தி எழிலோந்தி செவ்வட்டை
செங்குழவி செய்யான் கருங்குழவி வண்டுவகை
யுமதுதிரு நாமமதை யோத வணுகாது
நாகதம்பிரானே நல்லசங்கு பாலகரே
அடிபணிந் தேனடியேன் அபய மபயம்
அரவர சேயுன் னடைக்கலந் தானோ.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் காவியம்

1. அரியபுவி தன்னிலுயர் மதிவதன முடைய
ஆதியுமை சோதியுரு வாகியுல கெங்கும்
பிரிவினோடு கணநாதர் முனியிருஷி தேவர்
பங்கயன்மால் லிந்திரன் சரசோதி துணையாய்
தெரிவைகத் துருவீன்ற மைந்தர்புகழ் பாடச்
சீருலவு வலவைமண வாளனென வந்த
கரியின்முக முடையகுரு வைந்துகர ரென்னுங்
கணபதியை யொருபொழுதுங் கனவில் மறவேனே

2. கனவனச கொடியிடைதனதுமதி நுதலழகுக்
கற்பிலுய ரிருமாது காசிபர்க் கர்கி
வனிதைகத் துருவென்னும் நாமமது வளருலகில்
அறிவுமிகு வெகுவான மைந்தர்களை யீன்று
அனவரத கிருபையொடு அருணனையுங் கெருடனையும்
அவனிதனி லடிமையாய்த் தனதுபணி செய்யென
அகங்காரங் கொண்டுமே அன்னவளு மோத
அருந்தவக் ரொருவருல கந்தனல் வந்தனரே

3. முனிவரொரு வேள்வியது செய்யவென் றெண்ணி
மூவுலகு தன்னிலுயர் கிருபையது கொண்டு
இனிமைதரும் கத்துருவின் மைந்தர்களை யங்கு
எட்டட்ட திக்கிலும் காவலது வைத்துப்
புனிதமொடு முனிவேள்னி செய்தமிர்த மீந்தபின்
பொங்கரவ மெட்டையுஞ் சங்கரன் தாங்க
வனிதையவ ளீன்றவிரு மதலையர்கள் பகையாய்
வளருலகில் வந்துதவு நாகதம்பி ரானே.

4. வந்துதவு சிந்தைநினை வானதெப் போது
மலைவாவி அகழியடு வானிறல் வங்கு
பொந்திலுறை சிந்துமுதல் புடையனோடு விரியன்
பொறிவழலை எலியரணை வர்க்கமுத லாக
நிந்தனைகள் செய்யாம லெங்கள்துணை யாக
நிகழட்ட திசைகாவல் நீயொழிய வுண்டோ
புந்திமகிழ்வோடு புவி பொங்கல்மடை யுண்ட
பூசுரன மரபிலுயர் நாகதம்பி ரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பூசுரன் மரபன்நீ பொங்கரவ மானநீ
புவிமுற்று முன்சிரசில் தாங்கினவன் நீயே
காசிபன் மதலை நீ கம்சனுக் காகக்
காளியன் போர்புண்ட கட்செவியும் நீயே
நேசமுட நுமதுதிரு நாமமது வோதத்
தீதுதரு விஷநாக மணுகாமல் வந்து
வீசிவிளை யாடிமந் தேடியுறை கின்ற
மேதினியி லருளுதவு நாகதம்பி ரானே

6. அருளாகி யறிவாகி யறிவுமேலாகி
அரவாகி உருவாகி ஆபரண மாகிப்
பொருளாகிய யுமைவிரலில் மோதிரம தாகிப்
புற்றகம் பெற்றுலகில் உற்றமத மாகி
இருளான போதினில் நச்சரவுக் கஞ்சி
ஏழைகள் பயந்துனது தாள்மனதி லெண்ண
மருளதே யணுகாது பற்பல விஷங்களின்
வாயெயிறு கட்டியருள் நாகதம்பி ரானே

7. நாகமே நரர்கூவி ஆலிங்க னங்கள்
நற்பூசை பொங்கல்பால் தற்பண மளிக்க
ஆகமதிற் புளகிதங் கொண்டமிர்த மென்று
அதிகோப மானவிஷ நாகமது வுண்டு
ஏகவுரு வாகிநெடுங் கோவில்குடி கொண்டு
என்றென்று மேகிருபை தந்துதவி செய்து
பாகமக வேதநட நாகசிவ மான
பதிவாழ்வு அருளுதவு நாகதம்பி ரானே

8. பதிவாழ்வு தரமனது கிருபையதுகொண்டு
படமாடி மனிதரெதிர் நடமாடி நின்று
கதியாகி ஆளிமால் சயனபா யாகிக்
காசினியில் ராகுகே தாகியுல கெங்கும்
சதியாகி வாராத தெய்வம்நீ யலவோ
தடமேவக் குயில்கூவ மடவார்கள் போற்ற
விதிமேவு கதிதாவு மதிதூவ வாழும்
விஷநாச மாகிவரும் நாகதம்பி ரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வருநாக சாதினாலறு சாதி விரியன்
வரிவண்டு வலைழநால் பனிரெண்டு தேழும்
இருவெட்டு மண்டெலி நட்டுவக் காலி
இருபது சிலந்திநாய் ஒந்திநரி தவளை
உருவுற்றஅறணைசெவ் வட்டைபுரி குழலி
உமதுதிரு நாமமது வோதவக லாதோ
திருவாக வருநாக ராசனே யுமையீன்ற
செகமதனி லுறைகின்ற நாகதம்பி ரானே

10. உறையவிட மானதொரு ஆலயவி ருட்சம்
உற்றமனை புற்றுமுதல் முற்றிலுஞ் சென்று
மறையவ னிராசனென வணிகர்வே ளாளர்
வந்துனது விதிமுறையி னாலமர்ந் தாயே
இறைவன்முன் னாளிலே நாகநர ரென்று
இவ்வரிசை தந்தன ரெங்கள்துயர் மாற்ற
பறைதாள வொலியோசை நாகசுர மார்ப்பப்
பதிமேலி அருளுதவு நாகதம்பி ரானே

11. பதியனைய வேதியர்கள் தேவர்மனை தன்னிலும்
பரிவுபெறு மரசர்குல மரமதுகள் தன்னிலும்
கதிகள்தரு வணிகர்நரர் குடிகொண்ட மனையிலும்
காராளர் புற்றிலும் கனமோ டுறைந்து
மதியுலவு செகமிது நரர்போற்றி வாழ
வடிவனைய படமதுகள் விரிவுசொலி மேவ
நிதியமென மணிமேவ வுலகாள வந்த
நிமலரணி பணியென்ற நாகதம்பி ரானே

12. பணிகள் தருநவரத்ன தங்கமொடு வங்கம்
பாராளி தன்னிலுயர் முத்துமுத லாக
தணிகைவளர் உங்கள் மணி தங்களுக் கீடோ
சத்தியந் தப்பாத கத்துருவின் மக்காள்
அணியநகை நல்லதென அரனுமுமை யுங்கண்டு
ஆபரண மரக்கியே அவனிபுக ழாக
பிணிகளொடு படுவிஷம் மாறவருள் செய்வாய்
பிரம்மர பானகுரு நாகதம்பி ரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரமாதி கிருபையொடு சரயோக நிதியே
பிசகாத குலதெய்வ சிவதேவ கதியே
அரனா ரிடத்திலே குறையாத பதியே
அடியார்க ளோடுவுற வாடிவரு துதியே
வரமாக வுங்கள்புகழ் சிரமேது தித்தால்
வருவினைகள் நஞ்சுமுதல் மாற்றியருள் செய்து
சிரநாக மணிமேவ வுலகோர்கள் போற்றத்
திருவாக வருகிரண நாகதம்பி ரானே

14. மேவலர்க் புகழ்வாழி திரிலோகம் வாழி
வேதனுமை சரவுபதி மால்சிவன் வாழி
தேவரொடு இந்திரன் கணநாதர் வாழி
தேடரிய நாகர்குல மாநிலம் வாழி
தாவுவிழிக் காசிபன் கத்துரு வாழி
தளிர்மேவு சிரநாக மணிநீடு வாழி
பாவலர்கள் புகழ்மொழிகள் பாடினோர் வாழி
பாரிலுயர் பாக்கியம் தந்தவர்வா ழியதே

15. தந்துதவு சங்கரனுஞ் சாம்பவியும் வாழி
தக்கபுகழ் பெரியோர்கள் புலவோர்கள் வாழி
வந்துதவு சரசோதி மாலயனும் வாழி
மாதாப்பி தாக்களொடு மக்கள்மனை வாழி
சிந்தினொடு பொந்திலுறை கட்செவிகள் வாழி
சீரிலுறை காராளர் மேழியும் வாழி
புந்திமகிழ் வோடுபண்டாரியா வெளியி லுறை
புதுமைசெறி நாகம்மை வாழவா ழியவே.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் புலம்பல்

ஆருயிரே எமது அப்பா -நீங்கள்
ஆழ்ந்த உறக்கம் சென்றதேனோ?
அரசகேசரி எனும் உங்கள் நாமம்
அவனி விட்டு நீங்கள் நீங்கினாலும்
காவடிச்சிந்து மூலம் காலமெலாம்
கண்ணகி அம்மன் புகழ்பாடித் தானிருக்கும்

விசக்கடிக்கொரு வித்தகராய் இருந்தீர் - அப்பா
விண்ணுலகு செல்லும்நொடி வரையும் விழிப்புடனே தானிருந்தீர்
நாடித்துடிப்பறிந்து நவின்றிடுவீர் பல செய்தி
தேடி ஒருவர் வந்து தூதுவன் குறி சொல்கையிலே
கடித்தது என்னவகைப்பூச்சி என்றுநீங்கள்
கடி நொடியில் கணித்திருவீர்
குருமுறைக் கல்வி தனைக்கொண்டு
குடும்பத்தோடு அவ்வுயிரை
குறையேதும் இன்றித்தொண்டு செய்து
குணப்படுத்தி அனுப்பிவைப்பீர்
யாரப்பா இனி இருக்கார்கள் இவ்வூரில் உம்மைப்போல்
யாவருக்கும் பணி செய்ய இவ் விஷக்கடிக்கு
கலைத்துறையில் கால் தடம் பதித்து நீங்கள்
சிலை பல வடித்து விட்டீர் உம் சித்திரப் படைப்பினாலே

ஒரு வரிக்கவிதையேனும் ஒருமுறை எழுதினாலும்
கருமிக்க உம்வரிகள் என்றும் தருவுடன் தனிருக்க
கண்ணிமைக்கும் பொழுது போதும்
பண்ணிசைக்கும் பாடல் படிக்க

வித்தகன் பிள்ளைகள் நாங்கள் இன்று
விரும்புவது அப்பா நீங்கள் கேட்பீர்
சத்தியம் இது அப்பா சந்தேகம் ஏதும்இல்லை
புத்தியும் சொல்லுதப்பா புலம்புகின்றோம் நாங்கள் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்காத்துயில் செய்தி கேட்டுப்பலர் கதைக்கையிலே
ஏங்கும் எம்மனதை யாரறிவார் இங்கு ..............அப்பா
கடுகளவு உங்கள்போல்
கவிவடிக்க முடியவில்லை
கலக்கத்துடன் வேண்டுகின்றோம்
கலைச்செம்மல் அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய
தெய்வமாக நீங்கள் தானிருந்து
நொய்யும் போதெல்லாம் நீங்கள் எம்மைக்காத்திடுவீர்
விஷ வைத்தியரே அப்பா நீங்கள் விண்ணுலகு சென்றாலும் -
உங்கள் விழி எங்கள் மீது விதானமாய் தானிருக்கும்

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

அன்புப் பிள்ளைகள்
கவிதா,
லலிதா,
கீர்த்திகா,
அகிலன்.

பொய் சொல்லி தப்பிக்க நினைக்காதே
உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்
ஏனென்றால் பொய் வாழவிடாது
உண்மை சாக விடாது
- சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

இராசகேசரி முத்தம்மா மூத்தமகன்
அரசகேசரி எனும் தனிநாமம் கொண்டோன்

களுவாஞ்சிகுடி ஊர்பெற்ற
கலைவேந்தன் எங்கள் மாமா

விசக்கடிக்கோர் மருந்து மரம்
விகடகவி பேச்சாளன்

கலையம் பல பெற்றோன்
கதைபேசி விடுகதை போடுவதில் சித்தி பெற்றோன்

சொல்லாடம் ஆற்றலாலே - பல
வில்லாடல் பாடல் கட்டி
திக்கெட்டும் தன் புகழ் பரப்பி
திடமாகத் தானிருந்தார்

மணக்கோலம் கண்டு பிள்ளைகள் கரம்பிடித்த - எம்மை
மருமக்கள் என்பதை விட
தன் மக்களாகத்தான் பார்த்தார்
பிறப்பின் போதே இறப்பு நிதர்சனம்
பிரிவை ஏனோ மனம் ஏற்க மறுக்கின்றது

வழக்குரைக் காவியத்தில் சொல்பிரித்துப்பாடும் திறனும்
கிழக்கிலே களுவாஞ்சி ஊர் அமைவையும்
விளக்கும் விதம் அனைத்தும் கேட்டுப்
பழக்கம் இல்லாதவர் கூட பகிர்ந்து அறிந்து கொள்வர்
நிழலின் அருமை வெயிலில் தெரிவது போல்
நிச்சயமாய் நாங்கள் நிற்கையிலே புரிந்து கொண்டோம்
இறைபதமடைந்த இல்லாள் இராஜேஸ்வரியுடன்
தருநிழல் பிள்ளைகள் எங்களை பெருமனதாக காக்க வேண்டும்
உடலால் நீங்கள் பிரிந்தாலும் எங்கள்
உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பீர் - மாமா
உங்கள் நினைவால் வாடும் மருமக்கள்

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

மருமக்கள்
மோகன், சிவாகரன், விவாகரன், தர்சனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்பான அம்மப்பா எங்களை விட்டு எங்கு சென்றீர்
பண்பான அம்மம்மாவை தேடியா அங்கு சென்றீர்
பெரியம்மாவிற்கு காவலாய் இருப்பீர் என்று நாம் நினைத்தோம்
பெருந்துயரில் எங்களை நீங்கள் ஆக்கிவிட்டீர்

தொலைதூரத்தில் இருந்து அழைப்புமணி வந்ததுவும்
லல்லியின் முத்துக்கள் சஞ்சிகாவா? அக்ஷயக் குட்டியா?
கோபிசச் செல்லமா? என நீங்கள் வினவுவது எம்
காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது அம்மப்பா!

கீர்த்தியம்மாவின் தொலைபேசி அழைப்பு வந்தால்
அகர்சன், அதிஸ்ரா, ஆதனன் சுகம் கேளாத நாளில்லை அம்மப்பா!
தினமும் உங்கள் மடியில் தவளும் பாக்கியம் பெற்ற
ஹரிஸ்னாவிற்கும் அம்சவிக்கும் என்ன பதில் கூறிவிட்டுச்சென்றீர் அம்மப்பா!

நினைத்ததும் கவிபாடும் ஆற்றல்மிக்க அம்மப்பாவே
நிமிர்ந்து நின்று உங்களால் பெருமிதம் கொண்டோமே
உங்கள் இழப்பால் இப்போ மனம் இடிந்து நிற்கின்றோம்
நீங்கள் பாடிய "இன்று நல்ல சாதம் என்றும் இல்லா சாதம்"
பாட்டை போனில் பதிவேற்றி உங்களிடம் பாடிக்காட்டிய போது
நீங்கள் அடைந்த மகிழ்ச்சி என் கண்முன்னே நிழலாடுகின்றதே அம்மப்பா!

உங்கள் பேரப்பிள்ளைகள் நீங்கள் விட்ட எச்சத்தை நாங்கள்
தொடர்வோம் என உறுதிமொழி கூறுகின்றோம் அம்மப்பா
உங்கள் ஆத்மா இறைவனை அடைய பிரார்த்திக்கின்றோம்

அன்பான பேரப்பிள்ளைகள்
கரிஸ்ணா, அம்சவி, சஞ்சிகா, அக்ஷயன்,
கோபிஷன், ஆகர்ஷன், அதிஸ்ரா, ஆதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான மூத்த அண்ணன்

மட்டுவாவி வளைந்தோடும்
தென்திசையில் பதினாறாம் மைகல்லதனில்
பதிகொண்ட பசுமைப் பதிதான்
களுவனும் வஞ்சியும் வாழ்ந்த களுவாஞ்சியூர்

பழம்பெரும் வைத்தியசிகாமணியின்
புதல்வனாம் இராசகேசரிக்கும் முத்தம்மாவிற்கு
இல்லற வாழ்வில் முத்தாக வந்துதித்த
ஆண்பிள்ளைதான் அன்பு அண்ணன் அரசகேசரி

எங்களுக்கெல்லாம் மூத்த அம்மாவின் மகன் என்பதால்
மூத்தண்ணன் என்றே அழைப்போம். நான்கு தாய்பிள்ளைகள்
நான்கு தாய் பேரப்பிள்ளைகளை மூத்த பெரியப்பா என்றழைப்பார்
இனியாரை அழைப்பார்கள் அழைத்தாலும் வருவாரோ அண்ணன்

மாதமொருமுறையேனும் வருவாய் என் வீட்டிற்கு
மலர்ந்த முகத்தோடு கேட்பாய் தம்பி சுகமாடா என்று
பெருமிதத்தோடு பெரியப்பா என்றழைக்கும்
மகிழ்வோடு மாமா என்றழைக்க இனி யாருண்டு இவர்களுக்கு

சினம் கொண்டமுகம் கண்டதில்லை ஒருநாளும்
மனம் சிரித்து மகிழ்வோடு நீ வரும்போது அண்ணா
உன் கண்சிரிக்க உன் மக்கள் சிரிப்பார்கள்
இனி யாரைக் கண்டு சிரிப்பார்கள் உன் மேன் மக்கள்.

இன்று போய் நாளைவா என்ற நாட்டுக் கூத்தில் அண்ணன் விருத்தம்

"விண்ணவர்க்கதியே போற்றி வித்தகப் பொருளே போற்றி
மண்ணினர்க் இறையே போற்றி மாதவக் கொழுந்தே போற்றி
அண்ணலே அன்பே போற்றிஆதியே போற்றி போற்றி
மூன்று கண்ணனே போற்றி முழுமுதற் கடவுளே போற்றி போற்றி
மூத்த அம்மா பெற்றெடுத்த முத்தே போற்றி போற்றி
இன்பமுடன் இறைபாதம் அடைந்தாய்..... போற்றி போற்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் கலைக்கழகத்தின் மூலம் எத்தனை
நாட்டுக்கூத்து கரகாட்டம் வசந்தன் கோலாட்டம்
சிறுத்தொண்டர் கதை சிவ தொண்டர் வரலாறு
ஓவியக்காதல்(அலெக்சாண்டர்) மேடை நாடகம்

விஷ வைத்திய நாயகனே ஆரூட சோதிடனே
நாடித்துடிப்பறிந்து பிறப்புக்குறிசொல்லும் வித்தகனே
அடியளந்து நேரம் பார்த்து நற்சேதி கூறி நலம்காப்பவனே
வள்ளலே சித்த வைத்திய சீராளனே ஆருயிர் அண்ணலே

சனியன் தோத்திரத்திலே இரண்டு பாடல்கள்
என்மனதை அரித்துக் கொண்டிருந்தகாலம்
அண்ணனுக்கு ஆறுதலும் கிடைத்த காலம்
ஆண்பிள்ளை ஒன்றைப் பெற்றெடுத்த காலம்தான்
சனீஸ்பர பகவான் அண்ணனுக்குக் கொடுத்த கொடைதான்
அண்ணன் பூவுலகைவிட்டு விடைபெற்ற போது
மலர்ந்த முகத்தோடுபார்த்த நீபாக்கியசாலி அண்ணா
ஏன் என்று கேட்டால் நம் இனத்தவர் அதுதான்
அண்ணனின் இறுதிக் கடமைகளைக் குறையின்றி
நிறைவு செய்தான் அகிலம் போற்றும் அண்ணனுக்கு அகிலன்

“ஐ” யன்னாவில் ஒரு பாடல்

ஐயமே இலை ஐயா எந்தன் மீது
அருள் மழையை என் மீது பொழிய வாராய்
பையனோ இல்லையப்பா பராமரிக்க
பாதகம் யான் ஏது செய்தேன் பாரின் மீது
கை நிறைய காசிருந்தால்காலடிக்கு
கடவுளும் வந்திடுவர் காவல் செய்ய
தெய்வமோ உனை வேண்டுகின்றேன் தீரனே
கரிகவகனம் எறும் தம்பிரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உ" யன்னாவில் ஒரு பாடல்

உன்னாட்டம் கண்டுநான் ஆடும் போது
உற்றார்கள் கண்டுமனம்குளிர்ந்து போனார்
என்னாட்டம் நன்மையாய் முடிவதில்லை
ஏனோதான் என்னை நீ ஆட்டுராயோ
கண்ணாட்டம் காட்டினால் அதுவே போதும்
கருணை மழை என்மீது பொழியும்தானே
மண்டாட்டமாய் விழுந்தேன் உந்தன் காலில்
மாயனே காகவாகனம் ஏறும் தம்பிரானே

இறுதியாக அண்ணனின் சகோதர, சகோதரிகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள் அண்ணனின் இறுதிநாளின் போது கலந்து கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எனது குடும்பம் சார்பாக கண்ணீர் தோய்ந்த ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாந்தி சாந்தி சாந்தி

அன்புத்தம்பி
ஆறுமுகம் அருள்ராஜா
அவுஸ்ரேலியா

**ஐம்புலன்களை வென்றவனுக்கு இந்த உலகில் சாதிக்கமுடியாதது எதுவுமில்லை. அவனுக்குக் கடவுள் காட்சியும் இறைவன் திருவருளால் கிட்டும்**

**- ஸ்ரீ ராமகிருஸ்ணர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். இரா. அரசகேசரி அவர்களின் கவிதை வரிகளின் சிறுதுளிகள்

### கவிதை வாசிக்கும் பொழுது வணக்கம் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் எழுதப்பட்ட பாடல்

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த முனிவரின் வெற்றிபெறு விழாவதற்கு
சித்தமுடன் அருள்சுரந்து சிறப்பிக்க வந்திருக்கும் சிறுவர்களே சீலர்களே
இத்தரையில் இனியகவி மாலை சூட இன்னருள் சுரந்து எனக்கு
உத்தம குணம்காட்டி உவகைகொள்வீர் உங்கள் அடி பணிந்து நின்றேன்

### புனிதவதியாரிடம் பரமதத்தன் மாங்கனி கேட்ட சந்தர்ப்பத்தினை எடுத்துக் காட்டிய பாடல் பகுதி

மல்கோவா பழமல்லவோ மங்கையே நான் உனக்குத் தந்தேன்
கற்கோவா போலே நீயும் கனி எனக்குத் தந்தாய் பெண்ணே
தின்னத்தின்ன இனிக்குதடி தெவிட்டாத மாங்கனிதான்
இன்னும் ஒன்று தாராய் பெண்ணே என் இனிய பசிபோக்கிடவே.......

### இளையான்குடிமாறநாயனாரின் அன்னதானச் சிறப்பினைப் பாடிய சந்தர்ப்பத்தில் பாடிய பாடல் பகுதி

ஆ தானம் பூ தானம் நிதி தானம் அதில் சிறந்த அன்னதானம் என்று
அவனியோர் போற்றிட அவைசெய்யத் தொண்டர் வந்தார்
பசியோடு வந்தவர்க்கு பசியாற வைப்பது
பண்புள்ள கடமை என்றோ
நடுநிசி தன்னிலே இளையான்குடியாரும்
இறைவனுக்கு உணவளித்தார்

### இளையான்குடிமாறநாயனார் இறைவனுக்கு உணவளித்த சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட பாடல் பகுதி

இஞ்சிப் பச்சடி பிஞ்சிக் கீரை போஞ்சிக் கறியும் சமைத்தார்
ஆகா..ஆ...கா.....
சுரக்காய் குழம்பு சுரைக்காய் பொரியல் சுறுக்கா நானும் சமைத்தேன்
நாடை ஆணம்நரம்புக் பச்சடி சாடையாக சமைத்தேன்
பாலும்தயிரும் மோரும் பலவிதமாய் சமைத்தேன்.

திருமதி. கமலநாதன் ஆனந்தி
அவர்களின் உள்ளத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிலும் பணிவானவர்

களுவாஞ்சிகுடியின் மகனாக பெரிய கவுத்தன்குடியின் கண்ணாகத் திகழ்ந்து அனைத்துச் செல்வங்களும் பெற்று சந்தோஷமாகவும் மக்களுக்காகவும், சேவைசெய்து(விச வைத்தியம்) அன்னாரின் ஒவ்வொரு செயற்பாடுகளும் இறைபணிக்காகவும், கலையோடு கூடிய கலாசாரத்திற்காகவும், விஷ வைத்திய சேவையை மக்களுக்காகவும், தன்னை அர்ப்பணித்து நல் அறிவுரைகளும், அன்பான பேச்சு அமைதியான அடக்கமான சுபாவம், ஒரு மனிதனிடத்தில் இருக்க கூடாத தீய குணங்களான ஆசை, பெருமை, வஞ்சகம் களவு, பொய், அடுத்தவரை கெடுத்தல், புறம் கூறுதல் இவையனைத்தையும் விடுத்து மாபெரும் மகத்துவம் பெற்ற மாமனிதன் என்றுதான் கூறவேண்டும்.

இப்படிப்பட்ட மகத்தான வாழ்வு வாழ்ந்து வினையின் பயனே தேகம் வினைதான் ஒழுந்தால் நொடிப் பொழுதில் சென்று விடும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வைகுந்தப்பெருமான் அருள் புரியவேண்டுமென்று பிரார்த்திப்போம்.

ஸ்ரீ கிருஸ்ணார்ப்பணம்

சோதிடர்.
சிவஸ்ரீ.வே.கு. சபாநாயகம் குருக்கள்
பதியகம்
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தலைவரின் இரங்கல்

அமரத்துவம் அடைந்துவிட்ட கலாபூஷணம் அமரர் இரா அரசகேசரி அவர்கள் எங்கள் குடும்பத்தில் மூத்த உறுப்பினராக எம்மையெல்லாம் வழிநடத்தி வந்த ஆசானாக விளங்கியவர். மட்/பட்/பட்டிருப்பு.ம.ம.வி தேசியபாடசாலையின் முன்னாள் பதிவாளராக விசவைத்தியராக கலைஞராக கவிஞனாக மரபுக்கலை வேந்தனாக கலைச்செம்மல், கலாபூசணம் போன்றபட்டங்களை பெற்றவராக எம்மிடையே பரிணமித்தவர்.

காலஞ்சென்றவர்களான இராசகேசரி முத்தம்மா தம்பதிகளின் மகனாக பிறந்து காலம் சென்ற இராஜேஸ்வரி அவர்களை கைத்தளம் பற்றி இல்லறம் என்கின்ற நல்லறத்தால் கவிதா,லலிதா, கீர்த்திகா அகிலன் 'ஆகியோரின் அன்புத்தந்தையாக அமைந்தவர் உறவுகளோடு ஒன்றி வாழ்ந்தவர்.

வில்லுப்பாட்டு நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் என அனைத்தையும் நெறிப்படுத்தியதோடு அவற்றில் பங்கேற்று நடிப்பதற்கும் நல்ல குரல் வளமும் இனிய எழிய வசன நடை அழகும் இயற்கையின் கொடையாக இறைவன் தந்திருந்தமையால் சில பட்டங்களுக்கும் பாரின் பாராட்டுக்கும் உரியவரானார்.

அவரை அணுகுகின்ற போதெல்லாம் எமது கிராமத்தின் வரலாறு, குடிகள், வந்தவரலாறு இவைஎல்லாம் செவிஏறல் மூலம் வாய் சொல்லாக வருகின்றதே ஒழிய ஆவணப்படுததப்படவில்லை என்கின்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருந்தேன். அதன் பயனாகவும் அமரர்.இரா. அரசகேசரி அவர்கள் தேடிப்பெற்ற விடயங்களை எழுத்துருவில் சேகரித்து வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை ஒழுங்கிபடுத்தி அவரது குடும்பத்தினரின் முயற்சியால் களுவாஞ்சிகுடி கலைக்களஞ்சியம் முதலாம் பாகமும் காவடி சிந்துகளும் என்கின்ற தலைப்பில் புத்தகமாக அச்சேறி இன்னூல் வீரபத்திரர் ஆலய பரிபாலனசபையின் அனுசரணையுடன் வீரபத்திரர் ஆலய முன்றலில் எனது தலைமையில் 25.03.2012 அன்று வெளியிடப்பட்டது. எமது கிராமத்தை பொறுத்தவரையில் எவருமே முன்வராத ஒரு செயல்பாட்டை முன்னெடுத்து அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றார். அமரர் இரா. அரசகேசரி அவர்கள் அவர் இயல்பாகவே ஆன்மீகத்தில் பற்றுக்கொண்டவர்.

கண்ணகை அம்மன் ஆலயத்தில் காவியம் பாடுவது அகவல் படிப்பது குளிர்த்திப்பாடல்களை பாடுவது என பலதடம் பதித்தவர் அவர் ஆற்றிய கலை கலாச்சார ஆன்மீக சேவைகளுக்காக பாயில் படுத்து நோயில் உழலாமல் ஆண்டவன் அவரை அரவணைத்து விட்டான். கலைப்பொக்கிசத்தை களுவாஞ்சிகுடி இழந்திருக்கின்றது.

மனிதன் பிறக்கும் போது பெயரில்லாமல் மூச்சுக்காற்றோடு பிறக்கின்றான் இறக்கும் போது மூச்சுக்காற்றில்லாமல் பெயரோடு இறக்கின்றான். இதுதான் மனித வாழ்க்கை அன்னாரின் பிரிவால் துயருறும் பிள்ளைகள் குடும்ப உறவுகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரித்து நிறைவு செய்கின்றேன்.

அ. கந்தவேள்
கிராமத்தலைவரும்
முகாமை ஆலயபரிபாலன சபை தலைவரும்,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஞ்சியின் கண்ணீர் இரகசியம்

எவ்வளவு காலம் மாமா
இவ்வளவு சுமந்தாய்
கறைபடியா கலைகளையும்
களுவாஞ்சி கரு கதைகளையும்

வாஞ்சிநகர் வாஞ்சி தமிழ்வளி வழி வயிற்றில்
வாரணப்பலம் வரி தரும் வாடை வீசும் கவிஞர்களால்
வாஞ்சை ஊறும் கற்பனை கவிதை கர்ப்பமாகி
பரிகள் எல்லாம் மகப்பேறு பெறுமாம்.
ஆம்
அவர்களில் எம்மாமன் கொம்பாவான்
அம்மாமனே ஆதியும் ஆவான்

தாள் கண்டதும் தலை வணங்கும் தமிழாலே
தாழ் திறக்கும் தரமான கவி தருவதே நின் நிலை
தடுத்து நிறுத்தியவன் தலைவன் எனும் இறை ஆனாலும்
தளைத்தே தினித்தே நிற்கும் உம் தரம் வாய்ந்த கலை

அறத் தமிழிலே மரபுக்கவி உரமாகி
அவதாரம் ஆன ஆலமர அம்மாவும் நீ
அறிவுரை கூறியபடியே ஆன்றோராய்
அனைவரையும் அறிவாடை அணிய வைத்தவன் நீ

சிலந்தி வலை போல உன் கலைகளை
சிறக்க சிந்திக்க நீ செதுக்கியதால்
சிலேடையில் சிந்தி உதிர்த்த உன் கலைப்பூக்கள் எல்லாம்
சிறப்பு பெறுமே தவிர ஒரு போதும் வாடாது மாமா...

நகரோடும் நாடோடியாக நான் - எதுவானாலும்
எம் கலைப்பூக்கள் கவிழாது மாமா..
உன்போல் இல்லை என்றாலும்
ஓரளவு உன்னை உவமிக்கின்றேன் மாமா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ அரசகேசரி எனும் கலை அரசே
அசுர மரபுக்கவி முலை முரசே
அரங்க மேடைக்கூத்தின் அங்கநாதனே
அரவ நஞ்சின் அரக்கு நீர் அரகர அரயனே

ர ரத்தத்தில் ஊறிய உன் சொத்தான கலைக்கு
ரசாயன உரமே நின் தாய் முத்தான முத்தம்மா
ரசனை சீறி ராகம் பாடி அறிவு முதிர்ந்த உனக்கு
ரத்தினங்கள் கொடுத்தாலும் ஒப்பாகாது மாமா

ச சங்க இலக்கிய பத்துப்பாட்டு எட்டுத்தொகையும்
சந்த நதி ஆகி உன் கலைக்குள் சங்கமம் ஆனதோ மாமா
சரளமாய் தமிழ் வாரி வள்ளுவன் உன் மூளையில் தந்த
சரித்திர கூத்தைக்களை சந்ததிகள் மறவோமே மாமா

கே கேசரி என்பதன் பொருள் சிங்கம் போலவே
கேள்வி ஞானத்தில் நீ அரச அரிமா மந்தியாகி
கேத்திரி அவ் திருமால் அங்கமாயிருக்க
கேடையம் பல பெற்றாய் வாஞ்சியூர் கேந்திரமாக

ச சமகால மருந்து தேடும் மானுட உலகில்
சஞ்ஜீவனம் கொடை மடை திறந்த உம் வைத்தியமும் பெருமை
சங்கரன் சுபீட்சத்தில் மங்காத உன் செம்மல் சிந்தனையால்
சங்கரி தயவோடு மரித்திடா நின் அரவ அறிவும் அருமை

ரி ரிஷப வாகனம் எனும் உன் அழகு கலை பயணத்தில்
ரிதம் தந்த நெல்லுக்குத்து பாட்டிலும் நெகிழ்ந்தோம்

மாமனே உங்கள் பௌர் முன்னெழுத்தில்
உமை உவமித்து கவி எழுத முயன்று
" ரி " எனும் உயிர்மெய் எழுத்தோடு வார்த்தைதேடி
உன் போல் கவி எழுத முடியவில்லை என்று
தோற்று போகிறேன் மாமா.....

அரசகேசரி எனும் அளப்பெரிய நீண்ட நதியில்
நாங்கள் எல்லாம் சருகுகள்
நீ மறைந்தாலும் உன் கலை ஓடிக்கொண்டே இருக்கும்
எங்கள் சந்தியும் அதில் மிதந்து கொண்டே வரும்.

நன்றி

" வெண் என்று பொய்ப்பின் விரி நீர் வியனுலகத்து
உள் நின்று உடற்றும் பசி "

ஆக உன் பெயர் சொல்ல
என் மகன் " வியன் " வருவான் மாமா

நீ நின்மதியாய் உறங்கு
மருமகன் வாஞ்சிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரியவர் இரங்கற்பா

அமரத் தம்பதியினர் இராசகேசரி முத்தம்மாவின் தலைமகனே!
அமரச் சகோதரிகள் சரஸ்,பரமேஸின் சோதரனே!
அமரச் சகோதரர்கள் சுப்பிரமணியம்,அருளகேசரியின் பிறவியரே!
இன்னும் சீரிய சிரஞ்சீவிச் சகோதரி யோகத்தின் அருமை அண்ணாவே!
தீர்க்க சுமங்கலி அற்புத நடிகை இராஜேஸ்வரித்தானே காதலுடன் கரம்பிடித்தீரே!
ஆஸ்திக்கு மூன்று பெண்கள் ஆசைக்கு ஏக ஆணைப் பேறாக ஈன்றீரே!
எம்காலடி தவிர்த்து இறைகாலடியை விரும்பினீரே!

பதவியில் சிறிய தொழிலே ஆயினும் அரசசேவைதானே!
தட்டச்சிலே பாடசாலையை இயக்குவதிலே வீரர்தானே!
ஆயினும் தம்பணி அதிபருக்கு மேலேதானே--- இவைதான் சில தொழிற்பணி

விரதக் காப்புகள் கவசங்கள் சித்திரைக்கதை பொன்னூஞ்சல்
திருவெம்பாவை-பள்ளியெழுச்சி மற்றும் வழக்குரையை
பண்ணோடு இசைப்பதில் தமிழ் வள்ளலே— இவைதான் சில சமயப்பணி

வில்லுப்பாட்டு கரகாட்டம் கும்மி கோலாட்டம் தாளலயம்
வசந்தன் கூத்து நாட்டுக்கூத்து கொம்புமுறி நடனம் நாடகம் நூலாக்கம்
இன்னோரன்ன எழுதிமுடியாதே நின் கலைச்சேவையை
மேலும் இன்றுபோய் நாளைவா தினனானா தென்னானா காவடிச்சிந்து
--- இவையும் சில கலைப்பணியே

விஷவைத்தியத்திலோ ஆங்கிலம் கீழ் அரசகேசரி மேல்!
வைத்தியத்தில் பக்கவிளைவு ஆங்கிலம் கீழ் கைமருந்தில் அரசகேசரியோ மேல்!
அன்னாளில் விஷவைத்தியத்தில் இவர் ஒரு ஸ்பெஷலிஸ்ட்---இவைதான் சில வைத்திய பணி

தத்துகள் பல கடந்தும் பிரதான காவலன் வீட்டில் தாங்கள்தானே!
வழக்குரை ஓதுவதிலும் காவலாள் கண்ணகிக்கு நீங்கள்தானே!
ஓய்ந்ததே உன்குரல் பொருள்தேடும் ஒரு அகராதியை இன்று இழந்தோமே!
யாருக்கெல்லாமோ கௌரவ டாக்டர் பட்டம் நாம் தருகின்றோம் உங்களுக்கு!
நிம்மதிதான், அரசினரின் கௌரவ கலாபூஷணம் தங்களுக்கு!
கவுத்தன்குடியினருக்கு பதவிபெறா இன்னோர் தலைவர்தானே நீங்கள்!

## பிரார்த்திக்கின்றோம்! துயறுருகின்றோம்!
## ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறுகின்ற
ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பரிபாலன சபையினரும்,
கவுத்தன்குடி மக்களும்,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மரபுக்கலைவேந்தன் அமரர். இரா. அரசகேசரி அவர்கள்

களுவாஞ்சிகுடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். இரா. அரசகேசரி அவர்கள் சிறந்த கவிஞர் சிறந்த விச வைத்தியர், அரச பணியாளர் மற்றும் கண்ணகை அம்மன் ஆலயம் களுவாஞ்சிகுடியில் கண்ணகை அம்மன் ஏடு படிப்பதில் ஆரம்பகால தேர்ச்சி பெற்ற காவிய நாயகன் ஆவார்.

இவர் தனது வாழ்நாளில் அநேகமான கவிதைகள், நாட்டுக்கூத்து, நவீன நாட்டுக்கூத்து, சரித்திர நாடகங்கள்,சமூக நாடகங்கள், கிராமிய நாடகங்கள், வில்லிசை, முருக தியானங்கள், நடனங்கள், கரகங்கள், பாடல் தயாரிப்புக்கள் போன்ற இன்னோரன்ன கலைசாரகராக திகழ்ந்தவர்.

மாகாண மட்டத்திலும் இந்து கலாசார பிரதேச மட்டத்திலும் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவர் தனது கலைத்திறமையால்தனது மனைவியாருடனும் பாத்திரமேற்று நாடகம் கூத்துக்கள் நடித்ததையும் அனைவரும் அறிவர்.

மற்றும் களுவாஞ்சிகுடி கண்ணகை அம்மன் ஆலயத்தில் காவடி ஆட்டம், கற்பூரவிளக்கு, வாயலகு எடுத்தல், அங்கப்பிரதட்சனை போன்ற நிகழ்வுகள் நடைபெறும் வேளைகளில் கண்ணகை அம்மனை உச்சரிக்கும் காவடிச்சிந்து இல்லாத குறைபாட்டை உணர்ந்து "அம்பாளே உந்தனது அருளைத்தா தா அடியார்கள் பக்கம் நீ நெருங்கி வாவா" என "அ வரிசை தொடக்கம் வரை" காவடிச்சிந்தை தயாரித்து நூல் வெளியீடு செய்தார். இதன்பயனாக இன்றுவரை காலம் காலமாக அவர் இயற்றி வெளியிட்ட கண்ணகைஅம்மன் காவடிச்சிந்தே ஆலயத்தில் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அந்த காவடிச்சிந்தானது அமரர்.இரா. அரசகேசரியின் ஞாபகார்தமாக உள்ளது. அமரர் அவர்கள் இறைபதமடைந்தாலும் அவரது புகழ் வீசிய வண்ணமே உள்ளது, என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கலைத்துறை கவிஞன் நாடக நடிகர், கவிதையாளன் மாத்திரமின்றி சிறந்த ஒரு விசவைத்தியராகவும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். இப்பகுதியிலுள்ள அனேகமான மக்களை விசக்கடியிலிருந்து காப்பாற்றியபெருந்தகையுமாவார்.

தனது விச வைத்தியத்தின் போது அவர் கையாளுவது என்ன வென்றால் பூச்சிகுத்திவிட்டதுஎன ஒருவர் வந்து குறிப்பிடும்போது அவர்,

தூதன் சொன்ன சொல்லதனை துணித்து மூன்று கூறாக்கி
ஆயும் அளவோர் பங்காகில் அங்கோர் விசமும் இங்கில்லை
பொய் எழுத்தே ஒன்றாகில் பொண்டுதலில்லை விசமுண்டு
மாயவோர் எழுத்தாகில் மாண்டார் என்று மதித்திடுமே,

என்னும்

விசவாகட வாசகத்தை பயன்படுத்தி விசத்துக்கான வைத்தியத்தை கணக்கீடு செய்து சிறந்த முறையில் வைத்தியத்தை மேற்கொண்டு விசக்கடிக்குட்பட்டவரை உயிர்பிழைக்க வைத்த உத்தமனும் ஆவார்.

அத்தோடு பாடசாலை பணியாளராக சிறந்த முறையில் சேவையாற்றி பொதுமக்களுக்கு உதவிஒத்தாசைகள் வழங்கி பலதரப்பட்ட மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்று ஓய்வூதியத்திற்கு உரித்தாகும் வரை சிறந்த சேவையாற்றிய பணியாளரும் ஆவார்.

இவரது கல்வித்திறமைக்கு இவர் உத்தியோகத்தில் எவ்வளவு படிகளைத் தாண்டி உயர்ச்சி பெறக்கூடிய தகமைகள் இருந்தும் மேலுயர்ந்து சென்றால் தூர இடமாற்றங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என்பதற்காகவும் பொதுநலத்திற்காகவும் தான்மக்களுக்கு இவ்வூரிலிருந்து விச வைத்திய சேவையை சிறப்பாக சேவையாற்ற வேண்டுமென்னும் பெருநோக்கில் தன்னை அர்ப்பணித்த விச வைத்திய அதிகாரியுமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கவிதை ஆக்கத்திற்கு எவரும் நிகரில்லை எனக்கூறுவது சாலப்பொருத்தமானதாகும். இவரது கவிதை ஆக்கத்தில் ஒருசிறிய கண்ணீர் அஞ்சலிக் கவிதையில் சில வரிகள் எனக்கு ஞாபகமூட்டுகின்றது. எனவே இவரது31ம் நாள் நினைவு அஞ்சலி மலரில் இதை குறிப்பிட வேண்டுமென என் மனம் துடித்துக்கொண்டு உள்ளது.

ஒருநாள் களுவாஞ்சிகுடியில் அவரது உறவு முறையான ஒரு பெண்மணி காலமாகி விட்டாார். நானும் அந்த மரணவீட்டில் சமூகமளித்திருந்தேன். அவ்வேளையில் அமரர்.இரா. அரசகேசரியின் தம்பியான அமரர்.இரா.ஏரம்பமூர்த்தி அவர்கள் அந்த மரணவீட்டு பெண்மணிக்கு ஒரு கண்ணீர் அஞ்சலிக்கவிதை அச்சிட்டு வெளியிடவுள்ளவராக சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருந்தார். பின்னர் அவருக்கு ஓர் யோசனை ஏற்பட்டது.

அரசகேசரி அண்ணனிடம் சென்றால் தான் கண்ணீர் அஞ்சலிக்கவிதை அவசரமாக செய்து தருவார் என்னும் நோக்கோடு தம்பி இரா.ஏரம்பமூர்த்தி மணல் வீதியிலிருந்து மத்திய வீதிக்கு அண்ணனின் வீட்டுக்குச் சென்று அண்ணா, அண்ணா என அழைத்தார் அவர் நித்திரையில் ஆழ்ந்து கொண்டிருந்த வேளையில் "என்ன தம்பி" என வினாவினார்.

அண்ணா பெரியம்மா காலமாகி விட்டார். அவசரமாக எனக்கு ஒரு கண்ணீர் அஞ்சலிக்கவிதையொன்று புனைந்து தாருங்கள் நான் நோட்டிஸ் அடித்து வெளியிடப் போகின்றேன் என்றார்.உடனே அமரர். இரா. அரசகேசரி அவர்கள் கவிதை எழுத ஆரம்பித்தார். அக்கவிதைகளின் சில வரிகளாவன

பத்தாவின் சொற்கேட்டு பத்தினியாள் மகேஸ்வரியார்
சொத்தான தன் கணவனுக்கு தூரிகை
மை வகை எடுத்துக்கொடுத்து
நித்திரை வரும் வேளையிலும் நீங்காது உடனிருந்து
அத்தனை ஆக்கங்களும் ஆக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிலிருந்து அன்பளிப்பாள்
வெற்றிலை பாக்கு விதம்விதமாய் இடித்துக் கொடுத்திடுவாள்
பற்றினில் புவனேந்திரன் புவனேஸ்வரி குகபாலன் மங்களேஸ்வரி
கற்ற வித்தையாலே மைந்தர்களும் கலையை பயின்றுவிட்டனர்
இத்தனைக்கும் காரணம் இளையதம்பி வாத்தியார்
என்றுதான் சொல்ல வேண்டும்
ஆண்டவனை வடிவமைப்பார் அன்புள்ள புவனகேசரி
நீண்டநாள் வாழ்ந்தாய் தாயே
நீயும் அவர் துணையினோடு
ஆண்டவன் பாதமதில் அன்னையே நீடு வாழ்க,

என்று கவிதையை நிறைவு செய்து கொடுத்தார் அமரர்.இரா. அரசகேசரி அவர்கள். அதை தம்பி அமரர். இரா. ஏரம்பமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டு அதை அச்சிட்டு மரண வீட்டில் விநியோகித்தார்.

இப்படியான சிறந்த திறமைசாலி அமரர்.இரா.அரசகேசரி அவர்கள் அவரது விடயங்களை குறிப்பிடுவதாயின் அவரது 31ம் நாள் நினைவஞ்சலி மலர் புத்தகம் எனக்கு மாத்திரமே போதுமானதாகும்.

எனவே முழுவிடயத்தையும் குறிப்பிடாமல் ஏனைய ஆக்க படைப்பாளிகளுக்கும் இடங்கொடுத்து இத்துடன் அமரர்.இரா.அரசகேசரியின் இவ்நினைவுரையை நிறைவு செய்வதோடு அன்னாரின் ஆத்மா நற்பரகதியடைய கற்புக்கரசி கண்ணகி அம்மனை வேண்டிநிற்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரிவால் துயருறும்
சாமித்தம்பி கருணாகரன்பிள்ளை
மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், கண்ணகை அம்மன்
ஆலயங்களின் கௌரவ வண்ணக்கரும்
சின்னக்கவுத்தன் குடியில் மூத்த உறுப்பினரும்
மாரியம்மன் கோயில் வீதி,
களுவாஞ்சிகுடி - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியனார் குடி வம்சம்தழைக்க வித்திட்டவர்

தெங்கு தேன்சுவை தரும் கனிமரம்
பொங்கு கடலோடு இணைந்தாற்றில் பாடும் மீன்இனம்
எங்கும் வளம் நிறை நல்நீர் ஊற்று நிலம்
தங்கக் கதிர் விளை தரமான மண்வளம்
செங்கமலப் பரப்பில் செங்கயல் பாயும்குளம்
சங்கத் தமிழ் வளர்த்த தனித் தமிழினம்
எங்கள் கலைச்செம்மல் அரசகேசரி அவதரித்த
மங்காப் புகழுடை களுவாஞ்சிகுடி நல்லூர்

பட்டணக்குடி கலைமரபில் அவதரித்த இராசகேசரி
பரம்பரைஉயர் கவுத்தன்குடி முத்தம்மா தம்பதிகள்
திட்டமிட்டுச் செய்த இல்லற நல் தவப்பயனால்
திருவாளர் அரச கேசரி இப்புவியில் அவதரித்தார்
வட்டவடிவ வசீகரமான முகத்தழகன்
வரிசையாய் அமைந்த முத்துப் பல்லழகன்
கட்டு மஸ்தான கருமைநிற உடலழகன்
கவரும் கவிதை நயச் சொல்லழகன்

வைத்தியநார்குடி இராஜேஸ்வரியை கைப்பிடித்து
வைத்தியநார்குடிப் பரம்பரை பல்கிப்பெருக
வையத்துள் இல்வாழ்வில் வாழ்வாங்கு வாழ்ந்து
தையல்கள் மூவரை வைத்தியநார் குடிக்குத் தந்தளித்தார்
கைபழடித்த நாயகியின் துணையோடு தன்
கைங்கரியங்களை கச்சிதமாய் நிறைவு செய்தார்
வைகாசி மாதத்தில் தன் குரலோசையால்
வாஞ்சியூரைப் பக்தியில் மூழ்க வைப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு வழிக்கலைப்பொக்கிசங்கள்
மரணித்துப் போகாமல் இருக்க
தரமான தன் கவித் திறத்தால்
தாராளமாய் பல கலை வடிங்களைப் படைத்தளித்தார்
தரவுகள் அனைத்தும் பத்திரமாய் வைத்ததனால்
தகமையைப் பறைசாற்றும் விருதுகளும்
பட்டங்களும் பெற்றெடுத்தார்
நிரந்தரமாய் வசித்த ஊரில் மட்டுமல்லாமல்
நிறையப் பல ஊர்களிலும் ,பேரும்புகழும் கிட்டவைத்தார்

கலைச்செம்மல் அரச கேசரியின் வெற்றிடத்தை
கனவிலும் நிரப்ப எவராலும் முடியாது
சிலைமேல் எழுத்துப்போல் நிலைத்திருக்கும் அவர்
பேரும் புகழும்
சிலப்பதிகார நாயகியின் பெருவிழா இருக்கும் வரை
விலை மதிக்க முடியாப் பொக்கிசத்தை இழந்து தவிக்கும்
விற்பனரின் உறவுகள் மன உறுதி வேண்டியும்
நிலையாக அன்னாரின் ஆத்மா இறைவனுடன்
நிரந்தரமாய் சேரவேண்டியும் பிரார்த்திக்கிறோம்.



**முகாமையாளர்,**
**வைத்தியனார்குடி மக்கள் சார்பாக,**
**களுவாஞ்சிகுடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்

அரிது அரிது மானிடராதல் அரிது என்பதற்கிணங்க மகத்தான இம்மானிடப் பிறவியினை எடுத்தநாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு எம்மை வழிப்படுத்துகின்ற அறநூல்கள் அதிகமாக வலியுறுத்துவது பொதுநலச் செயற்பாட்டையே அன்றி சுயநலத்தை அல்ல.

அந்தவகையில் அமரர்.அரசகேசரி அண்ணனும் கூட "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதனைச் சிரம்மேற்கொண்டு வாழ்ந்து காட்டியவர். இவருடைய பொதுநலச் சேவையின் நிமித்தம் எமது பிரதேசத்தில் மக்களால் அதிகம் திறந்து மூடப்பட்ட கதவு என்ற வகையில் முதலிடம் பெறுவது இவருடைய வீட்டுக்கதவுதான் என்றால் அது மிகையில்லை.

இவரது விசவைத்தியம் மற்றும் நாட்டு வைத்தியம் பணிகள், இயல் இசை, நாடகப்பணிகள், ஆலயப்பணிகள், அறப்பணிகள் என்ற வகையில் இவரது பொதுச்சேவைகள் விரிந்து செல்கின்றன.

எமது பகுதியிலே பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்த இவர் பல சுதேச வைத்தியர்களையும், ஆய்வாளர்களையும், அறப்பணியாளர்களையும் உருவாக்கியவர். பலர் பல்துறைசார்ந்து தமது வாழ்க்கையின் உயரங்களை எட்டிப்பிடிப்பதற்கு ஏணியாகத் தொழிற்பட்டவர் இவரே ஆவார் என்பது அவரவர்க்கே தெரிந்த உண்மை ஆகும்.

அமரர். அரசகேசரி அண்ணனுடைய இடத்தை நிரப்புவதற்கு ஒருவர் பிறந்துதான் வரவேண்டும் என்று கூறுமளவுக்கு அவருடைய இடம் எமது பிரதேசத்தில் வெற்றிடமாகத்தான் இருக்கப்போகின்றது. அந்தவகையில் அண்ணனுடைய இழப்பு எமக்கு மாத்திரமல்ல எமது நாட்டிற்கே பேரிழப்பு ஆகும்.

அமரர். இரா. அரசகேசரி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திரு.க.மதிசீலன்
தலைவர்,
சைவமகாசபை
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் இரா. அரசகேசரி அண்ணா என் இதயம் அழுகிறது

கல்வியுமட கலையும் கலாசாரமும் மாண்புமூர்
களுவாஞ்சிகுடி நகர்தந்தகலைப் பெருங்கொடையே
சொல்லடுக்கால் சுந்தரத்தமிழ் படைத்து
காவியங்கள் உருவாக்கிய கண்ணித்தமிழ் நாயகனே!
வில்லெடுத்து தண்டெடுத்து வீர நடனம்புரிந்து
கூத்துக்கலையாடி குதூகலம் தந்த கலைஞரே!
வல்லவனே வண்டமிழின் இசைபரப்பி
வாஞ்சை நிறைந்த வடிவழகா மறைந்தனையோ!

கலையுலகம் உன்னைக் கண்விழித்துத் தேடுகிறது
காணாமல் போன கிராமியக் கலைஞனை எண்ணி அழுகிறது
முத்தான கூத்துக்கலைகள் எத்தனயோ படைத்து
ஆடி அலங்கரித்து ஆட்டுவித்து வெற்றி கண்டாய்
சொத்தண்ணா! கலையுலகச் சுந்தரத்தமிழ் மணமண்ணா
வித்தகனே கலாபூஷண விருது பெற்றவனே!
நித்திரையிலும் உன்கலைகள் கனவாய் நிறையுதண்ணா
பத்தரை மாற்றே இரா அரசகேசரி எங்கே அண்ணா

ஆடினோம் பல கூத்துக்கள் அரங்கேறி வெற்றி கண்டோம்
பாடினோம் கிராமியப்பாடல்கள் பல்லரங்கு அளித்தோம்
"சக்கும் சுக்கும் சிக்கும் சக்கும்" நெல்லுக்குத்து நடனப்பாடல்
எத்திசையிலும் புகழ்பரப்பி இன்றும் இனிக்குதண்ணா!
ஆடஆட இனித்தது நடிக்கச் சுவைத்தது
பாடப்பாட உன் தமிழ் பல்சுவை அளித்தண்ணா!
ஆடிய அரங்குகளெல்லாம் அழுதழுது உறங்குகிறது
கூடியிருந்து பழையவர்கள் கூத்திசைத்துப் புலம்புகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராவணன்" நீ என்றால் "கும்பகர்ணன்" நானண்ணா!
"சிறுத்தொண்டர்" நீ என்றால் "சிவபெருமான்" நானண்ணா!
"துரியோதனன்" பாத்திரம் "நீ துர்ச்சாதனன்" நானண்ணா!
"இயமனாக" நடித்தாய் "சத்தியவானாக" நான்நடித்தேனண்ணா!
எழுத வரிகள் தாங்காது எடுத்தியம்பத் தமிழ் அடங்காது
இனிக்கும் தருக்களும் இடிமுழங்கும் விருத்தங்களும்
தொகையறாக்கள் கொச்சங்கள் சொல்லடுக்கு வசனங்கள்
சுவைத்தமிழ்அத்தனையும்அரங்களித்து மறைந்தனையோ!

என் தம்பி கும்பகர்ணா இயம்பும் என்
வார்த்தையைக் கேளாய்
என் இலங்காபுரி நேற்றுடன் போச்சுதே
தம்பியே! தம்பியே!
இராவணன் பாத்திரப்பாடல் இனிக்குமண்ணா மேடையிலே
இடித்து முழங்கிப்பாடி என் நடிப்புக்கு உணர்வூட்டுவாய் அரங்கினிலே
"தணி அரசு பொன் தங்கா" முப்பெரும்
கலைஞர்களையும் இணைத்துப்பாடி
இன்புற்று மகிழ்ந்த மரபுக்கலைக்காவலனே! கலை வணக்கமண்ணா!

மூச்சு அடங்கி விட்டதோ முழுக்கலைப் பௌர்ணமியே!
போச்சுதோ எங்கள் கலைப்பெட்டகம் பொற்பொழுது அடங்கியதோ
தனித்துவம் மிக்க தலைவனாய் தந்தையாய் கலைத்தமிழ் காவலனாய்
வினைத்திறன்மிக்க உழைப்பாளியாய்! விஷவைத்தியனாய்
பண்பின் சிகரம் கலைப்பெண்ணரசி இராஜேஸ்வரியின் கணவனாய்
இல்லறம் காத்து வளர்த்த இன்பக்கலைப் பெட்கமே!
மனிதம் நிறைந்த மகத்தான கலை அரசனே!
வாழ்கநின் கலைப்பணி!நின் புனித உயிர் இறைகழல் இணைக!

" ஓம் நமசிவாய "

கலைக்கண்ணை இழந்து தவிக்கும்
"கலாபூஷணம்"
க. தணிகாசலம்
திருப்பழுகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்புக்கவிஞர்

மரபுவழிக்கலை
வடிவங்களான
நாட்டுக்கூத்து
நாட்டார்பாடல்
வசந்தன்கூத்து
கரகாட்டம்
என்பவற்றின்
கலைப்பொக்கிசங்கள்
மரப் பெட்டிக்குள்
செல்லரித்து
தேடுவார் அற்று
அதன்
தேவையில்
ஈடுபாடு இன்றி
மங்கி இருந்த வேளையில்
வரப்பிரசாதமாக
அதற்குப்
புத்துயிர் ஊட்டப்
புறப்பட்டவர்
கலைச்செம்மல்
இரா.அரசகேசரி அவர்கள்

சைவ சமயத்துக்கு
சங்கடம்வந்த வேளை
தெய்வ அனுக்கிரகத்தால்
தோன்றிய நாயன்மார்
போல்
மரபு வழிக்கலைகள்
மறைந்திருந்தவேளை
மங்கியிருந்தவேளை
மகிமைகுன்றியிருந்தவேளை
அதற்கு
புத்துயிர்கொடுத்து
மெருகூட்டி
புதுப்பொலிவூட்ட
அவர்கள் புறப்பிட்டுஅதற்கு
முத்திரைகுத்தியவர்
கலைச்செம்மல்
இரா.அரசகேசரி

வட்டக்கலரிபோட்டு
பட்டுச்சேலையால்
அலங்கரித்து
வெட்டவெளியரங்கில்
நட்ட நடுச் சாமத்துக்கு
மேல்
நடக்கும் நாட்டுக்கூத்துக்
கலையை
தற்காலக்
கட்டிடக்கலை அரங்குகளில்
அரங்கேற்றும் வகையில்
பிரதிகளை வடிவமைத்து
அரங்கேற்றி வெற்றிகண்டவர்
இரா. அரச கேசரி அவர்கள்

பல்கலைகழகம்
சொல்லாத பட்டதாரி
பால பண்டிதம்
படிக்காத பாவலர்
மரபணுவில் உருவான
கருவோடுஒட்டிபிறந்ததே
அவரது
கவித்துவத் தகைமை
எதுகை மோனை
தப்பாமல்
சந்தம் பிறளாமல்
தன் படைப்புக்களை
அற்புதமாகப் படைப்பார்
கற்றுத் தேறிய
பாவலரும்
ஆச்சரியப்படும் வகையில்
தன்ஆக்கங்களை
யாத்தவர்
இரா. அரசகேசரி அவர்கள்
ஓம் சாந்தி.... சாந்தி.....சாந்தி......

திரு.மு.பவளேந்திரன்
செக்கடி வீதி
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " அன்புக்குரிய எனது அன்பு அத்தான் "

எனது அத்தான் இரா.அரசகேசரி அவர்களது மறைவுச்செய்தி கேட்டதும் அதிர்ச்சியடைந்தேன் கண்கள் குளமாகின.

இளையதம்பி வாத்தியார் வைத்தியர் பரம்பரையின் மிகப்பெரிய சொத்து அரசகேசரி அத்தான் அச்சொத்து எம்மைவிட்டு அகன்றுவிட்டதே. வைத்தியத்துறையில் மட்டுமல்ல, கலைகலாசாரம், கல்வி, ஆத்மீகம் போன்றவற்றிலும் கொடி கட்டிப்பறந்தவர் இவர் என்றால் மிகையாகாது.

அக்கரைப்பற்றிலிருந்து ஊருக்கு வரும்வேளை இருவரும் மனம்விட்டுபேசுவோம் மகிழ்ச்சியில் மூழ்கிடுவோம். "அந்தநாள் ஞாபகம் எனது நெஞ்சிலே வந்துமிக வாட்டுகிறது". எங்கள் குடும்பம் 2 பெண்கள் 2 ஆண்கள் நாங்கள் தாயாரை சிறு வயதில் இழந்தோம். சிறிய தாயாரின் அணைப்பில் வளர்ந்தோம். எங்களை வளர்பபதில் அத்தானின் கவனமும் காணப்பட்டது. அப்போதெல்லாம் நான் சொற்கேளாது குழப்படிகள் செய்து திரிவேன்.

அத்தான் அழைத்து புத்திகள் கூறுவார் எங்களை திருத்த முயற்சிப்பார். திருத்தினார் படிப்புகள் விடயத்தில் கண்டிப்பாக இருப்பார்.

"சொற்கேளாப் பிள்ளை குலத்திற்கு ஈனம்"என்று பழமொழி பாட்டுபாடி புத்தி கூறுவார். பாட்டுப்பாடி பயன் கூறி புத்திமதிகள் கூறுவது இளைய வாத்தியார் பரம்பரைக்கு கை வந்த கலை. வீட்டுக்கு வரும்போது இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கிய கதைகளை கூறி எங்களை கதைகேட்க வைத்து அவரும் மகிழ்ச்சியடைவார்.

நாங்களும் அத்தானின் புத்திமதிகள் கேட்டு அன்புடன் பழகிவந்தோம். அவரை மதித்தும் நடந்தோம். எனது திருமணத்தையும் எனதுமூத்த சகோதரி காலஞ்சென்ற இராசநாயகி அவர்களுடன் சேர்ந்து நடாத்தி வைத்தார். அத்தானின் இழப்பு பேரிழப்பாகும். மரணச்சடங்கில் கலந்து கொண்ட போது மிகவும் வேதனை அடைந்தேன். இன்று நானும் சுகயீனமடைந்து கவலையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

"போனால் போகட்டும் போடா
பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாரடா"

அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

இ. இராசமாணிக்கம்
7/3 செம்பாய் போடியார் வீதி,
இலக்கியா இல்லம், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். இரா. அரசகேசரி அவர்களின் வரலாற்றுச் சுவடுகள்

" கலை உலக மாமலை சரிந்ததோ
கனிவுறு தேனிலும் இனிய குரல் ஓயந்ததோ
நிலையிலா இவ்வுலகில் நின்னுயிர் பிரிந்ததோ
நேய நெஞ்சத்து மஞ்ச மாமலர் உதிர்ந்ததோ "

உங்கள் வீட்டுத் திண்ணையும், மண்டபமும், முற்றத்து மல்லிகை வாசமும், வாசலும் நேசக்கரம் கூப்பி வரவேற்கும் கலைஞர்களை, பாசமலர்களாய் பவ்வியமாய் படைதிரளும் இங்கு கலைஞர் பட்டாளம், மரபுக்கலை வேந்தனின் மாசற்ற வழிகாட்டலோடு மாண்புற மகிழ்வுற பைந்தமிழ் பாசறையில் பயிற்சிகள் நடைபெறும்.

போரேறி பொலி குவியும் கோவில் போரதீவிலும் தேரேறி திருவிழா சிறக்கும் திருப்பழுகாமத்திலும், காரேறி மழை பொழியும் களுவாஞ்சி நகரிலும் மும்முடிச்சோழனாய் கலை உலகில் கோலோச்சியகோமான் அமரர்.இரா.அரசகேசரி அவர்கள். அன்னாரின் அளப்பரிய கலைப்பணி, கனிவுறு தமிழப்பணி சாகாவரம் பெற்ற சாதனை சுவடுகள்சரித்திரம சொல்லும் சாகசங்கள் எனும் கோசங்கள் இங்கு ஓங்கி ஒலிக்கின்றது.

இரா.அரசசேகரி அவர்கள் அழகு தமிழ் பேராசான் சீராய் செல்வமாய் செம்மொழி வளம் பெற்றவர் செம்பாவை கண்ணகி என செம்பவளவாயழகை சிலம்புடைத்த செல்வியை செப்பமுற செந்தமிழால் தீட்டிய ஓவியம்தான் கண்ணகிஅம்மன் காவடிப்பாடல்கள். வைகாசி மாதம் வளர்பிறைக்காலம் வாஞ்சியூர் மக்களின் மகிழ்ச்சிக்காலம் வஞ்சியாய் எங்கள் வாஞ்சியில் அமர்ந்தவள் திருச்சடங்கு சிறக்க பக்தர்கள் தேவை அறிந்து சேவை செய்த சீமான் செதுக்கிய சிற்பமோ கண்ணகி அம்மன் காவடிப் பாடல்கள் என எமக்கு எண்ணத்தோன்றுகின்றது.

பக்தர் குளாம் பத்தினியை பக்தி பொங்க மனமுருகி வழிபாடு செய்ய பாவலனார் பாடி வைத்த காவடிப்பாடல்கள் கானாமிர்த தேனமுதம் தேனாய் நாவினிக்கும் முக்கனி பஞ்சாமிர்தம் அருமையிலும் அருமை அமரர் அவர்கள் தமிழ்புலமை இமயம் தொட்ட இலச்சினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வாயோ சுந்தரத்தமிழா! சுவை சொட்ட சுடாத பழமாய் பைந்தமிழ் பாமாலை தந்த பாவலனே சுறுசுறுப்பின் இருப்பிடமே, சுதந்திர வானில் பவனிவந்த சுடரொளியே, வானத்து வண்ண நிலவாய் வள்ளலார் இரா.அரசகேசரியின் கலைப்படைப்புகள் உன்னதமாய் ஒளிர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

கண்ணகி வழக்குரை பாடுவதில் வல்லவனாய் வண்ணம் சேர்த்த வெல்லத்தமிழ் குரலோனும் நல்லதமிழ் கலையின் நாயகனும் நடுநாயகமாக ஆலயமண்டபத்தில் வீற்றிருந்து கானத காதையாய் கண்ணகி காப்பிய வரலாற்றை கானமழையாக பொழியும் அழகோ அலாதியானது. ஆண்டாண்டு காலமாக அண்ணலார் ஆற்றிய அறப்பணி போற்றுவதற்குரிய புனித நற்பணியாகும்.

கவுத்தன்வைத்தியன் காதல் சங்கமதில் பங்கய மாமலரோ பதிவிரதை உன்மனையாள் இராஜேஸ்வரி புடம்போட்ட தங்கம் புவிபோற்றும் அங்கம் கவுத்தன் வைத்தியன் குருசாமி - கனகம்மா குடும்ப நந்தவனத்தில் பூத்தமகள் பூவையவள் உன்தேவை அறிந்து சேவை செய்த பாவையவள் கலை உலகை உன்னோடு வலம்வந்த கலையரசி கலையரசனுக்கு ஏற்ற சிலையரசி மனையறம் மாண்புற மக்களைப்பெற்று மகிழ்வுற வாழவைத்து மணம்முடித்து வைத்து பேரப்பிள்ளைகளை கண்டு களிப்புற்ற கலைக்குடும்பம் களுவாஞ்சி மண்ணுக்கு பெருமை சேர்த்த கவுத்தன் வைத்தியன் காதல் குடும்பம் என்பதை கால வரலாறு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

"நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்" எனும் சொல்லுக்கமைவாக கலைச்செம்மல் குடும்மும் களைகட்டிக்கொண்டுதானிருக்கிறது. கணவனும் மனைவியும் மறைந்து போனாலும் உங்கள் வழித்தோன்றல்கள் ஊடாக கவுத்தன் வைத்தியன் காதல் சங்கமம் சங்கமமாகிக் கொண்டுதானிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்தாயின் காதல்மகன், களுவாஞ்சியின் கருணைமகன், கவுத்தன் மரபுக்குலக்கொழுந்தன், மரபுக்கலை வேந்தன் அமரர்.இரா.அரசகேசரி அவர்கள் சொல்லின் செல்வனாக சுந்தரத்தமிழனாக கலை கலாச்சார துறையில், கனிவுறு மருத்துவத்துறையில் கொடி கட்டிப்பறந்த கோமான் ஓர் வரலாற்று பொக்கிசமாகும்.

நாட்டுக்கூத்து நற்கலையின் பாட்டுக்கு ஒரு தலைவனாக ஆட்டுக்கொரு மருதியின் காதலனாக ஊட்டம் கொடுத்து உருக்கொடுத்து எமது ஊருக்கு பெருமை சேர்த்த பேராசான் இரா.அரசகேசரி அவர்கள் பட்டிருப்பு தொகுதியின் பட்டிதொட்டியெல்லாம் கட்டியம் கூறி கிராமியக்கலையின் மகிமையை மக்கள் மத்தியில் பறைசாற்றிய பாவலன் காவலன் நாவலன் அன்னார் அவர்கள் இளமைக்காலம் கலையுலகின் வசந்தகாலம் கற்கண்டுத்தமிழ் சொற்கொண்டு தேனமுதாய் கான மழை பொழிந்த கவிப்பெருமகனை களுவாஞ்சியின்முதல் கழகம் மூத்தகழகம் நீயு ஒிமம்பிக் விளையாட்டுக்கழகம் "மரபுக்கலை வேந்தன்" எனும் பட்டம் சூட்டி கௌரவித்தது. இது இவரது கலைப்பயண சாதனைக்கு கிடைத்த வேதனமாகும்.

கலை உலகின் இமாலய சாதனையாளனை இன்றைய இலக்கியவாதிகள் கவிஞர்கள் கலைஞர்கள் தங்கள் வழிகாட்டியாக திங்கள் முகத்திருமகனை போற்றி தமிழ்ப்பணி தொடர்வதை எம்மால் காணமுடிகிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணகை அம்மனை வேண்டி நிற்கின்றோம்

தங்கள் பிரிவால் துயருறும்
நியூ ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம்
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மைத்துவ கலைஞர்

அமரத்துவம் அடைந்துவிட்ட கலாபூசணம் இராசகேரி அரசகேசரி அவர்களின் மறைவையொட்டி அன்னாருக்கு இரங்கற் செய்தி எழுதுவதில் மட்டற்ற மனநிறைவு அடைவதோடு எண்ணற்ற மனவேதனையும் அடைகின்றோம்.

அன்னார் எமது கழகத்தின் ஆரம்பகால போசகராக இருந்து செயற்பட்டு எமது கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட ஒரு கழகத் தொண்டராவார்.

விசவைத்தியம், நாட்டுக்கூத்து, வில்லிசை, கரகம், நாடகம், ஆடற்கலை, கவிதை மட்டுமல்லாது கண்ணகை அம்மன் காவியம், வழக்குரை, அகவல், குளிர்த்திப்பாடல் ஆகிய துறைகளில் இப்பிரதேசத்தில் சாதனை படைத்த ஒரு பன்மைத்துவ கலைஞராக திகழ்ந்தார் என்பதனை சின்னஞ்சிறார்கள் கூட அறிவர்.

இருந்தும் அக்காலகட்டத்திலே அன்னாரை பாராட்டவோ, கௌரவிக்கவோ யாரும் எண்ணியதும் இல்லை. முன்வரவும்இல்லை இந்நிலை உணர்ந்த நாம் 1990ம் ஆண்டு அன்னாரின் கலைச்சேவையினைப் பாராட்டி "கலைச்செம்மல்" எனும் பட்டம் வழங்கி அன்னாரைக் கௌரவித்தோம். அன்னாரின் கலைத்திறனைப் பாராட்டி அன்னாரை முதன்முதலாக கௌரவித்தது எமது கழகம் என்ற பெருமையையும் நாம் பெற்றுக் கொண்டோம்.

" எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான் பிறவாய்
நுண்பொருள் காண்பது அறிவு "

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைவாக அன்னார் தான் சொல்லுவன எளிய பொருளுடையனவாக பிறர் மனதில் பதியுமாறு சொல்லிதான் பிறரிடம் கேட்டவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து செயலாற்றும் ஒரு நுண்ணறிவாளராவார்.

"கறந்தபால் மீண்டொருக்கால் தாய் மடியில் சேர்ந்ததில்லை
இறந்தவர்கள் மீண்டுமிந்த மானிலத்தில் வந்ததில்லை"

என்று எம்மனதைத் தேற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறிநிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
இளைஞர் முன்னேற்ற விளையாட்டுக்கழகம்
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைபதமடைந்த மரபுக்கலைக் காவலன் செந்தமிழ்ச்செம்மல் இரா. அரசகேசரி அவர்களுக்கு எமது இதயம் கசிந்த கண்ணீர்ப் பா

கலைவாணியின் ஒளியும் அன்னை கண்ணகித்தாயின் அருளும் நிறைந்து கரை புரண்டோடும் கங்கை நதியும் காவல் தெய்வங்களும் காட்சி தர வற்றாத கல்வியும் வானுயர்ந்த வரலாற்றுச் சிறப்பும் பெற்று "களுவாஞ்சி" தாயகத்தில் தடம் பதித்த தலைவன் தன்னிறைவு கண்டான்.

தேசம் போற்ற வாசகம் பரப்பி வானுலகு சென்றவனே வணங்குகின்றோம் பாசமும் நேசமும் பண்பும் அன்பும் உள்ளத்தால் நிறைந்து நின்றாய் பார் போற்ற பண்ணிசைத்து பாண்டித்தியம் பெற்றவனே பறந்துவிட்டாய் மரபு காத்த மன்னவனே மறைந்துவிட்டாய் உனை மண்டியிட்டு வணங்குகின்றோம்.

காவிய நாயகனாக களத்திலே நின்று கலைபரப்பி சிலையாகி விட்டாய். மலைபோன்ற ஆக்கங்கள் தலைதூக்கி நிலைகொண்டு நிணலாகி விட்டது. முத்தமிழையும் கற்று முத்தமிட்டு வித்திட்ட வீரமகனே விரைந்துவிட்டாய் விழியெல்லாம் கலங்குதையா விண்ணிலே நீடு வாழ விழிக்கின்றோம்.

குலமகனாய்ப் பிறந்து குலம் காத்து நின்ற குலவிளக்கே. தாயகம் வருவோர்க்கு தாகம் தீர்த்து தர்மம்காத்து நின்றவனே அகந்தையை அழித்து ஆணவத்தை அடக்கி அறம் காத்து அகம் மகிழ்ந்தாய் மங்காப் புகழோடு மறுமலர்ச்சி கண்டவனே மாயமாய் பறந்துவிட்டாய்.

உதயதாரகைக்கு ஊன்றுகோலாய் நின்று சான்றுகள் படைத்தவனே நாட்டுக்கூத்துக்களை நயம்பெற எழுதி மகுடம் சூட்டி மகிழ்வித்தாய். சாதனைகள்படைத்து சரித்திரத்தில் பதிவாகி சங்கமித்துவிட்ட தலைவா! வேதனையால் தவிக்கின்றோம் மீண்டும் ஒரு தடவை விரைந்து வரமாட்டாயா?

முத்தமிழ் வித்தகன், கலைச்சுடர்<br>ஐயா அரசகேசரி அவர்கட்கு<br>உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்<br>உதயதாரகை கலை விளையாட்டுக்கழகம்<br>கோவில்போரதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவமடைந்த அண்ணல்
## இரா. அரசகேசரி அண்ணன் அவர்கட்கு
## களுவாஞ்சிகுடி குமரன் கலா மன்றத்தினரின் புகழ்மாலை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மறைந்தும் மறையாத மா மனிதராய் திகழ்ந்தவரே
குறையேதும் காணாத குலக்கொழுந்தாய் வாழ்ந்தவரே
மங்காத மணிவிளக்கே மாசற்ற மலர்ச்சரமே.
சங்கத்தமிழ் சொல்லெடுத்து கவிபாடும் கலைஅரசே
வைத்தியனார் குடிமகவை கரம் பித்து விச வைத்தியராக பெயர் பெற்றவரே
பெரிய கவுத்தன் குடி மரபில் பிறந்து அழப்பெரும் சேவைகள் எம் ஊருக்கு செய்தவரே
கலையென்றால் அக்கலைக்கு அரசன் நீயே
உமக்கு நாம் சிலைவைத்து பார்ப்பதில்என்ன குறை
கூத்தென்ன கும்பிப்பாடலென்ன நாடகமென்ன
நாட்டார் பாடலென்ன கண்ணகியம்மன்னைப் போற்றிப்பாடிய
காவடிச்சிந்து என்ன இத்தனையும் எம் செவிகளிலே
ஒலித்துக்கொண்டிருப்பதென்ன

கண்ணகியம்மன் ஆலய முன்றலிலே இராமாயணக்கூத்தினிலே இராவணணாக வேடமிட்டு நீங்கள் பாடும்போது யாரோ வெண்கலத்தில் அடிப்பது போன்று கணீரென்ற ஓசைஎழும். அவ்வோசையை பக்கத்திலுள்ள மருதமரத்திலிருந்து உறங்கிக்கொண்டிருந்த கிளிகளும் குயில்களும் ஏனைய பறவைகளும் விழித்தெழும்பி எம்மை விடவும் இம்மண்ணில் இனியகுரல் படைத்த மானிடர்களும் உள்ளனர் என உணர்ந்து அண்ணல் இரா.அரசகேசரியின் பாடலுக்கு அப்பறவைகளும் ரீங்காரமிட்டு பக்க வாத்தியம் செய்வதை என்றும் நாம் மறவோம்.

மீண்டும் ஓர் பிறவியெடுத்தால் எம் ஊரில் வந்து பிறந்திடையா
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தலைவர்
முருகுப்பிள்ளை கோபாலிங்கம்
குமரன்கலாமன்றம்
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுவாஞ்சிகுடியின் கனதியான காலக் கொடை அமரர் இரா.அரசகேசரி அவர்கள்.

வான் தொட்ட வங்கக் கடலும் மட்டு வாவியும் நிலை கொண்டு செல்வம் கொழிக்க, காலத்தால் அழியாக் கல்வியும் கலையும், பார்போற்றும் பண்பாட்டு விழுமியங்களும் நிறைந்திலங்கும் நற்பதியாம் களுவாஞ்சிகுடியின் கனதியான காலக் கொடையொன்று காலத்தால் கரைந்து கண்மூடிய அந்தக் காலை நேரச் செய்தி கேட்டதும் என் மனக்கண் முன்னே வந்துதித்த நினைவுகள்தானிது. வேளாவேளைக்கு வெண்நிறத் திருநீறனிந்த ஆர்ப்பாட்டமற்ற அமைதியான அவரது திருமுகமும், அவர் இயற்றிய செய்யுள்களும், ஆலயங்களில் பாடிய பாடல்களும், வில்லுப்பாட்டுக்களும், எழுதிய கட்டுரைகளும், களுவாஞ்சிகுடியின் வரலாறு கூறும் கலைக் களஞ்சியமும், ஆடிய கூத்துக்களும் அரங்கேற்றிய கூத்துக்களும், நடித்த நாடகங்களும் நெறிப்படுத்திய நாடகங்களும், கலைச்செம்மல், மரபுக்கலைவேந்தன் என அவர் பெற்ற பல பட்டங்களும், விஷவைத்தியராய் வினை தீர்த்த காட்சிகளுமாய் எத்தனை எத்தனை ஆளுமைகள் அண்ணன் அரசகேசரி அவர்களிடம்.

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் அவரொரு காரியாலயப் பணியாளர் என்ற வகையிலும் ஊரவர் என்ற வகையிலும் அவருடன் எனக்கு சிறு அறிமுகமும் தொடர்பும் அங்கே நான் படித்த ஆரம்ப காலத்தில் இருந்தது. 1975களின் பின்னரான காலப் பகுதிகளிலே அவருடனான தொடர்புகளும் நெருக்கமும் அதிகரித்தது. அக்காலங்களில் கண்ணகை அம்மன் திருச்சடங்குகள் நடைபெறும் போது ஆலயத்திலே கலை நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கமாகும். அதில் மிக முக்கியமாக மேடை நாடகங்கள் இடம்பெறும். அவ்வாறான நாடகங்களில் நடிப்பதற்கான வாய்ப்புக்கள் எனக்கும் கிடைத்திருந்தது. அரசகேசரி அண்ணனின் வீட்டு மண்டபத்திலேதான் நாங்கள் நாடகங்களைப் பழகுவது வழக்கமாகும். கொப்பி பார்த்து எங்களை நெறிப்படுத்துபவராக அரசகேரி அண்ணன் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளேந்திரன் அண்ணன், அமரர் சுப்பிரமணியம், மகேந்திரன் (டீயு இராசலிங்கம் அவர்களின் தம்பி) இவ்வாறு பலர் அங்கு சென்று நாடகம் பழகுவோம். மின்சார வசதியற்ற அக்காலத்தில் அரசகேசரி அண்ணனின் மனைவி இராஜேஸ்வரி அவர்கள் குப்பிலாம்புகளை கொழுத்தி வைத்து எங்களை ஊக்கப்படுத்தி உறுதுணையாக இருப்பார். இவரும் அரசகேசரி அவர்களுடன் இணைந்து பல நாடகங்களை நடித்து பலரின் பாராட்டினையும் பரிசில்களையும் பெற்றதாக அறிந்திருக்கின்றேன். மகேந்திரன் தாயாகவும் நான் மகளாகவும் ஒரு காசிய நாடகத்தில் நடித்தோம். மகேந்திரனின் குரல் பெண் குரலுக்கு மிகப் பொருத்தமாக இருந்ததாலும் அரசகேசரி அவர்களின் சிறந்த நெறிப்படுத்தலாலும் அந்த நாடகம் அனைவரினதும் பாராட்டினைப் பெற்றது. இதே போன்று பவளேந்திரன் அண்ணன், அமரர் சுப்பிரமணியம் போன்றோர் வரலாற்று நாடகம் ஒன்றில் நடித்தார்கள். இந்த நாடகமும் அக்காலத்தில் அனைவராலும் புகழ்ந்து பேசப்பட்டது. இவ்வாறாக அரசகேசரி அவர்களுடனான தொடர்புகள் தொடர்ந்தன.

பின்னர் அவரின் இளைய மகள் எனது மகளுடன் படித்ததனால் அந்த நெருக்கம் மேலும் தொடர்ந்திருந்தது. இதே போன்று எனது அன்பிற்கும் மரியாதைக்குமுரிய மைத்துனர் பரமானந்தராஜா அவர்களின் குடும்பத்துடனான திருமணபந்தம் ஒன்றின் மூலமாக இந்த தொடர்பும் உறவும் மிக நெருக்கமானது.

இவர் மட்டுமல்லாது இவரது தந்தை, தாய். பாட்டன், பூட்டன் என அனைவரும் வைத்தியப் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவே இருந்துள்ளனர். இதே போன்று இவரது சகோதரர்களும் சிறந்த கலைப் படைப்பாற்றல் கொண்டவர்கள் என்பது நாம் அறிந்ததே. எனது சிறுபராயத்தில் இருந்தே எங்கள் வீட்டு சாமியறையில் தகதகவென யொலித்துக் கொண்டு இறையருள் தந்த பெரிய பிள்ளையார் படம் ஒன்று இருந்தது. அது போன்ற அம்சமுள்ள படத்தை நான் இதுவரையில் காணவில்லை. இந்தப் படத்தை வரைந்தது புவனகேசரி அவர்கள் என்று அம்மா சொல்லுவார். இந்தப் புவனகேசரி அவர்களும் அரசகேசரி அவர்களின் சகோதரர்தான் என்பதை பிற்பட்ட காலங்களில்தான் நான் அறிந்து கொண்டேன். 1990 ஆம் ஆண்டு வன்செயலில் நாங்கள் இழந்த பெறுமதி மிகு சொத்துக்களில் இப்படமும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகேசரி அண்ணனின் அமரத்துவ இழப்பானது அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி களுவாஞ்சிகுடி கிராமத்திற்கும், அதற்கும் மேலாக எமது ஒட்டு மொத்தப் பிரதேசத்திற்குமான பேரிழப்பாகும். அவர் தனது அரச பதவி மூலமாகப் பெற்ற வருமானத்தைத் தவிர தனது விஷவைத்தியத்திற்கோ அல்லது தனது கலைப் பணிகளுக்கோ எந்தவித கொடுப்பனவுகளையும் பெறாதவராகவே இறுதிவரை வாழ்ந்தார். இவற்றையெல்லாம் ஒரு தொழிலாகச் செய்திருந்தால் பொருளாதாரத்தில் மேம்பட்ட ஒருவராக வாழ்ந்திருக்க முடியும். இவரது படைப்புக்களில் "களுவாஞ்சிகுடி கலைக் களஞ்சியம்" எனும் நூலிலே களுவாஞ்சிகுடியின் வரலாற்றை பதிவு செய்துள்ளார். இதனை எல்லோராலும் செய்ய முடியாது. இன்று நாம் வரலாறு தெரிந்த பெறுமதி மிகு முதிசம் ஒன்றை இழந்து நிக்கின்றோம். இந்த பன்முக ஆளுமையாளனின் இடைவெளியினை இனி நிரப்ப முடியுமா? என்ற கேள்வி எனக்குள்ளே தொக்கி நிக்கின்றது. இதே போன்று இந்த ஆளுமைகள் இளம் சந்ததியினரிடையே எடுத்துச் செல்லவில்லை என்ற ஆதங்கமும் எனக்குள்ளே ஆழப்பதிந்து கிடக்கின்றது.

எத்தகைய துன்பங்கள் நேர்ந்தாலும் எவரொருவர் தனது கொள்கையிலும், தனது வாழ்க்கை வழிமுறைகளிலும் இருந்து திசை மாறாது பயணிக்கின்றாரோ, இதே போன்று காலத்தால் அழியாத கனதியான போற்றுதற்குரிய சுவடுகளை தனது சமூகத்தின் நன்மைக்காக விட்டுச் செல்கின்றாரோ அவரே வைத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவராவார். அவரே வானுறையும் தெய்வத்தின் திருப்பாதங்களைத் தரிசிப்பவராவார். அமரர் அரசகேசரி அவர்களின் ஆத்மா நிச்சயம் இறையடி சேரும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!.

சைவப்புரவலர், தேசகீர்த்தி வி.ரஞ்சிதமூர்த்தி,
தலைவர்,
மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பழுகாமம் பாஞ்சாலிக்கலைக்கழகத்தின் நினைவேந்தல் மடல்

திருப்பழுகாமம் பாஞ்சாலி கலைக்கழகம் சார்ந்து அமரர்.இரா.அரசகேசி அவர்களின் கலைசார்ந்த நினைவுகளை இங்கே பகிர்ந்து கொள்கின்றோம்.

" தேடிச்சோறுநிதம் தின்று- பல
சின்னஞ்சிறுகதைகள் பேசி
வாடித்துன்பமிக உழன்று - பலர்
வாடப்பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவமெய்தி
வாடப்பல செயல்கள் செய்து - நரை
கொடுங்கூற்றுக் கிரையெனப் பின்பாயும் - பல
வேடிக்கை மனதாரைப் போலே நானும்
வீழ்வேன் என்று நினைத்தாயோ "

என்ற பாரதியார் கூற்றுக்கிணங்க எங்கள் இரா. அரசகேசரி கூத்துக்கலை ஞானி வீழவில்லை என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எம்மிடையே.

இவர் எங்கள் பாஞ்சாலிக்கலைக்கழகத்துடன் இணைந்து செய்த பணிகள் அளப்பரியது. அரசசேகரி அவ்களின் படைப்புக்களான சிறுத்தொண்டன் அல்லது பிள்ளைக்கறி, மயானம் காத்த மா மன்னன் அல்லது அரிச்சந்திரன், கும்பகர்ணன், வதம், சத்திவான் சாவித்திரி மற்றும் நெல்லுக்குத்து நடனம் முதலிய பல படைப்புக்களை பாஞ்சாலிக் கலைக்கழகம் பயிற்றுவித்து மேடையேற்ற எமக்களித்தாய்.

இடையிடையே மரபுக்கலைக் காவலர்கள் கலைச்சுடர் தணிகா மற்றும் பொன் தங்கராசாவுடன் இணைந்து ஆடி அரங்கேற்றி அளிக்கை பல செய்தீர்கள். பின்தொடர்ந்த எங்கள் கலைஞர்களை உங்கள் வழிகாட்டலில் ஆசிரியர்கள், அதிபர்கள், கலைஞர்கள் என உள்வாங்கப்பட்ட எமது கழகம் பல கூத்துக்களையும் கலைகளையும் படைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் ஆசீர்வாதம் தன்னைத் துணைக்கொண்டு நாங்கள் உங்கள் படைப்புக்களை மேடையேற்றி வந்தோம். நீங்கள் ஒரு படைப்பாளி என்பதை மறந்து விடுவீர்கள். சாதாரண கலைஞனாக எம்முடன் வலம்வந்தீர்கள் உங்களது சிறுதொண்டன் கூடத்தில்

" தம்பி நீ யாரோ
தயங்காமல் கூறுவாய் நீயே
நம்பியே கூறுவாய்
நடுங்குதே என்னுள்ளம் "

எனப்படும் போது பார்ப்பவர் உள்ளங்களும் நடுங்கும். அதில் நீங்கள் சிறுதொண்டன் கலைச்சுடர் தணிகாசலம். மரபுக்கலைக் காவலன் பொன் தங்கராசா சிறுதொண்டனின் மனைவி தங்கை இக்கூத்தில் பலரும் சிறுத்தொண்டனின் மகன் சீராளமாக நடித்திருக்கின்றார்கள். அன்னாரின் அனுபவங்களை இம்மடல் மூலம் பகிர்ந்து கொண்டிருக்கும் நானும் இதில் நடித்திருந்தேன்.

மற்றொரு சம்பவத்தையும் ஞாபகப்படுத்த வேண்டும். அவர் எழுதிய மளானம் காத்த மாமன்னன் கூத்து அது எனது சிறுவயதில் இருந்து ஆடி வந்தததை பார்த்திருக்கிறேன். அதில் நானும் தேவதாஸனாக நடித்தேன். உதயகுமார் சந்திரமதியாகவும் யோகேஸ்வரன் அதிபர் அரிச்சந்தரனாகவும் நடித்தார். களுவாஞ்சிகுடி வீரபத்திரர் ஆலய முன்றலில் அரங்கேற்றவேண்டும். காவலாளிக்கு நடித்த மாணிக்கன் என்பவர் வெளிநாடு சென்றுவிட்டார். கலைச்சுடர் தணிகா பின்னணி எனவே காவலாளி பாத்திரத்துக்கு அவரே வந்தார்.

" வெஞ்சினம் கொண்ட வேந்தன்
விரைவில் சுடலைதனில் கொல்க என்றான் "

என்ற பாடலைப்பாடி சந்திரமதியை கோபத்தோடு இழுத்தெறிந்த காட்சி இன்னும் மனதை விட்டு மறையவில்லை. அவர்களோடு வாழ்கிறார்.

அரசகேசரி அவர்களின் எங்களுடன் இணைந்த கலைப்பயணம் பற்றி எழுதுவதாயின் ஓரிருபக்கங்களில் உள்ளடக்கமுடியாது.அது ஒரு நூலாக அல்ல பல நூலாக அமையும் அனுபவங்களாகும். தேவை கருதி என்பது அனுபவங்களை இங்கு பதிவிடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வாழ்ந்த வாழ்வு மூன்று வகைப்பட்டது. கலை சார்ந்தது, வைத்தியம் சார்ந்தது, ஆன்மீகம் சார்ந்தது. இம்மூன்று வாழ்வியல்களையும் முழு மூச்சாய் கொண்டு வாழ்ந்து பிரதேச எல்லைகள் தாண்டி தன் பெயரை நிலை நிறுத்தி என்றும் எவர் மனதிலும் நீங்காமல் நிலைத்திருக்கும் எங்கள் மனிதம் நிறைந்த கலையுள்ளம்.

இரா. அரசகேசரி அவர்களின் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் இத்தருணத்தில் அவரது ஆக்கங்கள் அனைத்தும் வெளிவரவேண்டும் எனும் ஆசையுடன் அவரது ஒரு கூத்துப்பாடல் ஒன்றினை உதாரணம் காட்டி விடைபெறுகின்றேன்.

இது கும்பகர்ணன் வதம் எனும் அவரது கூத்தில் வரும் கும்பகர்ணனின் பாடல்,

" கடலலை யென இரு விழியும்
மழையெனவே உடல்லதுவும்
கடியரவு நுழை செவியினோன்
படை பொருதும் பலமுடையோன்
பரமனருள் பெற்று நிதம்
பகல்முழுதும் துயில் கொள்ளுவேன் "

இழப்பின் துயரால்வாடும்
பாஞ்சாலிக்கலைக்கழகம்சார்பாக
முன்னாள் தலைவர் த. வைரலாதன்
தலைவர். தி. ஏகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சீவி சரிந்தது

கன்னலும் செந்நெல்லும் வளங்கொழிக்கும் நந்நகராம் களுவாஞ்சிகுடியில் வள்ளல் குடும்பத்தில் அவதரித்த திருமகனே பெருமைமிகு வைத்தியச் சஞ்சீவி அரசகேசரிப் பெருந்தகை ஆவார். தமிழுக்கும், சமயத்துக்கும் ஏன் நம் சமூகத்துக்கும் நற் பெருஞ் சேவைசெய்து, இப்பகுதி மட்டுமன்றி உலகோராலே பாராட்டப்பெற்ற இப் பெருமகனாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாது.

களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த இராசகேசரி முத்தம்மா தம்பதிக்கு 1942ம் ஆண்டு அவதரித்து, தமது ஊரிலேயே க.பொ.த. சாதாரண தரம்வரை கல்வி கற்று, மட் பட்டிருப்பு.ம.ம.வியில் அரச சேவை புரிந்ததோடு, அழியாத சேவைகளையும் செய்துள்ளார். இப்பாடசாலையில் விரைவாகத் தட்டச்சுப் பொறி செய்வதில் மிகவும் வல்லுநராக இருந்து, அலுவலகத் தொண்டினை மிகச் சிறப்பாகச் செய்து அதிபராலும் அலுவலகங்களாலும் பாராட்டப் பெற்றார். ஒருநாள் அவர் தட்டச்சு செய்துகொண்டிருக்கும்போது பண்டிதர் கந்தையா அவர்கள் வந்து என்னை விசாரித்தபோது, நால்வகைப் பாக்களிலும் வல்லவர் என்றும், தமிழ் சம்பந்தமான எச் செயற்பாட்டுக்கும் இவரே முன்னின்று நடாத்துபவர் என்றும் அறிமுகமாக்கியதோடு, அவரால் பலவினாக்கள் கேட்கப்பட்டுப் பெருமை கிடைப்பதற்குக் காரணமாயிருந்தவர் இப் பெருமகன்ராவார்.

வீட்டில் தமக்குக் கிடைக்கின்ற நேரங்களில் நாடகம், நாட்டுக்கூத்து, கும்மி, கோலாட்டம், கவிதை முதலிய ஆக்கங்களை எழுதி வந்தார். இவ்வாக்கங்கள் சம்பந்தமாக, எவர் வந்து அறிவுரை கேட்டாலும், ஆக்கங்கள் எழுதிக் கேட்டாலும் காலந் தாழ்த்தாது எழுதிக்கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்துவார். துள்ளலோசை, தூங்கலோசை முதலிய பாவகைகளில் பாட்டு எழுதுவதென்றால் அவருக்கு மிகப் பிரியம். இதனால் பண்டிதர்கள், அறிஞர்களது பாராட்டையும், பேரையும் பெற்றிருந்தார். அத்தோடு, இவருக்கு மரபுக்கலை வேந்தன், கலைச்செம்மல், கவிக்குயில், கலைக் காவலன் முதலான பட்டங்களும் வழங்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972ஆம் ஆண்டு இராசேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்த நாளில் இருந்து, இருவரும் கலைத்துறைக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இவரைப் போலவே இவர்களது மக்களும் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்து விளங்குவதோடு, அவர்களைக் கரம்பற்றிய மணாளர்களும் இந்நாட்டிலும், லண்டன் மாநகரிலும் புகழுடன் வாழ்கின்றனர்.

அமரர் அவர்களும் அவரது பாரியாரும் கணவன் மனைவியாக சேர்ந்து நடித்த நாடகங்கள், கவிதை நாடகங்கள் அநேகம். இங்கு மட்டுமன்றி, போரதீவு.பழுகாமம் மண்டூர் வெல்லாவெளி முதலான இடங்களுக்கும் சென்று, 12 க்கு மேற்பட்ட நாடகங்களையும், 10க்கு மேற்பட்ட கூத்துக்களையும் பழக்கி இப்பகுதி மக்களால் பாராட்டப்பெற்று, இக் களுவாஞ்சி நகருக்குப் பெருமை தேடித்தந்தவராவார்.

அவர் நடித்த நாடகங்களாக, வெற்றித்திலகம், சிறுத்தெண்டர், திருநீற்றின் பெருமை, எல்லாளன் முதலிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கதோடு, வெளியிடப்படாத ஆக்கங்கள் அநேகம். இதற்கு இதர உதவிகள் இல்லாமையே காரணமாகும். இவ்வாக்கங்களைக் கலாசாரப் பிரிவோ அன்றித் தனவான்களோ தேடிப் பெற்று வெளியிட்டால் அது பலவகையில் நம் சமுதாயத்துக்குப் பயனளிக்கும்.

கவுத்தன் குடிமரபில் தோன்றிய இவர் தம்மவர்க்கு மட்டுமன்றி ஏனைய குடிமக்களுக்கும் சேவைசெய்தார். ஆங்கில வைத்தியம் குறைவாக இருந்த அக்காலத்தில் சகல நோய்களுக்கும் கைநாடி பிடித்து இலவசமாக நாட்டு வைத்தியம் செய்து வந்ததோடு, பாம்பு தீண்டியவர்களுக்கும் தூதன் குறி சொல்லி இன்ன பாம்பு என அறிந்து, எந்த இடமாயினும் அவரவர் காலடிக்குச் சென்று விடியவிடியக் கண்விழித்திருந்து அதற்கான மருத்துவம் செய்து அவர்களைக் காப்பாற்றிப் பேரெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமட்டுமன்றி, சமயப்பணியில் இவர் செய்த சேவையும் அளப்பரியதாகும். எந்த ஆலயத்தில் உற்சவங்கள் வந்தாலும் அங்கு சென்று பணிபுரிவதில் வல்லவராயிருந்தார். பிள்ளையார் கதை, கந்தபுராணப்படிப்பு, ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம் முதலான கதைகளைப் படித்து அவற்றுக்குப் பொருள் விளக்கம் கூறியும் வந்தார். இவரது நற்பணிகளைச் சொல்லில் வடிப்பதாயின் சொல்லிக்கொண்டே போகலாம். ஆயினும் இப்பெருமகனாரின் இழப்பு எங்கள் தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறையருளை வேண்டி நிற்கிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

இங்ஙனம், பிரிவால்
துயருறும்

பண்டிதர். திரு.தா.கோபாலகிருஷ்ணன் M.A.
சமாதான நீதவான்,சமாதானப் பிரதிநிதி,
குமரன் வீதி, களுவாஞ்சிகுடி. 08.

**நான் என்ற அகந்தை அழிச்சு எப்போதும் இயல்பாய்**
**உள்ள ஆன்மாவைத் தெரிந்து கொள்வது எதுவோ**
**அதுவே உன்னதமான தவம்**

**- ஸ்ரீ ரமண மகரிஷி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுக்கலை வேந்தனின் மணிமுடி சரிந்தது

கும்பகர்ணன் வதை எனும் நாட்டுக்கூத்தில் தம்பி கும்பகர்ணன் அண்ணன் இராவணனை சந்திக்கின்ற சந்தர்ப்பத்தை சுந்தரத்தமிழில் எடுத்து சுவைபடவே சொல்லருவியாய் ஓடவிட்ட விருத்தப்பா வீறுகொண்ட வெண்பாவாக வித்தகரும் முத்தமிழில் முழக்கமாய் முழங்கியிருக்கிறார். பேனா முனையினூடாக தேனாயினிக்க தேமதுர தமிழப்பா பாடியிருக்கிறார். அவனிபோற்ற பவனி வந்த கும்பகர்ணன் வீருத்தம் வீரவரலாறு படைத்த சாதனையாளரின் சாகசங்களை வர்ணிக்க வாஞ்சியின் மைந்தன் மரபுக்கலை வேந்தன் பயன்படுத்திய விருத்தத்தின் சிறப்பை பார்ப்போம்!

### விருத்தம்

கும்பகர்ணன் இராவணனை சந்தித்தல்
கும்பகர்ணன்

விண்ணெலாம் போற்றிடும் வேந்தனே வீரனே வீணைக்
கொடி பறக்க
மண்ணெலாம் ஆண்டிடும் மன்னனே மாதவா மணிமுடி
வென்ற கோவே
உண்ணவே உணவெல்லாம் வள்ளலாய்தந்திடும் உடன்
பிறப்பல்லவோ என்
அண்ணலே என்னை நீஅழைத்ததேன் செய்தியை
அன்புடன் அறைகுவீரே

அற்புதம் அற்புதம் விற்பனர் தீட்டிய சொற்பதங்கள் அத்தனையும் கற்பகத்தருக்களால் களைகட்டுகின்றது. வண்ணத் தமிழ் வாணனுக்கு வாழ்த்துக்கள். அடுத்து இலங்கைவேந்தனாம் இராவணனின் சீற்றமும் செயலையும் எடுத்து இயம்புகின்ற வார்த்தையின் வடிவங்கள் அத்தனையும் வனப்புறு கோலங்கள் பொங்கி எழுந்து பொரிந்து கொற்றவன் காட்டுகின்ற கட்டழகு தமிழ் அமுதம் ஒட்டகக்கூத்தனின் பொட்டலத்துப்பூவோ இரா. அரசகேசரியும் என எனக்கு தோன்றுகின்றது. இராவணனின் பேராண்மையின் சீரானவிருத்தத்தையும் அவதானிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

இராவணன் சீற்றம் (கும்பகர்ணனன்மீது)

அறிவுடை அமைச்சனே அறிவுரை கேட்டேனோ
ஆரடா உன்னைஇன்று
நெறிமுறை கேட்டேனே நீதியைகேட்டேனோ நீயும்
என் தம்பி தானோ
அறிஞானம் உன்தம்பி விபீடணன் குரங்கோடு அண்டிப்
பிழைப்பதற்கே
வெறிகொண்டு சென்றனன் வேண்டி நீயும் செல்
வீரமே துணை கொண்டு நான் வாழுவேனே

காலத்தால் அழியாதவன் கவிஞன் கலை உள்ளங்களில் சிலையாகிச் சிரிப்பவன் கவிஞன் நிலையாகி நிற்பவன் கலைஞன் இதற்கு அமைவாக கவிஞர், பாடகர், நடிகர், எழுத்தாளர், மருத்துவர் களுவாஞ்சித்தாயின் கலைக்கலசம் இரா.அரசகேசரி அவர்கள் மறையவில்லை மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்பது உண்மையாகும்.

வரலாறுகளை புரட்டி போடுகின்ற வைர வரிகளுக்கு சொந்தக்காரர் வாஞ்சியின் வாஞ்சைமிகு இரா. அரசகேசரி என்பது உண்மையாகும். கண்ணகி அம்மனின் பூவடியை தொழுது காவடிப்பா வடித்த கவிப்பேரரசின் வரிகள் ஒவ்வொன்றும் பழரசம் கருத்தாழம்மிக்க கனிரசம் காலத்தால் அழியாத பொக்கிசம் கலைச்செம்மல் அவர்களின் கலைப்பணி வாழ்க வாழ்க கவுத்தன் மரபு மரகதம் மாணிக்கம் என மாண்புறு கவிஞனை பாராட்டுகின்றேன். வீம்பு துளியும் இல்லா வெல்லத்தமிழ் சொல்லழகன் நல்லதமிழ்பணி செய்தவர் நாமம் வாழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர். இரா. அரசகேசரியால் பாடப்பட்ட அழியாச்சொத்தான கண்ணகி அம்மன் காவடிச்சிந்தில் ஒரு சிலவரிகள்**

உத்தமியே பத்தினியே உன்கணவன் கோவலனின்
உடல் பொருத்த உம்பர் தனை நினைந்தபோது
இத்தரையோர் அதிசயிக்க ஊசிநூலை
இறையருளால் கையதனில் பெற்றே அன்றே
செத்தவரை மீட்டு வரலாறு கேட்ட
தேவியே என் வினையைத் தீர்க்க முடியாதோ
எத்தனை நாள் ஏங்கினேன் உன் பாதம்காணேன்
எழிலரசி எனதருகில் வருகுவாயே!

இவர் கொலுவருகின்ற விதமும் கோலோச்சுகின்ற விதமும் கொக்கரித்து குமுறுகின்ற விதமும் குதிரையேறிதுள்ளுகின்ற வீரமும் என் மனதுக்குள் இன்றும் மத்தாப்பாய் விரிகிறது.

நடுநிசிநேரம் இருள் கவ்விக்கிடந்து நற் கலைஞனுக்காக இயற்கையும் அழுதது. பொழுதுகூட புலர மனமின்றி புலர்ந்தது. பொங்குமா கடல் அலை ஒலிக்கவில்லை பொன்மதி கண் விழிக்கவில்லை பொன்னகர் கஞவாஞ்சியின் கலைக்கோட்டத்துப் பேராசான் இரா. அரசகேசரியின் அமங்கலச் செய்தி அனைவர் காதுகளிலும் பேரிடியாக வீழ்ந்தது.

வேதனையில் வீழ்த்தப்பட்ட பட்டத்துக்கலை அரசனின் பட்டங்களும் பட்டயமும் சட்டங்களாய் சபையறியச் சிரித்தது. இவர் நடித்த பாத்திரப் படைப்புக்கள் கூட காத்திரமாய் முத்தமிழ் முத்திரைபதித்தது. அன்னாரின் ஆத்மா சாந்திக்காக கண்ணகை அம்பாளை பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

வாஞ்சியூர் சுந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கவொணா மாமனிதர்

அன்பில் இனியவரே அறிவில் பெருந்தகையே
துன்பமொன் றறியாத அரசகே சரியையா
தன்னலம் பாராது மன்னலம் காத்தீரே
துன்புற்று ஏங்குகிறோம் உங்கள் பிரிவாலே.

ஆண்டாண்டு சென்றாலும் உங்கள் பணியினால்
வேண்டிய மனிதனாய் மானுடத்துள் வாழ்ந்தீர்கள்
தூண்டா மணிவிளக்கே தூயவரே பெருநிதியே
காண்போமோ உம்மைநாம் காலனவன் செயலாலே.

இரவு பகலாக கண்விழித்து எவரேனும்
அரவம் தீண்டினும் அவர்நலம் வேண்டியே
கரவாது நன்மருந்து நல்கியே காத்தீர்கள்
திரமாகக் கவர்ந்தானே கண்கெட்ட காலனவன்.

ஈவதில் பெரியோய்நீ எங்கள் அருமருந்தே
தேவமொழி அறிவுரைத்து புத்திசாலி யாக்குவீர்கள்
பாவமற்றோ ராக்கினீரே காவலனே நம்பதிக்குப்
பூவுலகில் உம்மைப்போல் நற்சேவைக் காருண்டு.

உலகுபுகழ் பெரியோனே யாவருக்கும் இனியவன்நீ
தூல உடலெடுத்தாய் இலவசமாய் மருந்தளித்தாய்
நீலமிடற் றோன்போலச் சலமிலனாய் வாழ்ந்தோனே
நாலுதிக்கும் நின்புகழைப் புகழநாம் தேறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனமுற்ற நோயாளிக்கும் உவந்துநீ மருந்தளித்தாய்
மானமாய் இனம்வாழ தேனாகக் கவிபுனைந்தாய்
மேனனே நாடகம் கவிதையொடு கூத்துவகை
கானம் பிறழாது பழக்கிப்பண் பாடு காத்தாய்.

எங்கள் குலத்தரசே கவுத்தன்குடி ஏந்தலே
திங்கள் முகத்தரசே கலைமன்றங்க ளமைத்தீரே
இம்மாண் புறுவுலகில் சாம வரையும் மறவோமே
மங்காப் புகழுடனே எங்கும் நிறைந்திருப்பீர்.

ஏங்கித் தவிக்கின்றார் பண்டிதரும் பாமரரும்
வீங்குபுகழ் அரசே மரபுக் கலைவேந்தே
ஈங்குநாம் ஏங்க இரா ஜேஸ்வரியை அடைந்தாயோ
ஈசனவன் காப்பார் இறையுலகில் உங்களையே.

ஐயமிடும் நும்மனைவி சமயத்துக்கும் சமூகத்துக்கும்
தூயநற் சேவைசெய்து ஈருடலும் ஓருயிராய்
ஐயன் பணிசெய்து அன்பாக வாழ்ந்தீர்கள்
ஏயபுக ழோனேயங்கு ஐயன்பணி செய்வீரே.

ஒருவர்மீதும் பகையறியாய் உன்புத்தி மதியாலே
பெருமருந்து எமக்கெ
ல்லாம், வருவிருந்து நல்கிடுவாய்
பெருமகனே நீபயந்த மக்கள்மரு மக்களுமாய்ப்
பெருந்துயராய்க் கதறியழ மறலியவன் கவர்ந்தானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுவதில் வல்லவன்நீ சாதுவான நற்குணத்தோய்
தீதே யறியாத திருவுடைய பெருமகனே
ஈதேதான் வாழ்க்கையென பாடம் புகட்டிடுவாய்
காதவழி சென்றாயோ கணபதியைத் தேடிநீ.

ஔவிய வுலகினில் வாழ்ந்தது போதுமென
பௌவியமாய் மறைந்தாயோ நீபடித்த ஏடுகள்
ஒவ்வொன்றும் உமைநினைக்கும் கண்ணகை யேடுமுதல்
கௌமாரன் தந்திமுகன் மற்றுமுள்ள பாடல்களும்.

அஃகொடிய காலனவன் அழைத்ததன் காரணமென்
இஃகடிய வாழ்க்கை போதுனெ நினைத்தானோ
எஃகடிய வாழ்வெனினும் இறுதியுல கெய்தாயே
இஃதவத்தின் கணபதியின் நிழலிடத்தே வாழ்வாயே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம் பிரிவால் துயருறும்,
திரு.வ.சின்னராசா
(முன்னாள் அரச ஒப்பந்தகாரர்)
சக்கடத்தார் வீதி
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்முக ஆளுமை மிக்க வாஞ்சியூரின் சொத்து
## இ. அரசகேசரி ஐயா.......

களுவாஞ்சிகுடி கிராமத்தின் முதுசம் என்றும் வாழும் சொத்து பல்வேறுபட்ட துறைகளில் கால்பதித்து தனது இருப்பை நிலைநாட்டியவர் விசவைத்தியராக, கலை இலக்கிய படைப்பாளியாக, கலைஞராக, எழுத்தாளராக, சமயப் பற்றாளராக அவரது பல்துறை சார்ந்த ஆளுமை வெளிப்பாடுகளை காலா காலத்தில் அவர் பெற்றுக்கொண்ட விருதுகளும், பட்டங்களும் சான்று பகர்ந்து நிற்கின்றன.

தூதுவன் குறி கேட்டு விசவைத்தியம் பார்ப்பதிலும், கூத்துக்கலைஞராகவும், ஆசிரியராகவும் இருந்து அரங்கேற்றம் செய்வதிலும், பிள்ளையார் கதை படிப்பதிலும், வாதம் பித்தம் சிலேற்பமை நாடிகளுக்கு ஏற்ப 4444 நேர்களுக்கு மருத்துவம் செய்யும் மருத்துவ குறிப்புக்களை அறிந்து செயற்படுத்துவதிலும் கிராமத்து வரலாறுகளை அறிந்து நூலாக்கம் செய்வதிலும் அவருக்கு நிகராக இன்னும் ஒருவரும் பிறக்கவில்லை எனலாம்.

மட் /பட்/ பட்டிருப்பு மத்தியமகா வித்தியாலயத்தில் அவர் கடமை புரிந்த கால அனுபவங்களை என்னுடன் அடிக்கடி பகிர்ந்து கொள்வார். எனது பாடசாலை விடுகைப்பத்திரம் கூட அவரது நினைவுகளை மீட்டிப்பார்க்கத் தூண்டும் மேலும் பண்டைய புராண இதிகாசகதைகளை சுவைபட கூறுவதிலும் வேட்டையாடுவதிலும் வல்லவர் என்றால் மிகையில்லை.

ஒரு கலைஞரை வாழும்போதே வாழ்த்த வேண்டும் அப்போதுதான் சமூகத்திலுள்ள ஏனையோருக்கும் அவரது மதிப்பு சென்றடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது முதுத்துவமானி தமிழ் ஆய்வுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பயன்படுத்தப்படுகின்ற மரபு ரீதியான சம்பிராதாயங்கள் வழிபாடுகள் பேச்சுவழக்கு சொற்கள் என அவரிடம் இருந்து அதிக விடயங்களை ஓய்வு நேரங்களில் கேட்டு எழுதி தொகுத்து எழுதுகிறேன் அந்தவகையில் அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்.

நெருக்கத்து வெளி கண்டத்திலே
நேரிழையாள் கொய்தெடுத்த
பருவச்சம்பா நெல்லுக்குத்த
பாவையரே வாருங்கடி....
சக்கும் சுக்கும் சக்கும் சுக்கும்
சுக்கும் சக்கும் சுக்கும் சக்கும்

எனும் பாடல் வரிகள் இருக்கும் வரை அமரர் இ. அரசகேசரி ஐயாவும் எம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.

ஆ. கலாபராஜன்
பதில் உப அதிபர்
மட்/ பட்/பட்டிருப்பு ம.ம.வி தேசியபாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
1942
09
22



காலன் அழைப்பில்
2022
01
04

கருணாகச்சிகுடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
கலாபூசணம்

## அமரர் - இராசகேசரி அரசகேசரி

(விசைவைத்தியர், முன்னாள் பதிவாளர் (மட்/மட்/மட்டிருப்பு ம.ம.வி.தே.பா கருவாக்கேணி))
அவர்கள் 04.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசகேசரி முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும்
காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும்
காலஞ்சென்ற துரைசாமி - கண்ணம்மா மற்றும் காலஞ்சென்ற
பாக்கியராசா(முன்னாள் கி.த) மற்றும் கந்தசேன் (கி.த) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசம்மா,
தங்கம்மா ஆகியோரின் அன்பு சகோதரரும்
கவிதா, லலிதா (லண்டன்), கிருஷ்ண (லண்டன்), தங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும்
மோகன் (கட்டார்), சிவாகரன் (லண்டன்), விமலராஜ (லண்டன்), தூரணா, காலஞ்சென்றவர்களான
சதாசிவம், சுபாநாதன், சிவநாதன் மற்றும் சுதாகரன் (வர்த்தகர்),
சுபாநாதன் (லண்டன்) பாக்கியவேணி, தூக்ஷதா, நிவேதா (லண்டன்), துஷிந்தன (லண்டன்), அனுஷா,
துஷாரசன் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும்
காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஏரம்பமூர்த்தி, முத்துலட்சுமி, அருள்கேசரி மற்றும் யோகேஸ்வரி
ஆகியோரின் பாசமிகு சகோதரரும்
காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, [illegible](ஐ) இரட்ணசபாபதி, மற்றும் ஆனந்தசேகரு,
காலஞ்சென்றவர்களான கோவிந்தசேகரு, கோவிந்தசாமி, புஷ்பேந்திரன் மற்றும் காலஞ்சென்றவர்களான
[illegible], மகேஸ்வரன்(US) மற்றும் துரைசிங்கம், காலஞ்சென்ற மணிமேகலை மற்றும்
சிவரஞ்சனி, சிவாநந்தி, சிவகௌசல்(லண்டன்) சிவலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும்
[illegible], மதிகரமூர்த்தி, கலைமதி, மன்மதன், சசிமதி, வாணிதாசன், வாசுகி, துஸ்யந்தன்,
ஆகியோரின் பெரியப்பாவும்
காலஞ்சென்றவர்களான அழகம்மா, பரஞ்சோதி மற்றும் இரட்ணேஸ்வரி காலஞ்சென்றவர்களான
புவனகேசரி, தம்பிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும்
வெள்ளைச்சிப்பிள்ளை பொன்னம்பலம், சோமநாதன் புவனேஸ்வரி, வடிவேல் - நவமணி,
கந்தசாமி - மகாலெட்சுமி ஆகியோரின் சம்பந்தியும்
காலஞ்சென்றவர்களான அருணாசலம், தவராசா, ஏரம்பமூர்த்தி மற்றும் விநாயகமூர்த்தி, தங்கவேட்கை
காலஞ்சென்ற யோகராசா மற்றும் ஜெயமலர், அருள்ராசா,(அவுஸ்திரேலியா) ஆனந்தராசா,
ஸ்ரீமலர், ஜெயமலர், சாந்திமலர், ஜெயராஜன் (லண்டன்), ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும்
சுரீனா, அம்சவி, சஞ்சீனா, அக்சயன், கோபிஷன், ஆதவன், அக்ஷயா, ஆதவன்,
ஆகியோரின் அப்பப்பாவும்.

அன்னாரின் பூதவுடல் 2022.01.04 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல்
3.30 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்
செல்லப்பட்டு கருவாக்கேணி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.
அன்னாரின் இழப்பை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு
ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றார்கள் அன்னாரது குடும்பத்தினர்.

[illegible] - [illegible]

தகவல் - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதாதைகள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பாசத்தின் உறைவிடமாகவும்
எமது இல்லத்தின் ஒளிவிளக்காகவும்
இருந்து இறையடி சேர்ந்த
எங்கள் ஆருயிர்த்தெய்வம்
அமரர். இரா. அரசகேசரி அவர்களின்
பிரிவுச் செய்தி கேட்டு இல்லம் வந்து ஆறுதல்
கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து
கொண்டோருக்கும் தொலைத்தொடர்பு, முகநூல்,
மின்னஞ்சல், இணையத்தளம், பதாதைகள்,
துண்டுப்பிரசுரங்கள் மூலமாக அனுதாபங்கள்
தெரிவித்தோருக்கும், மற்றும் உணவுகள் வழங்கி உபசரித்த
நல்லுள்ளங்களுக்கும் மற்றும் சகலவழிகளிலும் உதவிகள்
புரிந்து எமது சோகத்தில் பங்கு கொண்ட உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் வாகனவசதிகள்
வழங்கியவர்களுக்கும் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தித்தவர்களுக்கும் இந்நூலை அழகாக வடிவமைத்து
தந்த நியு குட்வின் அச்சகத்தாருக்கும் எமது இதயம் கனிந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

மத்திய வீதி,
களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையில்....

சோம்பலும் செயலிழந்த நிலையும்
கோழைகளுக்கே உரியது
அவை உனக்கு வேண்டாம்.
பலவீனங்களைத் தூக்கியெறிந்து
வாழ்க்கைப் போராட்டத்துக்கு ஆயத்தமாகும்.
துக்கங்கள் ஏற்படுவது விதி என்று கருதி
அடிபணிகின்றவன் பாவம் செய்கின்றான்.
எதிர்ப்பைக் கண்டு அடிபணியாதே.
போராடக்கற்றுக்கொள்.
ஓடி ஒளிந்துகொள்வது
பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது.
எதுவந்தாலும் முனைப்போடு எதிர்கொள்.
உலகத்தைத் தலைகீழாக மாற்றக்கூடிய
சக்தி உனக்குண்டு. அதை வெளிக்கொண்டுவா.
இந்த தர்மயுத்தத்தை விட மேன்மைதரக்கூடியது
வேறு எதுவும் இல்லை.
இதில் உயிரை விடநேர்ந்தாலும் உயர்வேதான்.
தர்மயுத்தத்தில் இறக்கக்கூடியவனுக்கு உலகில்
எல்லாமே கிடைக்கும்.
கடமையில் இருந்து விலகுகின்றவன்
அனைத்தையும் இழக்கின்றான்.
செயலில் இறங்க ஆயத்தமில்லாத
தனிமனிதனும் சமுதாயமும் ஆபத்தை
வரவழைத்துக் கொள்கின்றன.
எனவே எழுந்து நில். எதிரிகளைத் தோற்கடித்து
வளமான இராஜபோகத்தை அனுபவி.
அழிவில்லாத வெற்றியை அடைவாய்.
நல்வாழ்வும் செல்வங்களும்
வீரனான உனக்கே உரியவை.





- பகவான் ஸ்ரீ கிருஷ்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org